Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 வெள்ளி - 11 06 - 12 - மே - 2005



## விழுப்புண் அடைந்த பெண் போராளிகளுக்கான மயூரி இல்லம்...






## எழுதுபவனை அழிப்பவர்கள் எழுதுபவனை அழிக்கவில்லை தங்களையே அழிக்கிறார்கள்...

## படித்ததில் பிடித்தது

# உன் நிலையும் என் நிலைபோலவா

நீயாரென்று தெரியவில்லை
என்றாலும் எனக்கு பேசவேண்டும்
கொஞ்ச நேரம் உன்னோடு

பேயின் கரங்களில் இருந்து
தப்பித்து வந்தவனுக்கு
பேச யார் கிடைத்தால் என்ன

இரத்தம் சொட்ட
எனது நாட்கள் வெட்டப்பட்டன
எவர் வந்தும்
ஏன் என்று கேட்கவில்லை.

என் வாழ்க்கையை புதைக்க
என்னையே குழிதோண்டும்படி
ஏவியவர்களிடமிருந்து
தப்பித்து வந்திருக்கிறேன்

தாறுமாறான
பாதைகள் மோதிச் சிதறிய
என்னை
ஒன்று சேர்த்து
அள்ளிக் கொண்டு ஓடிவந்தேன்
பயணத்தின் மீதியை
வைத்துக்கொள்ள முடியுமா

அநாதைகளான ஆசைகள்
எந்த ஆச்சிரமத்திலும்
சேரமுடியாது

கனவுகளின்
மங்கிய வண்ணங்களை
மலர்கள் மறுத்துவிடும்

தேம்பும் வெற்றிகள்
தேடிக்கொள்ளுமா
காயங்களோடு கதறும்
எனது
இலட்சியங்களை

எனது சுயமரியாதை
நொருக்கப்பட்ட போது
கோபத்தின் கடைசிக் கங்குகளைக்
காப்பாற்றிக் கொண்டுவருவதில்
கசங்கிப்போனேன் நான்

நீ யாரென்று தெரியவில்லை
என்றாலும் எனக்கு பேசவேண்டும்
கொஞ்சநேரம் உன்னோடு

சேறும் சகதியும்
இரத்தமும் என் கைகளில்
உன்னைத்
தொட்டுப் பேசட்டுமா
ஓ, ஓ இதென்ன
உன் கைகளும்
இப்படித்தானா?

உன் நிலையும்
என் நிலை போலவா
உணருகிறேன்.

ஆங்கிலத்தில்:-வாகீர்சீமா
தமிழில்:- இ.றஜித்

# காரசாரம்

பத்திரிகை உலகின் தொழிலாளர்கள் ஒருபோதும் விடுமுறை எடுப்பதில்லை. அவர்களுக்கு ஓய்வும் கிடையாது. இவர்களை நம்பித்தான் உலக செய்தித் தாபனங்கள் உள்ளன. பத்திரிகையாளர்கள் சகலகலா வல்லவர்களாகத் திகழவேண்டும். அதேசமயம், மானம், ரோசம், வெட்கம் இவற்றைக்கைவிட்டவர்களாகவும் இருக்கவேண்டும். துணிவு, பயிற்சி, விவேகம், வேகம் இவை இவர்களது உடலிலும் உணர்விலும் கலந்திருக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக தற்காலத்தின் பத்திரிகையாளர்கள் ஆய்வாளர்களாகவும், ஆரூடம் கூற வல்லோராகவும் துப்பறியும் நிபுணர்களாகவும் இருக்க வேண்டும். இவைகளுடன் தற்காலப் பத்திரிகை ஆய்வாளர்கள் போரியல் நிபுணர்களாகவும் சர்வதேச மட்டத்தில் போர் நடவடிக்கைகள், ஆயுதத்தயாரிப்புகள் போன்றவை அவற்றின் விற்பனை, கடத்தல், உற்பத்திகளின் அளவு என்ற பல்வேறு கோணங்களில் அறிவை வளர்த்துக்கொண்டுள்ளனர்.

அத்தகைய ஆய்வாளர்களுள்

இன்னும் என்ன விசாரணை வேண்டிக்கிடக்கிறது என்பதுதான் ஆச்சரியம்.

உங்களுக்குத் தெரியுமோ 'பத்திரிகையாளர் பாதுகாப்புச் சங்கம்' என்ற பெயரில் ஒரு தனி அமைப்பு நியூயோர்க்கில் உண்டு என்பதும் உலகின் எந்த மூலையில் பத்திரிகையாளர்களுக்குக் கொடுமை நடந்தாலும் அது சம்பந்தமான தகவல் அவர்களுக்குக் கிடைத்துவிடும் என்பதும் உலகமட்டத்தில் மிக மோசமாக ஊடகவியலாளர்கள் பாதிக்கப்பட்டது 1991இல்தான். ஏனெனில் இந்த வருடத்தில் உலகெங்கும் அறுபத்தாறு பத்திரிகையாளர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். ஆயிரத்து இருநூற்று அறுபத்து நான்கு பேர் கடும் தாக்குதலுக்கு உள்ளாகினர். முந்நூற்று இருபத்து நான்கு பேர் சிறைக்குள் தள்ளப்பட்டனர்.

இலங்கை அரசும் தன் பங்குக்கு சில பத்திரிகையாளர்களைச் சிறையிலிட்டும் ஒரு சிங்களப் பத்திரிகையாளரைக் கொன்றும் அக்கணக்கினுள் சேர்த்துள்ளது. உலகில் ஆக்கிரமிப்புகளுக்கெதிரான

காணப்படவில்லை.

பிரித்தானிய அடிமை முறைகளில் வருந்திய தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர்கள் பலர் இன்றில்லை. சிறைகளிலேயே அதிகமான வரலாற்று நூல்கள் எழுதப்பட்டுள்ளன என்பர். அந்த வகையில் 'மெயின்காம்ப்'' ஹிட்லரால் எழுதப்பட்டது. நேருவின் சுயசரிதை, தியாங்கே கூகியின் சிலுவையில் தொங்கும் சாத்தான், தூக்குமர நிழலில் தியாகு என அடுக்கிக்கொண்டு போனாலும் சிறையிலிருந்து எழுதப்பட்ட முதல் நூல் தமிழில்தான் வெளிவந்தது. ஆச்சரியம்வேண்டாம், நக்கீரன் எழுதிய திருமுருகாற்றுப்படைதான் வரலாற்றில் மூத்த சிறைப் பிறப்பு.

நல்லவேளையாக சிறிலங்காவின் சிறைகளில் இன்னும் அப்படியெதுவும் நடைபெறவில்லை. வருங்காலம் எப்படியோ வந்து விடலாம் என்பதன் அச்சப்பாட்டின் வெளிப்பாடே கைதுகள், விசாரணைகளில் நம்பிக்கையற்ற கொலைகள். திரு. நிமலராஜன், திரு.நடேசன், திரு.சிவராம் போன்றோரின் கொலைகளின் மூலம் இலங்கை ஆட்சியாளர் எதைச் சாதிக்கமுனைகின்றனர். இவற்றை நேரடியாக செய்யாது போனாலும் இவற்றுக்கான ஏற்பாடுகளை, ஆதரவை வழங்கி வருவதன் மர்மம் என்ன?

'உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியாது'

# தர்மம் நின்று கொல்லும்

உலகின் தலைசிறந்த ஆய்வாளர் தராகி. அரசியல்வாதிகள்போல இவர் தன் உயிரைக் காத்துக்கொள்ள ஓடி ஒளியவில்லை. மக்களுடைய வாக்குகளைப் பெற்றுக்கொண்டு நாடாளுமன்றத்துக்குப்போன, தமிழீழக்கோரிக்கையை முன்வைத்து வென்ற அரசியல்தலைவர்கள் தம் உயிரைக்காத்துக்கொள்ள இந்தியாவுக்கு ஓடிய போது வாக்களித்த மக்கள் இலங்கையில் வதைபட்டும், சிதைபட்டும் வாடினர். ஆனால் ஒரு பத்திரிகையாளர், தன்னைக் காத்துக்கொள்ள முயலாமல் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் ஒரு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார். இப்படியிருக்க, பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்களில் அகில உலக சம்பியனாக தன்னை உயர்த்தியவரும் இலங்கையின் சிங்கள அரசுக்கும் அதன் நீதித்துறைக்கும் ஒரு சபாஸ் போடத்தான் வேண்டும். பலாப்பழத்தைத் திருடியவன் அதை மூடிவைக்க முடியுமோ. ஊடகவியலாளர்களைக் கொலைசெய்வதும் அப்படித்தான். பலாப்பழத்தின் மணம் அதன் இருப்பைக் காட்டிவிடுதல்போல ஊடகவியலாளரின் செய்திகளின் போக்கு அவருடைய எதிரிகளைக் காட்டிக் கொடுத்துவிடும். 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்' என்பது போன்ற காவற்றுறை அதிகாரிகளால் ஒருபோதும் குற்றவாளிகளைப் பிடிக்க முடியாது என்றாலும் இலங்கை அரசின் தொடர்ச்சியான இயலாமைக்குக் காரணமில்லாமலும் இல்லை. மாமனிதர் குமார்பொன்னம்பலம் கொலையுண்டுபோகுமுன்பே அவரது மனைவிக்கு அனுதாபக் கடிதத்தை அடித்துவைத்தது போன்றே சிவராம் கொலையுண்ட செய்தியும் அவர் மனைவிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கடத்தப்பட்ட சிவராம் அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் கணிப்பிடக்கூடிய இடத்தில் சடலமாகக் கிடந்துள்ளார்.

போராட்டங்களை நடத்தும் சிறுபான்மை இனத்தவர்களே மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

கெயிட்டியில் ஒரு பத்திரிகை நிருபர் 'பொலிஸ் நிலையத்துக்குத் தீவைத்தார்' என்று குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். பின் ஒருவருடம் கழித்து அப்படி எதுவுமில்லை என்று விடுவிக்கப்பட்டார். மிகச் சுலபமாக இதை அறிவித்து அவரை விடுதலை செய்தாலும், சிறையில் பட்ட அடி, உதைகள் காரணமாக அவரால் நடக்கமுடியவில்லை. பாதி நாள் பட்டினி போடப்பட்டதால், வயிற்றுப்புண் ஏற்பட்டிருந்தது. இதேபோன்று இலங்கையில் ராவய, பி.பி.சி, சுதந்திரன் போன்ற பத்திரிகைகளின் நிருபர்கள், ஆசிரியர்கள் சிறையில் இருந்துள்ளனர். லிபிய நாட்டைச்சேர்ந்த அப்துல்லா அலி என்ற பத்திரிகையாளர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தைந்தில் சிறையிலடைக்கப்பட்டார். அவர் உயிருடன் இருக்கிறார் என்பதைத் தவிர அவரது குடும்பத்தினருக்கு அவரைப்பற்றி எதுவும் தெரியாது. இன்றுவரை குமாரோக்கோவைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர், ஒரு தொழிற்சங்கத் தலைவருக்குத் தண்டனை கொடுத்தது தவறு என்று ஒரு விமர்சனக்கட்டுரை எழுதினார். இதறகாக இவர் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டார்.

என்றாலும் வில்லேர் உழவனிலும் பார்க்க சொல்லேர் உழவன் வலிமையுள்ளவன். என்ற வாக்கு எவ்வளவு மெய்யோ அதே போன்று, உலகின் பயங்கரமான ஆயுதம் நாக்கும், பேனாமுனையும் தான் என்பதும் உண்மை. இப்படிப்பட்ட புத்திஜீவிகளை அழிப்பதில் அல்லது காணாமற்போக்குவதில் ஹிட்லரையும் மிஞ்சியது, சீனாதானாம். சீனாவின் டியெனன்மென் சதுக்கத்தில் நடந்த புரட்சியின்போது கைதான ஏறக்குறைய முப்பது பத்திரிகையாளர்கள் இன்று வரை

என்பர். இந்த ஊடகவியலாளர்களை அழித்து ஊர்வாயை மூட முயலும் அப்பாவிகளே! உங்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள். மக்கள் மனங்களை வெல்ல வகையறியாத பேதைகளே! ஒரு மாற்றியக்கத்தின் தளபதியாக இருந்து தன்னை மாற்றிக்கொண்டு மாமனிதரானவனின் வரலாறு அற்புதமானது மட்டுமல்ல, அங்கொரு அடிநாதமாகத் தமிழர்களின் அரவணைப்பு, நீதி, தர்மம் என்பவை உலகுக்குத் தெரிகிறது. தமிழ் மக்களுடைய உண்மையான தளபதியாக இருந்து தன்னை மாற்றிக்கொண்டு கடைகெட்டவனாகி எதிரிகளின் காலில் தஞ்சமென வீழ்ந்துகிடக்கும் ஒருவனையும் இந்தமண் சகித்துக் கொண்டிருக்கிறது. வரலாறு ஒருபோதும் மீள்வதுமில்லை.அது வளைந்துபோவதும் இல்லை. தூரோகத் தனங்களைச் சந்திக்காத எந்த நாடும், எந்தப் போராட்டமும் இருந்ததில்லை. இந்த வரையறைக்கு நாம் மட்டும் விதி விலக்கா என்ன? திரு. சிவராம் அவர்களின் வாக்குப்படி ஒரு நிமலராஜனையோ, ஒரு நடேசனையோ, ஒரு சிவராமையோ கொல்வதால் தமிழர்களின் ஒட்டுமொத்த குரல்வளையை நசுக்கமுடியாது. ஒன்றன் பின் ஒன்றாக ஓராயிரம் பத்திரிகையாளர் உருவாகுவதை யாரும் தடுக்க முடியாது. உலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவருவேன் என்ற அலெக்ஸாண்டரும் இனத தூய்மை செய்து ஆரியனே ஆளப் பிறந்தவன் என்று அகங்காரங் கொண்ட கிட்லரும் கூட நினைத்ததை முடிக்கவில்லை. பாவம் உலகம் முழுவதுமே எங்கள் காலடியில் என்பவர்கள் உலகத்தவர் காலடிக்குள் கேவலமான முறையில் உயிரை விட் டதே வரலாறு. தர்மம் நின்று கொல்லும்.

மாயா

# சிவராம்

நிலாந்தன்

2003 இல் கொழும்பில் ஹிரு கலைக்கூடலின்போது எனது உரைக்கு அடுத்ததாக சிவராம் உரையாற்றினார். அதில் அவர் எனது உரையை பெருமளவுக்கு வழிமொழிந்து மிகவும் கவர்ச்சியாகப் பேசினார். எனது பேச்சில் நான் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்... ''இலங்கைத்தீவில் இப்பொழுது இரண்டு மீடியாத்தளங்கள் உண்டு. ஒன்று கொழும்பு மையமீடியா, மற்றது தமிழ் மைய மீடியாத்தளம். ஈழப்போரின் வளர்ச்சியோடு சமாந்தரமாக வளர்ச்சிபெற்றுவரும் தமிழ் மீடியாத்தளம், கொழும்பு மைய மீடியாத்தளத்திலிருந்து துலக்கமான விதங்களில் வேறுபட்டு தனக்கேயான தனித்துவங்கள், நோக்குநிலைகள், நலன்கள், இலக்குகள் என்பவற்றோடு நன்கு ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. இது இப்பொழுது வன்னி, யாழ்ப்பாணம், கிழக்கு, புகலிட நாடுகள் என்று பரந்து விரிந்துவருகிறது. இதன் அடிப்படையில் கூறுமிடத்து அதாவது மீடியாத்தளங்களின் அடிப்படையில் கூறுமிடத்து இலங்கைத்தீவு ஏற்கனவே இரண்டாகப்பிளந்துவிட்டது. ஜி.எச்.ஃ.பாமர் கூறியது போல இலங்கைத்தீவு உளவியல் அர்த்தத்தில் ஏற்கனவே இரண்டாகப் பிளந்துவிட்டது''...... என்று.

என்னுடைய இந்தப் பேச்சை ஆதரித்துப்பேசிய சிவராம் பின்வரும் தொனிப்பட உரையாற்றினார்....

இலங்கைத்தீவில் உள்ள இரண்டு மீடியாத்தளங்களில் கொழும்பு மைய மீடியாத்தளத்தில் நிற்பவர்கள் நாம். சுமார் 13 ஆண்டுகளாக ஐலண்ட் பத்திரிகையில் எழுதி எழுதிக் களைத்துப்போய் அதிலிருந்து விலகினேன். அவர்கள் என்னை ஒரு ஆபரணம்போல பயன்படுத்தினார்களே தவிர, என்னுடைய எழுத்துக்களிலிருந்து எதையும் கற்றதாகத் தெரியவில்லை. இது காரணமாகவே ஐலண்டில் எழுதுவதை நிறுத்தினேன். ஆயினும் எமக்கு இங்கே நல்ல நண்பர்கள் உண்டு. தமிழ்நெற்றை ஆரம்பித்தபோது அதற்கு உதவி செய்தது சில சிங்கள நண்பர்களே என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டவேண்டும். எம்மை ஆதரித்துப் பாதுகாக்கும் நண்பர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். இங்கேதான் எமது தளம் இருக்கிறது. இனியும் இங்கேதான் நாம் நின்று இயங்குவோம். எப்பொழுது நாங்கள் இங்கே நின்று இயங்கமுடியாத நிலை தோன்றுகிறதோ, எப்பொழுது எங்களை இங்கிருந்து வன்னிக்குப போகுமாறு துரத்துகிறீர்களோ அப்பொழுது நிலாந்தன் கூறியதுபோல நாடு இரண்டாகப் பிரிந்துவிடும்.....'' என்று சிவராம் தனது உரையில் குறிப்பிட்டார்.

இன்று அவர் இல்லை. கொழும்பில் சிங்கள அறிஞர் குழாம் தன்னைப்பாதுகாக்கும் என்று நம்பிய கடைசித் தமிழனும் கொல்லப்பட்டுவிட்டான். எந்த மீடியாத்தளத்தில் தொடர்ந்தும் நின்று இயங்கப்போவதாக அவர் சூளுரைத்தாரோ அந்தத் தளத்தில் வைத்தே அவரைச் சுட்டு பற்றைகளுக்குள் வீசி எறிந்துவிட்டார்கள்.

அவருடைய வார்த்தைகளிலேயே சொன்னால் அவரைப் போன்றவர்கள் கொழும்பில் நின்று இயங்கமுடியாத ஒரு யதார்த்தம் அங்கே உருவாகி வருகிறது என்று அர்த்தம். அதாவது நாடு மேலும் மேலும் பிரிந்துகொண்டேவருகிறது என்று அர்த்தம்.

எந்த நம்பிக்கைகளின் நிமிர்த்தம் சிவராம் கொழும்பில் நின்று இயங்கினாரோ அந்த நம்பிக்கைகள் யாவும் பொய்யென்றாகிவிட்டது. அவர் தனது பலம் என்று எதைக்கருதினாரோ அதுவே அவரது பலவீனம் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. அவருக்கு இருந்த பிரபல்யம்; உலகளாவிய அறிமுகம்; மேல்மட்ட உறவுகள் இவற்றுடன் வெளிநாட்டுத்தூதரகங்களில் இராஜதந்திரவட்டாரங்களில் அவருக்கிருந்த செல்வாக்குபோன்றவற்றுடன் முக்கியமாகப் புலிகளுக்கெதிரான ஒரு மாற்று இயக்கத்திலிருந்து வந்தவர் என்ற ஒரு அடையாளம்போன்ற பலகாரணங்களினாலும் கொழும்பு தனக்குப் பாதுகாப்பானது என்று அவர் நம்பியிருந்திருக்கக்கூடும்.






தவிர அவருடைய பிரதான ஊடக மொழி ஆங்கிலமாய் இருந்ததால் அவர் கொழும்பில் நின்று இயங்குவது அவருடைய தொழிலைப் பொறுத்தவரை தவிர்க்கமுடியாததாக இருந்திருத்தல் கூடும்.

அவர் கொல்லப்பட்டபோது டயான் ஜெயதிலக்க அவருக்கு எழுதிய அஞ்சலிக்குறிப்பு ஒன்றே போதும். அவர் அவருடைய கொள்கை எதிரிகள் மத்தியிலும் எத்துணை செல்வாக்குமிக்கவராக; மதிக்கப்படுபவராகக் காணப்பட்டார்' என்பதை நிரூபிக்க.

அவர் கடத்தப்பட்ட செய்தி கேள்விப்பட்டதும் சண்டேரைம்சின் உதவி ஆசிரியர் ராஜ்பல் அபயநாயக்க உடனடியாக ராணுவத்தளபதி சாந்தகொட்டேகொடவுடன் தொடர்புகொண்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருக்கிறார். நவீன இனத்துவேசத்தை மிகவும் கவர்ச்சியாக எழுதும் ராஜ்பல் அபயநாயக்க சிவராமின் மிக நெருங்கிய நண்பர். சில மாதங்களுக்கு முன்பு சிவராமின் வீட்டை பொலிசார் சோதனை செய்தபோது ராஜ்பல் அபயநாயக்க சிவராமுடன் இருந்தார் என்பதை இங்கே சுட்டிக்காட்டவேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப்பின் குறிப்பாக கருணாவின் விவகாரத்துக்குப் பின் சிவராம் எடுத்த தீவிர நிலைப்பாட்டிற்கு முழுக்க முழுக்க எதிரானவர்களே கொழும்பில் அவருடைய மிக நெருங்கிய நண்பர்களாகக் காணப்பட்டார்கள். அரசியல் ராஜிய மீடியாத்துறைகளில் பெரும்புள்ளிகளாக பிரபல்யங்களாகக் காணப்பட்ட இவர்கள் யாராலுமே சிவராமைப்பாதுகாக்க முடியாது போயிற்று.

கருணாவின் பிரச்சினைக்குப்பின் குறிப்பாக அந்தப்பிரச்சினையின் தொடக்கத்தில் சிவராம் எடுத்த தீவிர நிலைப்பாடு அவரை வன்னிக்கு நெருக்கமானவராக மாற்றியது. அதேசமயம் அது அவரை



கருணாவின் இலக்காகவும் மாற்றியிருத்தல்கூடும். குறிப்பாக கருணாவுக்கு அவர் எழுதிய பகிரங்கக்கடிதம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை எழுதப்பட்ட மிகமுக்கியமான கடிதங்களில் ஒன்று எனலாம். அந்தக் கடிதம் ஒன்றேபோதும் அவர் கருணாவின் இலக்காக மாற.

அந்தக்கடிதத்துக்கு முன்புவரை சிலவட்டாரங்களில் அவரும் ஒரு பிரதேசவாதியாகவே பார்க்கப்பட்டார். ஆனால் அவரிடமிருந்தது பிரதேச அபிமானம் அல்லது கிழக்கு மையப் பார்வைதான். அதுபிரதேசவாதம் அல்ல என்பதை அந்தக்கடிதம் பகிரங்கமாக்கியது. அவருடைய கிழக்கு மையப்பார்வை எனப்படுவது தேசிய உணர்வுகளுக்கு செழுமையூட்டுவதே தவிர தேசிய ஐக்கியத்தை உடைப்பது அல்ல என்பதை அவருடைய பிந்திய நடவடிக்கைகள் நிரூபித்தன. இது காரணமாக அவர் முன்பொருகாலம் மிகநெருக்கமாக இருந்த கனடாவிடமிருந்து விலகிவரலானார்.

கருணா விவகாரம் ஆயுத மோதலாக வெடித்து அதன் நடவடிக்கைக்களம் கிழக்கிற்கும் அப்பால் விஸ்தரிக்கப்பட்டு கொழும்பும் ஒரு நடவடிக்கைக்களம் என்றாகியபோது அந்த யுத்தகளத்தில் வாழ்ந்த நன்கு துருத்திக்கொண்டு தெரிந்த ஒரு இலக்காயிருந்த சிவராம் ஏன் உசாராயில்லாமல்போனார்?

நன்கு தெரியவந்த ஒரு இலக்காயிருந்தும் தன்னைச் சூழவும் யுத்தநிறுத்தத்துள் நிகழ்ந்துவந்த ஒரு மென்தீவிர யுத்தத்தின் பாரதூரத்தன்மையை அவர் ஏன் உணரத் தவறினார்?

பொதுவாக கொழும்பு நகரின் பின் இரவுகள் பெரும்பாலும் பாதாள உலகக்குழுக்கள் விபச்சாரர்கள் மற்றும் விறுத்தாப்பியர்களுக்கிடையேதான் பங்கிடப்படுவதுண்டு. இத்தகைய ஒரு பின்னிரவில் குறிப்பிடத்தக்களவு போதையில், ஆபத்தான ஒரு தருணத்தில் அவரைக் அப்படியே கைவிட்டோடிய ஒரு நண்பனை நம்பி அவர் ஏன் தனியே வந்தார்?

இதற்கெல்லாம் காரணம் ஒன்றில் அவருடைய மேதைத்தனத்தின் பாற்பட்ட கிறுக்குத் துணிச்சலாய் இருக்கவேண்டும். அல்லது ஹிரு மாநாட்டில் அவர் கூறியதுபோல அவருக்கிருந்த தொடர்புகள் உறவுகள், பிரபல்யம், மதிப்பு, செல்வாக்கு என்பவற்றின் பாற்பட்ட நம்பிக்கைகள் காரணமாக இருக்கவேண்டும்.

ஆனால் அரிதான அந்தக் கிறுக்குத் துணிச்சலோ அல்லது மேல்மட்ட உறவுகளோ அல்லது அவர் ஒரு முன்னாள் புளொட் உறுப்பினர் என்ற அடையாளமோ எதுவுமே அவர் பம்பலப்பிட்டியில் அதுவும் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக தூக்கிச் செல்லப்படுகையில் அவரைக் காப்பாற்றவில்லை.

சிலசமயம் அவர்வன்னியில் வசித்திருந்தால் காப்பாற்றப்பட்டிருப்பார். ஆனால் கொழும்பிலிருந்துகொண்டு வன்னியின் அரசியலை துணிச்சலாக எதிரொலித்தவர் என்பதே அவருக்கிருந்த கவர்ச்சியும், தனித்துவமும்.

அவரைக் கொன்றவர்களின் கண்ணை உறுத்தியதும் அந்தக் கவர்ச்சியும் தனித்துவமும்தான். அவரைக்கொன்றதன் மூலம் இத்தகைய அரிதான மேலாவிலாசங்களுக்கு கொழும்பில் பாதுகாப்பில்லை என்பது மட்டுமல்ல ஹிருமாநாட்டில் அவரே கூறியது போல நாட்டைப்பிரிப்பதன் மூலம்தான் இத்தகைய ஆளுமைகளை பாதுகாக்கலாம் என்பதும் உணர்த்தப்பட்டிருக்கிறதா?

# நறுக்கென...

## அம்மையாருக்கு சபாஷ்...!



கடைசியில் அம்மணியார், இப்படிச் சொல்ல வேண்டிய நிலைக்கு வந்துவிட்டாரே! 'அரசாங்கம் கவிழும் நிலை ஏற்பட்டாலும், எனது பதவியே பறிபோகும் நிலை உருவானாலும்அரசு விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீரும்' என சர்வமதத் தலைவர்கள் மத்தியில் கூறியதைத் தான் சொல்கிறேன்.

சந்திரிகா அம்மையாரின் இந்த முடிவு எதிர்பார்க்கப்பட்ட, அதே சமயம் அவரது மனதிற்கு எந்தவகையிலும் உடன்பாடில்லாத ஒன்றேயாகும்.

அப்படி அவர் கூறியமைக்கு 'விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை' என்று சமாளிப்பு நியாயத்தையும் கூறியுள்ளார்.

'தனிநாடு கேட்டுப் போராடிய புலிகள் அதனைக் கைவிட்டுவிட்டு அரசுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க முன்வந்திருப்பது தேசியரீதியில் தமக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்' என்றெல்லே அம்மையார் கூறியுள்ளாராம்!

இதன்காரணமாக இதனை எவர் எதிர்த்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்திப் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி புலிகளை அரசின் நிர்வாக முறை ஒன்றின் கீழ் கொண்டு வரப்போகிறாராம்.

தற்போதைய நெருக்கடிகளைத் தீர்க்க அவருக்கு வேறு வழியுமில்லையாம்.

-புற அழுத்தங்கள் அந்தளவுக்கு அதிகமாகிவிட்டது போலும்...

பொதுக்கட்டமைப்போ, வேறு எந்தவகையான அரசுடன் இணைந்த நிர்வாகக் கூட்டமைப்போ எதுவுமின்றி-சட்டரீதியாக இல்லாவிட்டாலும் கூட குறைந்தது ஆறு வருடங்களாக புலிகள் தமது பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளதை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ள சந்திரிகா அம்மையார் மீண்டுமொரு போர் ஏற்பட்டால் அரசாங்கம் வெற்றி பெறாது என்பது புலிகளுக்கு நன்குதெரியுமென்றும், இது உண்மையான நிலையுமாகுமென்றும் ஒப்புதல் வாக்குமூலமொன்றை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமேயாகும்.

சரி-சந்திரிகா அம்மையார் இப்படியெல்லாம் கூறிவிட்டபின்னர் ஜே.வி.பியினர் என்ன செய்யப் போகிறார்கள்? ஹெல உறுமயக் கும்பல் என்ன குளறப்போகிறார்களா?

ஜே.வி.பியினர்அமைச்சுப் பதவியை மட்டும் விட்டு விலகி அரசுடன் ஒண்டிக்கொண்டும் ஒட்டிக்கொண்டும் இருப்பார்களா?அல்லது ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு வெளியேறுவார்களா?

பொதுக்கட்டமைப்பு உருவாகும் நிலை தோன்றில், ஹெல உறுமயக்காரர் ஆயுதமேந்திப் போராடுவார்களா? அல்லது 'பேச்சுப்பல்லக்கு தம்பி கால் நடை'யென்று என பதவிக்கதிரைகளை பற்றிக்கொண்டு பேசாமல் இருந்துவிடுவார்களா?

ஏனென்றால் இவர்கள் அரசியல் பிக்குகளல்லவா!

எதுவானாலும் பொதுக்கட்டமைப்பு விவகாரம் தென்பகுதி அரசியலில் இன்னும் சில காலம் சர்ச்சைக்குரிய விடயமாகவே இருக்கப்போகிறது என்பது மட்டும் உண்மை.

பொதுக்கட்டமைப்பு உருவாகுமா? ஐ.தே. கட்சி அதனை முழுமையாக ஆதரிக்குமா? ஜே.வி.பி அரசுக்குள் இருந்து கத்திக்கொண்டே இருக்குமா? அல்லது வெளியேறி ஆட்சியைக் கலைக்குமா?,ஹெல உறுமயவும்,ஜே.வி.பியும் தென்னிலங்கையில் கலவரங்களை உருவாக்குமா? மீண்டும்பொதுத்தேர்தல் ஒன்று நடக்கும் சூழல் உருவாகுமா?

இப்படித் தொடரும் கேள்விகளுக்கான பதிலை அம்மையார்தான் கூறவேண்டும்! நிறைவேற்று அதிகாரம் அவர் கையில்தானே உள்ளது.

## இது என்ன கருணை..!



"கடல் கோள் அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண மற்றும் மீள் கட்டமைப்புப் பணிகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பான முயற்சிகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது" இப்படி கூறியிருப்பவர் இந்திய வெளியுறவுச் செயலரான சியாம் சரண் அவர்களே தான்....

இப்படியான தொனியில் இதற்கு முன்னரும் யாரோ ஒருவர் கூறியதாகத் தோன்றுகின்றதல்லவா?

உங்கள் ஞாபகசக்தியைப் ' ாராட்டவே வேண்டும்.

சிறிலங்காவின் அந்த பொமமைப் பிரதமரான மகிந்த ராஜபக்ஷவே அவ்வாறு தெரிவித்த பெருந்தகையாவார்...

அட உள்நாட்டு பெரிய மனிதருக்கே, பொதுக்கட்டமைப் பென்றால் என்னவெனத் தெரியவில்லையென்றால் அயலகச் செயலருக்கு தெரியாததில் ஆச்சரியமில்லைத்தான்!

ஆனாலும் பொதுக்கட்டமைப்பு விவகாரமானது சர்வதேச மட்டத்தில் பேசப்படும் சர்ச்சைக்குரிய விடயமாகிவிட்டுள்ள நிலையில் இந்திய வெளியுறவுச் செயலருக்கு அது குறித்துத் தெரியாமல் போனது வெட்கமே!

அதுவும் கதிர்காமர் முதல் ஆனந்த சங்கரியார் வரை பொதுக்கட்டமைப்பை இந்தியா ஆதரிக்கக் கூடாது எனக் 'கத்தோகத்தென' கத்தி ஓய்ந்துள்ள நிலையில் ஜே.வி.பி யினரோ பொதுக்கட்டமைப்பு இந்தியப் பாதுகாப்பு நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அபாயச்சங்கை அடிக்கடி ஒலித்து வரும் நிலையில் ஹெல உறுமயப் பிக்குகள் கும்பல் பொதுக்கட்டமைப்பை தடுத்து நிறுத்தி சிங்கள தேசத்தைக் காப்பாற்றுங்கள் என இந்தியாவை நோக்கி ஓலக் குரல் எழுப்பி வரும் நாட்களில் இந்திய வெளியுறவுச் செயலருக்கு அது குறித்து எதுவும் தெரியவில்லை என்று கூறுவது பரிதாபகரமான விடயமாகும்!

ஆனால் அவர் இப்படி சொல்வதையெல்லாம் நாம் நம்பி விடுவோம் என நினைப்பது தான் அதைவிடப் பரிதாபமான விடயமாகும்.

அதுகிடக்கட்டும்.

திடீரென இந்தியாவுக்கு கிழக்கு மாகாணத்தின் மீது தனிப்பட்ட வாஞ்சையும் கரிசனமும் பிறந்திருக்கிறதே...!

பல்லின சமூகமொன்றிற்கான சிறந்த உதாரணம் கிழக்கு மாகாணம் எனப் பாராட்டும் சியாம்சரண் இந்தியா கிழக்கு மாகாணத்துடன் நெருங்கிய ஒத்துழைப்பினை ஏற்படுத்த விரும்புவதாகவும் இதற்கு இந்தியா முடிந்த அனைத்தையும் செய்யும் எனவும் என்று கூறியதன் பின்னால் ஏதோ ஒரு 'புதிய சதி'யின் வாசனையை உணரக் கூடியதாக இருக்கிறதல்லவா?

ஆனந்த சங்கரி - மற்றும் கருணா தலைமையிலான புதிய த.வி கூட்டணியை (அதாவது தமிழர் விரோதக் கூட்டணியை ) உருவாக்கி தமிழர் தாயகத்தைப் பிளவுபடுத்தும் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா விரும்புகிறது போல் தெரிகிறது.

இல்லாவிட்டால் கிழக்கின் மீது இவ்வளவு கருணை கொள்ள வேண்டிய அவசியம் தான் என்ன?

எல்லாம் கருணாமீது கொண்ட கருணையோ? யாரறிவார்.

## சங்கரியாருக்கு வந்த சோதனை!



ஆனந்தசங்கரியார் த.வி.கூவின் அதாவது தமிழர் விரோதக் கூட்டணியின் தலைவராக இந்திய உளவுத்துறையினரால் 'முள்முடி' சூட்டப்பட்டபின்னர் பப்பா மரத்தில் தானே ஏறிக்கொண்டு நாளொரு கருத்தும் பொழுதொரு அறிக்கையுமாக அரசியல் கோமாளித்தனம் காட்டத் தொடங்கிவிட்டார்.

தமிழர் விரோதக் கூட்டணிக்கு தலைவராகச் செயற்படும்வேளை இந்தியப் புலனாய்வுப் பிரிவுக்கு ஈழத்து முகவராகவும், இந்திய கொள்கை வகுப்பாளர்களுக்குப் புரோக்கராகவும் கூட செயற்படுவதாக பரவலாகப் பேசப்படுகிறது.

'விடுதலைப் புலிகளுடன் அரசு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக்கூடாது' என்றார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களுக்கு எந்த உதவிகளையும் அரசு வழங்கக்கூடாது என்றார்.

பொதுக்கட்டமைப்பை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என வர்ணித்தார்...

இன்னும் என்னென்னமோ அவரது மனக்கோளாற்றின் உயர்வு தாழ்வுக்கேற்ப நினைத்ததைஎல்லாம் அறிக்கையாக்கி வெளியிட்டு தன்னை தமிழ்மக்கள் அரசியல் அரங்கிலிருந்து விலாசமற்றவராக்கி விரட்டியதை நியாயப்படுத்தினார்.

இப்போது தமிழ்த் தேசவிரோதக் குழுக்களின் கூட்டணிக்கு தலைவராக்கப்பட்டதில் பயத்தில் கண்மண் தெரியாமல் உளறத் தொடங்கியுள்ளார்.

வரதராஜப் பெருமாளின் ஈ.என்.டி. எல்.எவ் அணி, கருணா அணி, என எல்லாமே தனக்குக்கீழ் தான் என்றும் டக்ளஸும் சித்தார்த்தனும்தான் தன்கட்டுப்பாட்டுக்குள் தற்போது வரவில்லையென்றும் அடுத்த தேர்தலுக்கு முன் அவர்களும் தனது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுவார்கள். இல்லாவிட்டால் அவர்கள் 'அட்ரஸ்' இல்லாமல் போய்விடுவார்கள் என்றும் கொழும்பில் அவரது முன்னாள் அரசியல் சகா ஒருவருக்கு விலாசம் காட்டியுள்ளாராம்...

அது மட்டுமல்ல, கருணாவை தனது அணியின் இராணுவத் தளபதியாக்கி கிழக்கில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி அதைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்தியா உதவ உறுதியளித்துள்ளதாகவும் கூறியுள்ளதுடன், இந்தியாவிரும்பும் தீர்வொன்றிற்கு ஜே.வி.பி ஒத்துழைக்கவேண்டும் என சோமவன்ச-வீரவன்ச கும்பலிடம்தான் பேசிவருவதாகவும் விரைவில் சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் இந்தியாவின் நெறிப்படுத்தலுக்குக் கீழ் வந்துவிடுமென்றும் கூட கூறியுள்ளாராம்.

இந்திய வெளியுறவுச் செயலரின் கிழக்கு மீதான அக்கறையை கூர்ந்து கவனித்தால் சங்கரியாரின் கதைக்குள் ஒழிந்துள்ள அர்த்தத்தையும் புரிந்துகொள்ளமுடியும்.

வடக்கிலிருந்து துரத்தப்பட்ட சங்கரியார் கருணா கும்பலுடன் இணைந்து இந்திய அனுசரணையுடன் தமிழர் தாயகத்தை துண்டாடி, கிழக்கில் நிலைகொண்டு அரசியல் பண்ண விரும்புவதை இது உணர்த்துகிறதல்லவா?

சங்கரியார் விரைவில் ஹெல உறுமயவினருடனும் பேசவுள்ளாராம்.

சிலவேளை சந்திரிகா பொதுக்கட்டமைப்புக்கு உடன்பட்டு அதனை நடைமுறைப்படுத்த முயன்றால் சமாதானத்திற்கு எதிரான ஜே.வி.பி, ஹெலஉறுமய, தமிழ் ஆயுதக்குழுக்கள், தன்போன்ற அநாமதேயங்கள் அனைத்தையும் இந்திய அனுசரணையுடன் ஒன்றிணைத்து புதிய கூட்டணி அமைக்கும் நோக்கமும் சங்கரியாருக்கு உண்டாம்...

என்னடா சங்கரியாருக்கு வந்தசோதனை?...

## பாவம் என்ன செய்ய?



நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள்.

ஆனால் அநுரா மல்லிக்கு மட்டும் ஒரே ஒரு பிரச்சினை மட்டும்தான் உள்ளது. அதாவது அடுத்த சனாதிபதிப் பதவியை எப்படியாவது தனதாக்கிக் கொள்ள வேண்டும் அவ்வளவுதான்.

அதற்காக மல்லி படும்பாடு... பரிதாபத்திற்குரியதுதான்.

அடுத்த சனாதிபதி பதவிக்கு தனக்கு ஆதரவளிப்பார்கள் என நம்பியிருந்த ஜே.வி.பி ய ா் தன்னை ஒரு பொருட்டாகக் கவனிப்பதில்லை என்பதில் அநுராவுக்கு கவலையோ கவலை.

அதுமட்டுமல்ல அடுத்த சனாதிபதித் தேர்தலில் தாங்கள் தனித்துப் போட்டியிடப் போவதாகவும் அதற்கான வேட்பாளர் சோமவன்ஷவா, வீரவன்ஷவா என்பது குறித்து விவாதிக்கப்பட்டு வருவதாகவும் ஜே.வி.பி வட்டாரங்களில் இருந்து வெளிவரும் செய்திகளால் இழந்து போயிருக்கும் அநுராவை அவரது சொந்த கட்சியினர் அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் கண்டுகொள்வதே இல்லை என்பதிலும் அவருக்கு கவலையோ கவலை.

அவருக்காக பரிந்து பேசக்கூடியவர் என அவரால் நம்பப்பட்ட அந்தச் 'சோ' முழிப் பேர்வழி மங்கள சமரவீரவுக்கும் காத்துப் போய்விட்டதாகக் கூறுகிறார்கள். அவரோடு சேர்ந்து ஜே.வி.பிக்கு ஜால்ரா போட்டதால் அக்கா சந்திரிகாவும் அவரை வெறும் மல்லியாகத்தான் பார்க்கிறாரேயன்றி பண்டா பரம்பரையின் அரசியல் வாரிசாகப் பார்ப்பது கிடையாது என்பதிலும் அவருக்கு கவலையோ கவலை.

கட்சியின் சிரேஷ்ட தலைவர்களான ரத்னசிறி விக்கிரமநாயக்க மகிந்தராஜபக்ஷ போன்றோர் தங்களையும் கட்சியின் வாரிசுப் போட்டிக்குள் இணைத்துக்கொண்டதால் அநுரா என்ற போட்டி யாளரை எதிரியாகவே கணிக்கத் தொடங்கிவிட்டார்கள். இதனால் கட்சிக்குள்ளும் தன்னை ஒரு முக்கியஸ்தராக எவரும் கவனிப்பதில்லை என்பதிலும் அவருக்கு கவலையோ கவலை.

அண்மையில் தன்னை மறந்த நிலையில் பேசாமல் ரணில் விக்கிரமசிங்காவோடை இருந்திருந்தால் கூட இந்த இழி நிலை ஏற்பட்டிருக்காது எனப் புலம்பியதாகக் கேள்வி.

இனி மீண்டும் அந்த அணிக்குப் போனால் அது அவமானமாகிவிடும்

அவமானத்தைப் பார்த்தால் கிடைக்கக் கூடிய அரைகுறை மதிப்பும் இல்லாமல் போய்விடும் என அவரது முன்னாள் ஐ.தே. கட்சி சகாக்கள் அவரை குழப்பியும் வருகிறார்களாம்.

ஆனாலும் அநுரா என்ன சாதாரணமான பிரகிருதியா, பண்டாதம்பதிகளின் ஏகபுதல்வனல்லவா.... பொறுத்தது போதும் என பொங்கியெழத் தொடங்கிவிட்டார் போலும்.

-அடுத்த சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் வேட்பாளராக போட்டியிட தனக்கு முறைப்படி ஒழுங்காக அனுமதி வழங்கப்படாவிடில் பலாத்காரமாகவேனும் அதனைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறை தன்னிடம் இருப்பதாகச் சூளுரைத்துள்ள அநுரா தனது சகோதரி தனக்கே அனுமதி தருவதாகக் கூறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(ஆனால் அது நிறைவேற்று அதிகார சனாதிபதிப் பதவியாக இல்லாதுவிட்டால்)

இந்த நிலையில் அந்தக் கோமாளியை கொஞ்சம் உளறாமல் இருக்கச் சொல்லுங்கள் என ஜே.வி.பி யினர் அநுராவின் தோழர்களிடம் வெளிப்படையாகவே கூறியுள்ளதாகவும் கேள்வி....

போறபோக்கைப் பார்த்தால் 'பதவி' தோல்விகாரணமாக 'தேவதாஸ்' மாதிரி அவர் 'உறவுமில்லை பகையுமில்லை ஒன்றுமேயில்லை. உள்ளதெல்லாம் நீயேயல்லால் வேறே கதியில்லை. இனி யாரும் துணையில்லை, எனப் போத்தலும் கையுமாகப் பாடிக் கொண்டு அலைந்தாலும் ஆச்சரியமில்லை.

செங்குட்டுவன்



# புனரமைக்கப்படவேண்டிய முத்துஐயன் கட்டுக்குளம்

மனித வாழ்விற்கு நீர் இன்றியமையாதது. இந் நீருக்காக பல நாடுகள் மாநிலங்கள் என பல மாவட்டங்களும் ஏங்கித் தவிக்கின்றன.

அதனை சேமித்து வைத்து பொருளாதார ரீதியாக பல நாடுகள் விவசாயச் செய்கையினை மேற் கொண்டு வருகின்றன. அந்த வகையில் தமிழீழத்தைப் பொறுத்தவரையில் முல்லை மாவட்டத்தில்தான் குளங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதனால் இம் மாவட்டம் மீன்பிடியுடன் சமபங்கை வகிக்கும் பயிர்ச் செய்கையினை மேற்கொள்கின்றனர். இங்கு உப உணவுப் பயிர்ச செய்கைக்கு என மூன்று குளங்களான முத்துஐயன் கட்டு, ஐயங்கன், விசுவமடு ஆகியவற்றுள் முத்துஐயன் குளம் முற்றுமுழுதாக உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு என கட்டப்பட்டது.

ஆதி காலத்தில் இப்பிரதேசத்தை ஆண்ட முத்தையன் எனும் அரசனால் பூதங்கள் மூலம் கட்டப்பட்டது என்றும் இதற்கு பல செவிவழி மரபுக் கதைகள் உண்டு.

இருந்தபோதிலும் பேராற்றை ஆரம்பத்தில் மறித்துக் கட்டி பயிர்ச் செய்கையினை மேற்கொண்டமையினாலேயே இக்கட்டு உருவாகுவதற்கு அடித்தளமாகும்.

இப்பேராறு வவுனியா மாவட்டத்தில் உள்ள சேமமடு குளம் வான் நீர் ஊடாக அனந்தர் புளியங்குளம், நயினாமடு குளம், ஆயிலடி கரடியனாறு, குருக்களூர் ஆகிய குளங்களின் வான் நீர்வெளியேறி முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் உள்ள 9 ஆம் கட்டை பாலம் என கூறப்படும் பாலத்தினூடாக முத்து ஐயன் கட்டுக்குளத்தை வந்தடைகின்றது. கார்த்திகை, மார்கழி மாதங்களில் பெய்யும் பெரும் மழையினால்தான் இக்குளம் நிரப்பப்படுகின்றது.

1963 ஆம் ஆண்டு நீர்ப்பாசன திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கட்டு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன.

இதில் அணைக்கட்டு 1.6 கி.மீ வரை கிட்டதட்ட உள்ளது. நீர்ப்போக்கிகள் (துரிசு) ஒன்று வலதுகரை இதில் 8ஆம் கண்டம் வரை நீர் செல்லக்கூடியவாறு அமைக்கப்பட்டது. ஆனால் 7 ஆம் கண்டம் வரை தான் சென்றது. தற்போது 7 ஆம் கண்டத்திற்கும் முழுமையாகச் சென்றடைவதில்லை. இவ் வாய்க்கால் கிட்டத்தட்ட 11 கி.மீ வரை செல்கின்றது. இவ்வாய்க்கால் ஊடாக புளியங்குளம் கருவேலன் கண்டல், பெருமுறிப்பு ஆகிய குளங்களுக்கும் நீர் நிரப்பப்பட்டு அதன் கீழ் உள்ள விவசாய நிலங்கள் பயன் படுத்தப்படுகின்றன. இரண்டு இடது கரை இதில் 4 கண்டங்கள் உள்ளன. இவ்வாய்க்கால் ஊடாக புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவுக்குள் செல்கின்றது. கிட்டத்தட்ட 13 கி.மீ வரை உள்ளது. கண்ணியர் கேணி குளம் நிரப்பப்பட்டு மண்ணாங் கண்டல் வாய் கால் ஊடாக செல்கின்றது.

குளத்தில் இரு வான் கதவுகளும் பதினொரு வான்களும் உள்ளன. 6000 ஹெக்டேயர் நிலப் பரப்பில் பயிரிடப்படுகின்றது. 22 அடி தண்ணீரின் கொள்ளளவு 41000 அடிகள். இதில் படித்த வாலிபர்களுக்கு ஏற்று நீர்ப்பாசனம் குடும்பஸ்தர்களுக்கு பரவல் நீர்ப்பாசனம் என வழங்கப்பட்டு பல இடங்களிலிருந்தும் மக்கள் கொண்டு வரப்பட்டு குடியேற்றப்பட்டனர்.

புளியங்குளம் கிராமத்தில் பெண்கள் குடியேற்றத் திட்டம் என 42 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் இப்பகுதியில் ஐந்து குடும்பங்கள் மட்டுமே உள்ளன. இப் பகுதிக்குச் செல்லும் நீர்ப்போக்கிக் குழாய்கள் இல்லாமையினால் நீர் பாய்ச்ச முடியாதுள்ளது.

1975-1977 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இப்பகுதியில் வாழ்ந்த விவசாயிகளின் பொருளாதாரம் அதிக மேம்பாடாக இருந்தது. ஒரு அரச உத்தியோகஸ்தரின் நிலையான வருமானத்தை விட அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுத்த இடமாகும்.பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இருந்து நேரடியாக இங்கு பயணிகள் பேருந்து, சுமையுந்துகள் என்பன வந்து சென்றன.

1977யூலையில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக மலையகப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சின்ன சாளம்பன், பெரிய சாளம்பன் பகுதியில் குடியமர்ந்த மக்களுக்கும் பல கூலி வேலை வாய்ப்புக்கள் அதிகமாக வழங்கப்பட்டன.

இங்கு மிளகாய், வெங்காயம், நிலக்கடலை போன்ற பயிர்களே அதிகம் பயிரிடப்பட்டன.

பரவல் நீர்ப்பாசனப் பகுதியில் உள்ள சிறு சிறு தாழ் நிலங்களில் நெற் செய்கையினை மேற்கொண்டனர்.

1980 ஆம் ஆண்டுக்கு பின்னர் போர்ச் சூழல் காரணமாக உப உணவுப் பயிர்ச் செய்கை அருகி வரத் தொடங்கின. அதன் பின்னர் காலப் போக்கில் ஏற்று நீர்ப் பாசன திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட நீர்ப்போக்கிகள் நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பன சேதமடைந்ததுடன் களவாடப்பட்டன.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் செய்த அடாவடித்தனத்தால் இப்பகுதியில் வந்து விவசாயச் செய்கையினை மேற்கொண்ட குடும்பங்கள் இந்தப் பகுதியை விட்டு நிலையாக மீளவும் இடம்பெயர்ந்து சென்றனர். அதன் பின்னர் முற்று முழுதாகவே ஏற்று நீர்ப்பாசனம் செயலிழந்தது.

1990இற்குப்பின் நான்கில் மூன்று பகுதி உப உணவை விட நெற் செய்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தமையால் இப்பகுதி நிலங்கள் முற்று முழுதாக நெற் செய்கைக்கான நிலமாக மாறியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதற்கான வாய்க்கால்கள் சிதைவடைந்து சிமெந்தால் கட்டப்பட்ட பகுதிகள் உடைந்து காணப்படுவதாலும் சீரற்ற வடிகால் அமைப்பு இல்லாமையாலும் நீர் வீண் விரயமாக செல்லக்கூடியதை காணக்கூடியதாக உள்ளது.

இப்பகுதிக்கான போக்குவரத்து பாதைகள் முன்னர் சீராக இருந்தன. ஆனால் தற்போது இப் பகுதி பாதைகள் சில இரு பகுதிகளிலும் பற்றைகள் எழும்பி வீதியை மூடும் அளவுக்கு உள்ளதால் போக்குவரவுகளும் முற்று முழுதாகத் தடைப்பட்டும் உள்ளன. பாதைகள் குன்றும் குழியுமாய் உள்ளன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தால் ஆண்டு தோறும் ஒதுக்கிடும் நிதிகள் அணைக்கட்டின் சிறு திருத்த வேலைக்கு மட்டுமே உள்ளன.

ஆனால் வான் கதவின் இரு பக்கங்களினூடாக நீர் வெளியேறுவதை முழுமையாகத் தடுக்கவில்லை. அத்துடன் கிளை வாய்க்கால்களுக்கு அமைக்கப்பட்ட சிறு துரிசுகளும் திருத்தப்படாமல் உள்ளதால் நீர் வீண் விரயமாகச் செல்கின்றது.

இத்திட்டத்தை திருத்த கடந்த ஆண்டு ஜப்பான் நிறுவனம் ஒன்று பார்வையிட்டுச் சென்று அதற்கான நிதி வழங்கல் ஆயத்தமானபோது தடைப்பட்டது.

தற்போது இக்குளத்திற்கு ரூபா எட்டு இலட்சம் நிதிமட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒதுக்கீடு யானையின் வாய்க்கு சோளப் பொரி போட்டது போன்று. இதை வைத்து எந்த வேலைத் திட்டத்தை செய்யமுடியும்.

இந்த குளத்தின் வாய்க்கால்கள், வீதிகள் ஏற்று நீர்ப்பாசனச் செய்கை என்பன அபிவிருத்தி செய்யப்பட்டு தற்போது தடைப்பட்டுள்ள போக்குவரவு தடைப்படாமல் இருக்க அனைத்துத் தரப்பினரும் முழு மூச்சுடன் செயல்பட்டால் இப்பகுதி மீண்டும் ஒரு அதிகவிளைவை பெறும் பொருளாதாரக் கிராமமாக மாறும் என்பதில் ஐயமில்லை. எனவே கருத்தை உரியவர்கள் எடுத்து நடைமுறைப்படுத்துவார்களா?

**ப.வி. கவியரசன்**

---

# பாதிக்கப்படும் கிராமிய மக்கள்



போரையும் போர்ச்சூழலையும் சிறிலங்கா அரசு காரணம் காட்டி எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளையும் தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்வதில்லை. ஏதோ அரச சார்பற்ற அமைப்புக்கள் ஒருசில பணிகளை முன்னெடுக்கின்றன. அரசின் புறக்கணிப்பு செயற்பாடுகள் மூலம் தாயகப் பகுதிகளில் பெரும்பாலான பகுதிகள் என்றும் பின்தங்கிய நிலையிலே இருந்து வருகின்றன. அந்த வ்கையில் வவுனியா மாவட்டத்தினதும் மன்னார் மாவட்டத்தினதும் பெருமளவான பகுதிகள் எந்த ஒரு அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படாமையினால் அங்குள்ள மக்கள் பல இடர்களுக்கு மத்தியில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குளம், கங்காணிகுளம், விளாத்திக்குளம், சின்னவலயன் கட்டு, கூராய், ஆத்திமோட்டை என்று மன்னார் மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம். அதேபோன்று வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், தம்பனை, கிறிஸ்தவகுளம் என பட்டியலிட்டுக்கொண்டு செல்லமுடியும். இது மிகவும் பின்தங்கிய பகுதிகளாகவே இன்றும் இருந்து வருகின்றன. இப்பகுதிகளில் கிட்டத்தட்ட 15000இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களின் தொழில் பெரும்பாலும் விவசாயம், கூலி வேலையாகவே இருக்கிறது என்பனவே. இவர்களுடைய எதிர் காலம் எப்படிப்போகப்போகிறது என்பது பற்றி தீர்மானிக்க வேண்டியவர்கள் யார் என்பது கேள்விக் குறியான ஒன்றாகவே இருந்து வருகின்றது.

உதாரணமாக வவுனியா மாவட்டத்தின் தம்பனை என்ற பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் இப்பகுதி வவுனியா நகரில் கிட்டத்தட்ட 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இக்கிராமம் அமைந்துள்ளது. ஆதலால் இங்கு எந்த அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இங்கு கிட்டத்தட்ட 150 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இவர்களுக்கான மருத்துவ வசதி சுகாதார வசதி ஏதுமற்ற நிலை காணப்படுகின்றது. இங்குள்ள ஒருவர் தனது அடிப்படை வசதிகளைப் பூர்த்திசெய்வதாயின் அயலிலுள்ள வவுனியா நகரிற்குச் செல்வதாயின் தூரம் 10 கிலோமீற்றர்தான். ஆனால் வவுனியா செல்வதாயின் தம்பனையிலிருந்து மடுவிற்கு சென்று மடுவிலிருந்து உயிலங்குளம் சென்று அதனூடாகதான் மன்னாருக்கோ அல்லது வவுனியாவுக்கோ செல்லவேண்டும். 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வவுனியா நகருக்கு 50 கிலோ.மீற்றர் தூரம் பயணம் செய்யவேண்டும். இக்கிராமத்துக்கான பிரதேசசெயலகம், வலயக்கல்வித்திணைக்களம், பிற அலுவலகம் எல்லாமே இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் இருப்பதனால் எந்த ஒரு தேவையினை பூர்த்திசெய்வதாயினும் இவ்வாறு தூரத்திற்குச் சென்றே தமது தேவைகளை செய்துகொள்ளமுடியும். இப்பகுதிக்கான தபால்சேவை கூட அப்படித்தான்.

அண்மையில் கடந்த ஆண்டு கல்விப் பொதுத்தராதரப் பரீட்சைப் பெறுபேறு வெளியாகி சகல பாடசாலைகளுக்கும் கிடைத்து ஒருவாரத்தின் பின்னரே இப்பாடசாலைக்குக் கிடைத்தது. இது மட்டுமல்ல இதேபோன்று வவுனியா மாவட்டத்தின் பெருமளவான குடும்பங்கள் இதே பிரச்சினையை எதிர் கொண்டு வருகின்றனர். இது வவுனியா மாவட்டம், மன்னார் மாவட்டத்தின் கூராய், ஆத்திமோட்டை கிராமங்களை எடுத்துக்கொண்டால் இக் கிராமங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினை பெரியபிரச்சினை. முன்பள்ளியில்லை, மருத்துவமனையில்லை, பாடசாலையில்லை இவ்வாறு தேவைகள் அடுக்கப்பட்டுக்கொண்டே போகலாம்.

ஆனால் அபிவிருத்திப்பணி என்பது எதிலும் இல்லை. அரச அதிகாரிகளிடம் கேட்டால் அவர்கள் தருகின்ற பதில், அரசு நிதி சேர்க்கவில்லை என்பதுதான். அரசு இன்று நேற்றல்ல மிக நீண்டகாலமாகவே இந்த பாரபட்சத்தைக் காட்டிவருகின்றது. இப்பகுதிகளில் உள்ள மக்கள் தமது விவசாய உள்ளீடுகளை சந்தைப்படுத்துவதாயின் அவற்றை கொண்டுசெல்ல வாகன வசதியில்லை. வாகன வசதிகளை ஏற்படுத்த முக்கிய பிரச்சினை பிரதான வீதிகள், பாலங்கள் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப் படாமை ஆகும்.

இவ்வாறு தாயகப் பகுதியின் பின் தங்கிய பகுதிகள் பின்தள்ளப் பட்டுக்கொண்டே போகின்றன. அதாவது தாயகப்பகுதிகளுக்கு ஒதுக்கப் படுகின்ற நிதியினை சிங்கள தேசத்திற்கு யுத்தத்தைக்காரணம் காட்டி அபிவிருத்திப் பணிகளை அங்கு மேற் கொண்டு வந்த அரசு தற்போது மூன்றாண்டு சமாதானத்தில் கூட இவ்வாறான பின் தங்கிய பகுதிகளில் எந்த அபிவிருத்திப் பணிகளையும் மேற் கொள்ளவும் இல்லை. அதற்கான சமிக்ஞைகள் எதையும் காட்டவும் இல்லை.

இவ்வாறு தமிழர் தாயகப் பகுதிகளில் கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு அடிப்படை வசதி, போக்குவரத்து என்ற எந்த ஒரு அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது கடந்த காலங்களில் யுத்தத்தைக் காரணம் காட்டிய அரசு தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த காலத்தில் எந்த அபிவிருத்திப்பணிகளையும் மேற்கொள்ளாது புறக்கணிப்பையே காட்டி வருகின்றது. இவ்வாறான புறக்கணிப்புக்கள் மூலம் எமது தாயகப் பகுதியும் தாயக மக்களும் வளங்களும் பாதிப்படைகின்றன.

**சு.பாஸ்கரன்**

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 06 . 05 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# துணிவே தேவை!

பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் ஐக்கிய முன்னணிக்குள் முரண்பட்ட நிலையே காணப் படுகிறது.

சனாதிபதி சந்திரிகா எத்தகைய நிலை ஏற்படினும் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் என தெரிவித்து வருகின்ற அதேவேளை, ஐக்கிய முன்னணியின் பிரதான சகபாடிக் கட்சியான ஜே.வி.பியோ இதனை கடுமை யாக எதிர்ப்பதுடன் அரசை அச்சுறுத்தும்வகையில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டும்வருகின்றது.

பொதுக்கட்டமைப்பு வழங்கப்படுமாயின் அதுதான் ஐக்கிய முன்னணியின் இறுதிக்கட்டம் என எச்சரிக்கை யினையும் செய்துள்ளது.

இந்த நிலைமையில், நடந்துமுடிந்த மேதின நிகழ்வில ஜே.வி.பியின் நடவடிக்கைகளும் உரைகளும் பொது வாக பொதுக்கட்டமைப்புவிடயத்திற்கு எதிரான கருத் துக்களை பிரதிபலிப்பதனை முதன்மைப்படுத்து வதாகவே அமைந்திருந்தமை கவனிக்கத்தக்கது.

சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பு உருவாக் கப்படாதபட்சத்தில் சமாதான முயற்சி தொடர்பாகவோ, தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாகவோ சர்வதேச சமூகத்தின் முன் முகம்கொடுக்கும் அருகதையை இழந்து விடநேரிடும் என்பதை தெளிவாக உணர்ந்துள்ளார்.

இதற்கு பொதுக்கட்டமைப்புவிடயம் தொடர்பாக என்றுமில்லாத அளவுக்கு அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தத்தினை கொடுத்துவருகிறது.

இந்த நிலையில் ஐக்கிய முன்னணியானது வண்டி லில் பூட்டிய இரண்டு மாடுகள் ஒற்றுமையாக ஓடுவதற் குப் பதிலாக வெவ்வேறு திசைகளில் இழுக்கமுயலும் ஒரு நிலையிலுள்ளது.

இதனால் ஐக்கிய முன்னணி கவிழ்ந்துவிடும் என்றும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சனாதிபதி சந்திரிகா அதிக நெருக்கடியை சந்திக்கிறார் என்பதுபோலவும் நிகழ்வுகள் நடந்துவருகின்றன.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை பொதுக் கட்டமைப்பு விடயமாயினும்சரி, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகவிருந்தாலும் சரி, தமிழ் மக்க ளின் அரசியல் உரிமை, தமிழ் மக்களின் நலன் என்று வருகின்றபோது ஆட்சியிலிருக்கும் எந்த அரச தலை வராக இருந்தாலும் சரி எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் சரி இத்தகைய நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்தேயாகவேண்டுமென்கிற நிலையே காணப்படுகிறது.

இதற்குக் காரணம் மாறி மாறி ஆட்சிக்கு வந்த பிரதான கட்சிகள் தமிழ் மக்களின் விடயத்தில் ஆட்சியி லிருக்கும் கட்சிக்கு எதிரான பிரதான ஆயுதமாக தமிழ் மக்களிற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துவருகின்ற ஒரு வழமையை உருவாக்கி வைத்துள்ளனர்.

ஆகவே ஜே.வி.பியின் எதிர்ப்பு என்பது முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதுபோல இந்த பிரதான கட்சிகளின் முதலீடுகளின் அறுவடைகள் அன்றி வேறில்லை.

ஆகவே இந்த பிரதான கட்சிகள் தென்னிலங்கை யில் உருவாக்கி வைத்துள்ள கொடிய அரசியல் பாரம்பரியத்தை மாற்றி தீர்க்கமான நடவடிக்கையினை எடுக்கவேண்டுமாயின் அரச தலைவர் என்றவகையில் சனாதிபதி சந்திரிகா துணிந்து நடவடிக்கைகளை எடுத்தாகவேண்டும்.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு முதல் அவர் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு ஆதரவாகச் செயற் பட முன்வராத சக்திகள் சனாதிபதி பொதுக்கட்டமைப் பினை உருவாக்குவாராயின் பொதுக்கட்டமைப்பு தொடர் பான நெருக்கடிகளை எதிர்கொள்ள பக்கத்துணையாக பிரதான எதிர்க்கட்சி முதல் பலகட்சிகள் ஆதரவினை வழங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாக நேரிடும்.

ஏனெனில், பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் என் பது இன்று இலங்கையைப்பொறுத்தவரையில் அது ஒரு பொதுப்பிரச்சினையாக மாறியுள்ளது. ஆகவே ஆட்சிக்கு வர முயலும் கட்சிகள் இந்த பொதுக்கட்டமைப்பு விடயத் தில் நழுவிச் செயற்படமுடியாத ஒருநிலையே காணப் படுகிறது.

ஆகவே நாட்டில் எதிர்கொள்ளப்படும் பிரதான நெருக கடியை தணிப்பதற்கான முன்னோடி நட வடிக்கையாக இதனை சனாதிபதி சந்திரிகா செய்யலாம் அல்லவா?

# சனாதிபதியின் புதிய யுக்தி...?

மு.தமிழ்ச் செல்வன்

மீண்டும் சனாதிபதி தனது வழமையான பாணியில் பேச ஆரம்பித்துவிட்டார். சிறிது காலம் அடக்கி வாசித்துவந்த அவர் இப்போது பொதுக்கட்டமைப்பு விடயத்தில் திருவாய் மலர்ந் திருக்கின்றார். எப்போதுமே சந்திரிகா பேச்சளவில் மற்ற வர்களைத் திருப்திப்படுத்துவதில் திறமையானவர். இப்போதும் அவ்வாறான ஒரு செயற்பாட்டி லேயே இறங்கியுள்ளார்போன்று எண்ணத் தோன்றுகின்றது.

அதாவது பொதுக்கட்ட மைப்பு விடயத்தில் சந்திரிகா அண்மைக்காலங்களில் கூறிவந்த கருத்துக்கள் இவ்வாறே எண்ணத் தோன்றுகின்றன. சுனாமி அனர்த் தம் ஏற்பட்டு சிறிது காலத்தில் பொதுக்கட்டமைப்பு இணக்கப் பாட்டிற்கு விடுதலைப்புலி களுடன் வருவதுபோன்று வார்த் தைகளை வாரி வழங்கினார். இதற்குக் காரணம் அன்றைய சூழலில் சுனாமி அனர்த்தத்தின் பால் கிடைக்கும் சர்வதேச நிதியுதவிகளை தடங்கலின்றி பெற்றுக்கொள்வதற்கு இதில் அவர் எதிர்பார்த்ததுபோன்று ஒன்றும் நடக்கவில்லை.

இதனையடுத்து சிறிதுகாலம் மௌனமாகத் தனது பதவிநீடிப்பு பிரச்சினைகளில் அக்கறை செலுத்திவந்த அவர் அண்மை யில் வெளிநாட்டு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்திலும் சந்தி ரிகா தனது வழமையான பாணி யில் வார்த்தைகளை விட்டார். அதாவது தான் நாடுதிரும்பிய வுடன் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படும் என்பதுபோல அவரது பேச்சுக்கள் காணப்பட் டன. இதற்குக் காரணம் இம் மாதம் கண்டியில் இடம்பெற விருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் உதவிவழங்கும் நாடுகளின் அழுத்தங்களைத் தவிர்த்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள அவர் விட்ட வெறும் அரசியல் வார்த்தைகளே அது. தான் விட்ட வார்த்தைகள் எல்லாம் பழைய பல்லவியாக மாறிவிட்டதை உணர்ந்த சந்திரிகா உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத் திற்கு முன் வேறு ஏதாவது கவர்ச்சியான வார்த்தை களை பேசி உதவி வழங்கும் நாடு களைத் திருப்திப்படுத்த எண் ணிய சந்திரிகா கூறிய வார்த்தை தான் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நாட்டுமக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என்பது.

முதலில் பொதுக்கட்ட மைப்புத் தொடர்பாக சந்திரிகா தெளிவுடன் இருக்கின்றாரா என்பது சந்தேகமே. பாதிக்கப் பட்ட மக்களுக்கான மனிதாபி மானத் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு அமைப்புத் தொடர் பாக கடந்த நான்கு மாதங்களில் பெற்ற தெளிவினைவிட வேறு என்ன அவர் தெளிவுபடுத்தப் போகின்றார். முதலில் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக தனது பங்காளி இனவாதக்கட்சியான ஜே.வி.பிக்கும் தென்னிலங்கை யிலுள்ள ஏனைய இனவாதக் கட்சிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டும். இந்நாட்டில் இன்று இவர்களே இனவாதத்தைத் தவிர வேறு எந்த விடயத்திலும் தெளிவு இல்லாமல் இருக்கின் றனர். ஆனால் மக்கள் தெளி வாகவும் நிதானமாகவுமே இருக் கின்றனர்.

இலங்கையின் பிரதமர் மகிந்தராஜபக்ஷ பொதுக்கட்ட மைப்புத் தொடர்பாக தனக் கெதுவுமே தெரியா தென்று கூறியி ருப்பது இந்நாட்டின் அரசியல் தலைவர் கள் எந்தள வுக்குத் தெளிவாக இருக்கின் றனர் என்பதனை புரிந்துகொள்ளப் போதுமானதொன்றே.



இது இவ்வா றிருக்க இப்போது சந்திரிகா மற்றுமொரு கவர்ச்சியான வார்த் தையை அட்டகாச மாக அள்ளிவீசி விட்டிருக்கின்றார். அதுதான் பொதுக் கட்டமைப்புத் தொடர் பாக தனது சனாதி பதி பதவி பறி போனாலும்சரி, தனது அரசு கவிழ்ந்து போனாலும் சரி, விடு தலைப்புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தியே தீரு வேன். இனி எவரது கருத்துக் களுக்கும் இடம்கொடுக்கப் போவ தில்லையென இதில் எந்தள வுக்கு விசுவாசமாக சந்திரிகா நடக்கப் போகிறார் என்பது தெளி வில்லை.

அவர் இவ்வாறு கூறிய இந்தக்காலம் இலங்கை தொடர் பான குறிப்பாக சிங்கள அரசு தொடர்பாக சர்வதேச சமூகத்தின் மாற்றத்தின் விளைவால் எழுந்த தாகவும் இருக்கலாம்.

அதாவது புலிகளின் தனி நாட்டுக் கோரிக்கையை அமெ ரிக்கா எதிர்க்கவில்லை யென கிறிஸ்ரினாறொக்கா கூறியுள்ள பின்னணியிலும் தமிழீழ விடு தலைப்புலிகளின் அரசியல் குழுவினர் சர்வதேச நாடுகளுக்கு மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் பின் சர்வதேச சமூகத்தில் விடு தலைப்புலிகளுக்கு ஏற்பட்டுள்ள அபிப்பிரா யத்தின் பின்னணியி லும் ஊடக வியலாளர் மாமனிதர் சிவராமின் படுகொலையின் பின் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள எதிர்ப் புணர்வுகளின் பின்னணி யில் சந்திரிகாவின் வாயில் இருந்து இந்தவார்த்தை வந்திருப் பது என்பது ஏனையோரைத் திருப்திப் படுத்த வழமையாக சந்திரிகா விடுகின்ற வெறும் அரசியல் வார்த்தையாக இருக் கலாமெனவும் சந்தேகிக்கத் தோன்றுகின்றது. சிலவேளை அவ்வாறாகவும் இருக்கும். இதே வேளை கடந்தகாலங்களில் தனது பதவிக்காக ரணிலின் அரசை தனது நிறைவேற்று அதிகாரம் மூலம் கலைத்து விட்டு, பின்னர் இரண்டு வருடங் களுக்கு தேர்தல் எதுவும் நடக் காது என அறிவித்ததும் அரசியலமைப்பினை மாற்றி தனது பதவியில் தொடர்ந்து இருக்கலாமா என பல வழிகளி லும் ஆலோசித்து வந்த சந்திரிகா.


இப்போது தனது பதவியை பற்றியும் தனது அரசு கவிழ்ந்து போவது பற்றியும் கவலைப் படப் போவதில்லை. பொதுக் கட்டமைப்புத் தான் முக்கியம் எனக்கூறி யிருப்பதில் எந்தளவு நம்பகத் தன்மை உண்மைத் தன்மை. விசுவாசம் என்பன இருக்கின்றது என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். மாறாக சந்திரி காவுக்கு சுடலை ஞானம் பிறந் துள்ளதா? உண்மையில் பொதுக் கட்டமைப்பினை ஏற்படுத்தி மக்களின் வாழ்வுக்கு வழிசமைக் கப்போகின்றாரா? என்பதனை சந்திரிகா கூறிய வார்த்தைகள் எப்போது செயல்வடிவம் பெறு கின்றதோ அப்போதுதான் கண்டு கொள்ளமுடியும்.

அல்லது தனது அரசு சார்பாக சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள எதிர்ப்பு அலைகளை யும் விடுதலைப்புலிகள் சார்பாக சர்வதேசமட்டத்தில் ஏற்பட்டுள்ள சாதகமான மாற்றங்களையும் கருத்திற்கொண்டு கூறிய வெறும் அரசியல் வார்த்தைகளா என்ப தனையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

மாறாக இது சந்திரிகாவுக்கு ஏற்பட்ட சுடலைஞானமாக இருந்து அதற்கு ஏற்றால்போல் நடவடிக்கை களை எடுத்தால் நாட்டுமக்கள் சார்பாக ஆரோக்கியமாகவும் வள மான இலங்கைத்தீவினை கட்டி யெழுப்ப வாய்ப்பாகவும் அமை யும். இதை விடுத்து தனது வழமை யான அரசியல வார்த்தைகளாக இதையும் கூறியிருப்பாராயின் இனிவரும் காலங்களில் இந்நாட் டின் நிலைமை மோசமான தாகவே இருக்கும்.

# அயராது உழைத்த வீரன் லெப்.குணதாஸ்

க.மிரேசு



அன்றைய நாட்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் அடர்ந்த காடுகளுக்கே சொந்தமாக இருந்தது. கெரில்லா கரந்தடிப் போராட்டத்திற்கும், மரவு வழிப் போராட்டத்திற்கும் இடைப்பட்ட காலம் என்பதனால் எமக்கு காடுகளே சொந்தமாகி விட்டிருந்தன.

இதனால் காடுகளுக்குள்ளேயே எமது அனைத்துப் பாசறைகளும் இருந்தன. அதில் ஒன்றுதான் எமது லதி மருத்துவ முகாமாகும். அதற்கு "விக்ஸ்" தோட்டம் என்றும் சொல்வதுண்டு. இதில் தான் எந்நேரமும் சிரித்த முகமுடனேயே உலாவித்திரியும் லெப்.குணதாஸ் (திருத்தணி) காட்டு வாழ்வின் துயர் நிறைந்த நேரங்களில் எல்லாம் நகைச்சுவையுடனேயே எமது மனவலுவை சீர்செய்துவந்தான்.

லெப்.குணதாஸ் எப்பொழுதுமே நகைச்சுவை உணர்வுடன் இருப்பதும், பழகுவதும் மட்டுமல்ல எந்நேரமும் போராட்டத்தின் பால் உயரிய சிந்தனையும் தலைவரிடத்தில் மிகுந்த நம்பிக்கையும் வைத்திருந்தான். மக்களின் துயரங்களைக் கண்டு எந்நேரமும் மனம் குழம்பும் குணதாஸ் மிகச்சிறந்த வீரன்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாளாந்த கதைகளாக தமிழ் மக்களின் படுகொலைகளும் சித்திரவதைகளுமே பரவத்தொடங்கின. எங்கு பார்த்தாலும் மரண ஓலம் சிங்கள கொலை வெறியர்களின் கொடூரம் அரங்கேற்றம். மிக மோசமாகவும் அசிங்கமாகவும் கோரத் தாண்டவம் ஆடத் தொடங்கிவிட்டது. இந்த கொடூரங்களில் இருந்து எம் மக்கள் விடுபடாத நிலையில் இருந்தனர்.

தனது இரு சகோதரர்கள் சிங்கள படைகளால் கொடூரமாக கொலைசெய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் அவனது ஆன்மாவை உறுத்தத் தொடங்கியது. எந்தவித காரணமுமில்லாமல் தனது சகோதரர்களை படுகொலை செய்த சிங்கள வெறியர்களை பழிவாங்கவேண்டுமென மனதில் சித்தங்கொண்டான். நிச்சயமாக எதிரியை பழிவாங்கியே தீருவது எனும் மன உறுதியை வலுவடையச் செய்தான். இப்படியானதொரு மன வலுவூட்டலில்தான் தாயக விடுதலை அவனது கவனத்தை ஈர்த்தது.

1990 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் போராட்டத்தில் இணைந்துகொண்ட லெப். குணதாஸ் அடிப்படை பயிற்சி முடிந்த உடனேயே புலனாய்வுத் துறைக்கென தேர்ந்தெடுக்கப்பட்டான். தனது தனித் திறமையினாலும், விடாமுயற்சி என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டே விடுதலைப் போராட்டப் பாதையில் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பியவனுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

புலனாய்வுத்துறைப் பிரிவில் இணைந்துகொண்ட லெப்.குணதாஸ் தனது முழுமுயற்சியையும் ஒன்று திரட்டி தனது கடமையைசெய்யத் தொடங்கினான். ( [illegible] வதாக மட்டகளப்பு மா[illegible] கொக்கட்டிச் சோலை பிரதேசத்தில் தனது புலனாய்வு சார்ந்த வேலைத்திட்டத்தினை செய்யத்தொடங்கினான்.

தகவல் திரட்டல், முகவர் அமைத்தல், செய்தி பரிமாற்றமென எல்லா வேலைகளையும் திறம்பட செய்து முடிக்கின்ற சிறப்பான ஆளுமையைக்கொண்டிருந்தான். தான் சேகரித்த தகவலை மிக மிக இறுக்கமாக வைத்திருந்து உரியவர்களிடையே சேர்க்கும் பழக்கமும் அவனிடம் இருந்தது.

ஒரு நாள் தனக்கென தரப்பட்ட பணி ஒன்றினை செவ்வனே செய்து சேகரித்த தகவலுடன் நீண்டதூரம் நடந்து வந்து எமது காட்டுப் பாசறைக்கு கொண்டு வந்திருந்தான். குறித்த பொறுப்பாளர் அங்கு இருக்கவில்லை. அவர் இல்லாததனால் தனது தகவலை வேறு யாரிடமும் கொடுக்காமலேயே சென்று விட்டான். பின்னர் அதேயளவு தூரத்தைக் கடந்து வந்து 05 நாட்களுக்கு பின்பே அந்தத் தகவலை பொறுப்பாளரிடம் கொடுத்தான். அவன் பாதுகாத்த அந்தத் தகவல் பின்பு நல்ல பயனைக் கொடுத்து பெரியதொரு துரோகி சார்ந்த நடவடிக்கையைக் கட்டுப்படுத்தமுடிந்தது.

லெப். குணதாஸ் புலனாய்வு சார்ந்தவேலைகளில் எந்தளவு ஆர்வமாக இருந்தானோ அதேபோலவே செயற்பாட்டில் எல்லாவேலைகளிலும் ஆர்வமாக உற்சாகத்துடன் இருந்தான். கற்பதிலும், தான் கற்றதை கற்பிப்பதிலும் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டான்.

பத்திரிகை படிப்பது என்றால் தலையங்கம் தொடக்கம் மரண அறிவித்தல் வரை ஒன்று விடாமல் வாசிப்பான். வாசிப்பதனை எல்லோரிடமும் கூறி அது பற்றி நல்ல விமர்சனம் செய்வான். எமது இயக்க வரலாறுகளை படித்தும், பிறரிடம் கேட்டும் அனைத்து போராளிகளுக்கும் சிறு சிறு விளக்கமுடன் தெளிவை ஏற்படுத்துவான்.

லெப்.குணதாஸ் எதிரியைப் பழிவாங்கவேண்டும் என்பதில் குறியாக இருந்தான். தனது புலனாய்வுச் செயற்பாட்டின் ஊடாக பலபெறுமதி வாய்ந்த தகவல்களை எடுத்து வீரவேங்கை குமுதன் கப்டன் சடான் ... கப்டன் வொணி ஆகியோருடன் சேர்ந்து சில முக்கியமான தாக்குதல்களை செய்து முடித்தான். தானே முன் நின்று எடுத்த தகவல்களை பொறுப்பாளரிடம் காட்டி அனுமதிபெற்று தனித் தாக்குதல் சிலதும் செய்துள்ளான்.

இவனது சண்டைத்திறனை எல்லோரும் மெச்சிய ஓர் நிகழ்வு 1991 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. கொக்கட்டிச்சோலையிலிருந்து தரவைக்கு எமது அணி ஒன்று வர வேண்டி இருந்தது. அந்த காலப்பகுதியில் பத்தரைக்கட்டைப் பாதையை கடப்பது எரிமலைக்குள் புகுவதாகவே இருந்தது. சிங்கள இராணுவம், துரோகக்கும்பல், புளொட் மோகனின் துணைப்படை இப்படி பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே அந்தப் பாதையை கடக்கவேண்டும். அதைவிட வேறு பாதையும் இல்லை. நிச்சயமாக எதிரி அந்தப் பாதையில் கிடப்பான் என்பது தெரியும். நாமும் நிச்சயமாக அந்த பாதையில்தான் வருவோம் என்பது எதிரிக்கும் தெரியும். இதைத்தான் விசப்பரீட்சை என்று சொல்லுவார்கள். இது எமது மொழியில் அழகாக குணதாஸ் சொன்னான் சிங்கமும் புலியும் விளையாடப்போகுது முடிவில் வெற்றி புலிக்கே என்று நகச்சுவையுடன் சொல்லிவிட்டு நகரத்தொடங்கினான்.

பாதை காட்டி போதல் என்பதனால் எமது பொறுப்பாளர் உருத்திரா ஆசிரியர் உட்பட அனைவரும் அவனுக்குப் பின்னால் நகர்ந்தோம். மச்சான் மாஸ்ரர் கவனம் என்று சொல்லி விட்டு முல்லாமுனை வயலுக்குள் எம்மை நகர்த்தினான்.

விடிந்தும் விடியாத பொழுதும் நிச்சயமாக எதிரி நடுங்குவான். அவன் தாக்குவான். தாக்கும் முன் நாம் தாக்கிக் கொண்டே ஓட வேண்டும் என்று சொல்லி விட்டு சந்தேகமான இடத்தை நோக்கிச் சுடுகிறான். அவனோடு கப்டன் சுதாகரனையும், லெப் தனுகரனையும் கூட்டிக்கொண்டு சண்டைக்கு முன்னேறுவதுபோல் சுட்டுச்சுட்டு பாசாங்கு காட்ட நாம் உருத்திரா மாஸ்ரரின் கட்டளையுடன் போகவேண்டிய பாதையூடாக ஓடினோம். குணதாஸின் தந்திரோபாயத் திட்டத்தால் எமக்கு எதிரி தாக்கவில்லை. ஏதோ பெரிதாக நடக்கப்போகிறது என்று நினைத்து தங்களிடமிருந்த ரவைகளை தொடராக அடித்துவிட்டு வவுணதீவுப் பக்கமாக ஓடத் தொடங்கினான். எதிரி அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது அணி பிரச்சினை இல்லாமல் தரவையை நோக்கி பயணமானது.

எந்தவிடயத்தையும் அதிரடியாக முடிவெடுத்துச் செய்யும ஆற்றல்கொண்ட குணதாஸ் காட்டுப் பாசறைகளில் நடந்த பல சமர்களிலும் புலிப்பாய்ச்சல், யாழ்தேவி தவளைத் தாக்குதல் உட்பட பல தாக்குதல்களிலும் பங்குகொண்டு தனது சண்டைத்திறனை உறுதி செய்தான். இவனது போராட்டப் பங்களிப்பு பல களங்களாக விரிந்து இறுதியில் 1997 வாழைச்சேனை சுக்காவிலில் நடந்த தாக்குதல் ஒன்றில் வீரகாவியமானான். இவனது சாவு சுதந்திரப் போராட்ட வாழ்வில் பல சரிதங்களை என்றும் நினைவில் நிறுத்தும்.



சிவராம் தமிழ் மக்களின் போராட்ட நியாயங்களை சர்வதேசத்தின் முன் கொண்டு சென்ற சிறந்த ஊடகவியலாளர். அவருடைய எழுத்துக்கள் தமிழ்த் தேசியத்தின் பால் கூர்மையடைய எதிரியின் துப்பாக்கிகள் அவரை குறிவைத்தன.

நியாயங்களுக்காக போராடிய ஒரு கருத்தாளன் அவனின் துறைசார்ந்த களத்திலேயே வீழ்த்தப்பட்டிருக்கிறான்.

சிவராம் அவர்களை அழிப்பதன் மூலம் கருத்துக்களை அழிக்க நினைப்பவர்கள் உண்மையான கருத்துக்களை அதிலும் உயிர்ப்புள்ள கருத்துக்களை அழிக்கமுடியாது என்பதை புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். அந்த வகையில் சிவராம் அவர்களின் கருத்துகளும் அவருடைய வாழ்வும் இந்த மண்ணுக்குச் சொந்தமானது. உலகம் உறங்கும் நேரம் விழித்திருந்து எழுதி உலகை விழிப்படைய செய்தவர் மாமனிதர் சிவராம் அவர்கள்.

சிறி.இந்திரகுமார்.



# டி.சிவராம்

# சிவராம் தெளிவான பார்வை கொண்டவர்

## -எம்.கோபாலரத்தினம்



நான் பத்திரிகைத்துறைக்குக் கால்வைத்து ஆறு ஆண்டுகளின் பின்னரே மாமனிதர் டி.சிவராம் இந்த மண்ணில் பிறந்தார்.

இதை அவரே மட்டக்களப்பில் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் இரண்டாயிரமாம் ஆண்டில் எனக்கு நினைவு விருது வழங்கிப் பாராட்டிய நிகழ்வில் தெரிவித்தார்.

நான் பத்திரிகைத்துறைக்கு வந்து ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் சிவராம் பிறந்ததும் ஊடகத்துறையிலும் அரசியல் ஆய்விலும் இராணுவ ஆய்விலும் அவர் அறுநூறு ஆண்டுகளுக்குரிய அனுபவம் பெற்றிருந்தார்.

மட்டக்களப்பில் இரண்டாயிரமாம் ஆண்டில் கிழக்கிலங்கையின் முதல் தினகரன் பத்திரிகையாக வெளி வந்த தினக்கதிர் பத்திரிகையில் சிங்கள வாக்குறுதிகளும் தமிழ் அரசியலும் என்ற அரசியல் கட்டுரைத்தொடர் ஒன்றை நான் எழுத ஆரம்பித்தேன்.

1954இல் இரண்டாவது எலிசபெத் மகாராணியார் இலங்கைக்கு வருகைதந்தார். கொழும்புத்துறை முகத்தில் மகாராணியார் வந்திறங்கும்போது அவரை வரவேற்புச் செய்யப்பட்ட ஏற்பாடுகளில் மகாராணியாரை வரவேற்பதற்கு கொழும்பு மேஜராக இருந்த உருத்திரா மறுத்துரைத்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. மாநகரில் மகாராணியாருக்குச் சிறப்பான வரவேற்பளிக்கும் அதில் தமிழரான மேஜர் உருத்திரா அறிவித்தார். இதைப்பற்றி சிவராம் இது எனக்குத் தெரியாத விடயம் என்றார். பின்னர் எனது கட்டுரை களை படிக்கும்போது உங்களின் பழைய ஆசிரிய தலையங்கங் களைப்படிக்க விரும்புகின்றேன் என்பார்.

எந்த விடயத்தைப்பற்றியும் ஆழமாக ஆராய்ந்து சிந்தித்து எழுதும் ஆற்றல் கொண்ட சிவராமின் கட்டுரைகளுக்கு எவரும் இலகுவில் பதில்சொல்லிவிட முடியாது. இலங்கையின் அரசியலில் மட்டுமல்ல உலக அரசியல், உலக நாடுகளின் இராணுவ பலம், உத்திகள், விடுதலைப்போராட்டங்கள் பற்றி எல்லாம் விபரமாக விளக்கமாக வாசகர்களுக்குக் கொடுகின்றதிறமை படைத்தவர். சிவராமின் கட்டுரைகள் எங்களுக்கு மட்டுமல்ல இலங்கையில் தமிழ் பத்திரிகையாளர்களுக்குப் பல தகவல்களையும், தரவுகளையும் கொடுத்து அவர்களையும் கட்டுரை எழுதும் வடிவத்தைக் கற்றுக்கொள்ள உதவினார் என்றும் சொல்லலாம்.

# சிவராமின் இழப்பு பாரதூரமானது

## -மு.திருநாவுக்கரசு



ஒரு பத்திரிகையாளனுக்கு இருக்கக்கூடிய எல்லா அடிப்படை ஒழுக்கங்களும் சிவராமிடம் இருக்கிறது. அவர் எப்போதும் மக்களுக்குள் இருந்து எழுதியவர். சிவராம் எப்போதும் துறை சார்ந்தவர்களைச் சென்று சந்திப்பார். உள்நாட்டவர்கள், வெளிநாட்டவர்கள் மற்றும் அரசியலோடு சம்பந்தப்பட்டவர்கள் என எவரையும் சென்று சந்திப்பார். இதனால் அவரது கருத்துக்கள் எப்போதும் வரட்சி அற்று துடிப்புடன் இருக்கும். தமிழ் பத்திரிகை உலகிலும் சரி, ஆங்கில பத்திரிகை உலகிலும் சரி சிவராமுக்கு ஒரு உயிர்த்துடிப்பான இடம் வருவதற்கு இதுவும் பிரதான காரணங்களில் ஒன்று.

எப்போதும் அந்தந்த துறை சார்ந்த களத்திற்கு செல்வார். இது புதிதல்ல. ஆனால் சிவராம் அதனை உணர்வு பூர்வமாகச் செய்வார். அல்லது துறைசார்ந்தவர்களோடு தொடர்புகளை வைத்திருப்பார், அபிப்பிராயங்களை சொல்லுதல் மற்றும் அபிப்பிராயங்களைக் கேட்டுக் கொள்ளுதல், பிரச்சினைகள் தொடர்பாக கதைத்தல், கதைத்தவற்றை உடனே எழுத அவசரப்படமாட்டாமல் அதைப் பொருத்தமான இடம் திலும் தொழில் கலந்திருந்தது. இது அவரது பிரதான குணாம்சங்களில் ஒன்று.

இதைவிட ஆங்கிலத்திலும் தமிழிலும் இருமொழிப்புலமை பெற்றிருந்தார். தமிழ் கதைக்கும் போது மிக மிக பெருமளவுக்கு ஏனைய ஆங்கிலச் சொற்களை தவிர்த்தே வந்தார். இருந்தும் சில வேளை இயல்பாக ஆங்கிலச் சொற்கள் வரும். இதைவிட சிங்களத்திலும் அவருக்கு மொழிஅறிவு இருந்தது. சிங்களத்தில் எந்தளவுக்கு மொழிப் புலமை பெற்றிருந்தார் என்று எனக்குத் தெரியாது. ஊடகத்துறையை பொறுத்தவரை இலங்கைத்தீவில் மும்மொழி அறிவு அவசியமானது. அது சிவராமுக்கு இருந்தது.

மற்றது எடுத்த எடுப்பில அபிப்பிராயம் சொல்லும் மனிதர் சிவராம். சிவராமின் இழப்பு தமிழ் ஊடகத் துறைக்கு பாரதூரமானது. எனக்கும் சிவராமுக்குமிடையே உறவு எப்போதும் சுமுகமாகவே இருந்தது. சிவராமின் சிறப்பு ஒரு விடயத்தின் பால் எடுத்தவுடன் அபிப்பிராயம் சொல்லுதல். இதைவிட சிவராமின் முக்கியமான இயல்புகளில் ஒன்று எளிமை. எல்லோரிடமும் சரளமாகவும், இயல்பாகவும் பேசக்கூடியவர். அவர் மாளிகையிலும் வாழும், குடிசையிலும் வாழும்தன்மை கொண்டவர். உயர் மட்டத்தில் உள்ளவர்களுடனும் சரி அதற்கு எதிரானவர்களுடனும் சரி ஒரேகளத்தில் இயல்பாகப் பழகும் தன்மை சிவராமின் தனித்துவமான பண்பாகும்.

வரும்போது இணைத்துக்கொள்ளுதல் என்பன அவரது தனிப் பண்பாக இருந்தது.

அவரது உரையாடல் எப்போதும் வீண்போவதில்லை. மரத்தடிகளிலும் சரி, வீடுகளிலும் சரி பஸ் நிலையங்களிலும்சரி, எங்கென்றாலும் அவர் கதைப்பது ஊடகத்துறை பற்றித்தான். அது தொழில் சார்பாக அவர் நிபுணத்துவம் பெறுவதற்கு காரணமாயிற்று. எப்போதும் சிவராம் தொழிலில் இருந்து தன்னை பிரித்து வைத்திருக்கவில்லை. அவரது அன்றாட நடவடிக்கைகள் அனைத்

சுழியன்

# தராகி கள வசியம் கொண்டவர்

## -நிலாந்தன்



சமாதான உடன்படிக்கையின் பின் தராகி என்னை மல்லாவியில் சந்தித்தார். அப்போது அவர் என்னிடம் கூறினார். "எங்கட தொழில் தெரிவுகளில் எப்போதுமே டொக்ரர், என்ஜினியர், எக்கவுண்டன், லோயர் இப்படியான தொழில் வகைக்குள் இதழியல் என்ற தொழில்துறை வரவில்லை. சீதனக்கவர்ச்சி மிக்கதும், சம்பளக் கவர்ச்சி மிக்கதும், புகழுக்குரியதும், கௌரவமானதும் என்ற அந்த

திற்குள்ளாக வந்தவர்கள் என்றும் இவர்களில் பெரும்பாலானவர்களிடம் ஒரு மரபுாதியான அணுகுமுறைதான் இருக்குமென்றும் கூறினார்.

மரபுரீதியான கல்விமுறைக்கு உட்பட்டு வராமல் கிளர்ச்சிகளுக்கு ஊடாகவும், போராட்ட இயக்கங்களுக்கு ஊடாகவும் வந்தவர்கள் தான் இப்போது மரபு ரீதியான ஊடகவியலாளர்களை விட சிறப்பான

இடத்தை பத்திரிகைகள் பெற்றிருக்கவில்லை. இதனால்தான் ஊடகத் துறை என்பது எங்களிடம் போதியளவு வளர்ச்சிபெற்றிருக்கவில்லை. அத்தோடு

இப்பொழுது ஊடகத்துறையில் ஈடுபடுகின்றவர்கள் ஒரு பாரம்பரியத்

வர்களாகவும், அதிக களவசியம் கொண்டவர்களாவும் காணப்படுகின்றனர். தராகியும் அப்படியொரு கிளர்ச்சிப் பாரம்பரியத்திற்குள்ளாக வந்த ஒரு ஊடகவியலாளர்தான். சிங்கள சமூகத்திலும் இப்படியான பல ஊடகவியலாளர்கள் உண்டு. ஆனால் தமிழ் ஊடகத்துறையைப் பொறுத்தவரை ஒரு சிலரே உள்ளனர். அவர்களுள் தராகியும் ஒருவர்.

மரபு ரீதியான முறையில் வந்த ஊடகவியலாளர்களைவிட கிளர்ச்சிப் பாரம்பரியத்திற்குள்ளாக வந்த ஊடகவியலாளர்கள் எப்போதும் துலக்கமான [illegible]டங்களில் வேறுபடுகின்றார்கள். [illegible]வ்வாறு எனின் மரபுரீதியாக வந்த ஊடகவியலாளர்கள் பிரச்சினை என்று வரும்போது விடயங்களை தட்டாமல் முட்டாமல், புள்ளி விபரங்களோடு, சாட்சியங்களோடு கதைப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் பிரச்சினையான இடங்களில் நழுவி விடப்பார்ப்பார்கள். ஆனால் கிளர்ச்சி பாரம்பரியத்திற்குள்ளாக வந்தவர்களிடம் பிரச்சினையின்போது கருத்துக்களை நேருக்குநேர் கூறுகின்ற தன்மை உண்டு. அதனால் வரும் ஆபத்துகளையும் எதிர்நோக்குகின்ற துணிச்சலும் அவர்களிடம் காணப்படும். இதை தராகி முழுக்க முழுக்க வைத்திருந்தவர். இவரிடம் இருந்த இந்த துணிச்சல்தான் அவர் கொலை செய்யப்படவும் காரணம்.

தராகியின் தனித்துவம் என்று கூறும்போது ஒன்று மேற்கூறியது மற்றையது அவரிடம் இருந்த ஆங்கிலப் புலமை. தமிழிலும் ஆங்கிலத்திலும் தனது ஆய்வுகளை குறிப்பாக இராணுவ ரீதியான விமர்சனங்களையும், தமிழரின் உள் விவகாரங்களையும் பெருமளவுக்கு ஒப்பீட்டு ரீதியில் சரியாகக் கொடுத்தவர் தராகி தான். இவ்வாறான விமர்சனங்களை எழுதக்கூடிய சொற்கவர்ச்சியும், துணிச்சலும் அது சிங்கள மக்களிடம் சென்றடைவதற்குத் தேவையான சொல் முறையும் அவரிடம் இருந்தது.

மேலும் தராகியின் பிரதான ஊடகம் ஆங்கிலம்தான். சமாதான காலத்தின் பின்தான் ஓரளவுக்கு தமிழுக்கு வந்தவர். முன்னர் சரிநிகர் காலத்திலும் சற்று பங்களிப்புச் செய்திருந்தாலும் அவரது பிரதான ஊடகம் ஆங்கிலம். தமிழ் அவரது உப ஊடகம்தான். இந்த வகையில் எங்களிடம் கிளர்ச்சிப் பாரம்பரியத்திற்குள்ளாக வந்த ஊடகவியலாளர்களில் தமிழ் ஆங்கிலம் என்ற இருமொழி ஊடகவியலாளராக இருந்தவர் தராகிதான். தராகியின் தமிழைவிட ஆங்கிலத்தில்தான் சொல்லாட்சி அதிகம். அவரது ஆங்கிலக் கட்டுரைகளில் விடயங்களை அறிவியல் ரீதியாக, தர்க்க ரீதியாக சாட்சியங்களோடு விடயங்களை அப்படியே நறுக்காகச் சொல்கின்ற தன்மை இருந்தது. இந்தச் சிறப்பு அவரது தமிழ் கட்டுரைகளில் இல்லையென்ற ஒரு விமர்சனம்.

காணப்பட்டது. அதில் ஓரளவு உண்மையும் இருந்தது. ஆனால் தற்காலத்தில் தமிழிலும் அவர் அவ்வாறான சிறப்பை பெற்று வந்த காலத்தில் கொல்லப்பட்டுவிட்டார்.

இவ்வாறு நோக்குகின்றபோது தராகியின் இழப்பு பெரும் இழப்புத்தான். அவரைப்போன்று இரு மொழிப் புலமை கொண்ட கிளர்ச்சிப் பராம்பரியத்திற்குள்ளாக வந்த ஒருவரைத் தேடவேண்டியுள்ளது.

தராகியை கெ.:லைசெய்தவர்கள் என்ன நோக்கத்தோடு செய்தார்களோ தெரியாது. ஆனால் அவர் கொலை செய்யப்பட்டதன் மூலம் தமிழர்களின் பிரச்சினைகளை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுசெல்கின்ற அந்த இடத்திற்கு ஒரு தற்காலிக பின்னடைவை ஏற்படுத்திவிட்டார்கள். ஆனால் எங்களுடைய இதுவரையிலான ஈழப்போராட்ட வரலாறை உற்றுநோக்கினால் ஒன்றை விளங்கிக்கொள்ளலாம். அதாவது வரலாறு எப்போதும் வெற்றிடங்களை விட்டுவைப்பதில்லை. என்பதனை.

தராகியை கொலை செய்தவர்கள் புலிகளுடைய ஆள் என்றோ அல்லது புலிகளுக்கு ஆதரவான ஒருவர் என்றோ சந்தேகித்துத்தான் கொலை செய்திருக்கிறார்கள். இதன்மூலம் தராகிக்கு இருக்கின்ற சர்வதேச ஆதரவு, சர்வதேச பிரபல்யம் எல்லாமே புலிகளுக்கான அனுதாபமாக மாறிக்கொண்டிருக்கிறது. ஒரு ஊடகவியலாளரை பாதுகாக்கமுடியாத கொழும்பு தமிழர்களுக்கு உருப்படியான தீர்வை வழங்குமா என சந்தேகம் எழுந்துள்ளது.

தராகியை கொலை செய்ததன் மூலம் கொலையாளிகள் எதிர்மறையான விளைவுகளையே சந்தித்திருக்கின்றார்கள் என்றே கூறவேண்டும்.

---

# சிவராமின் இழப்பு பேரிழப்பு

-தி.தவபாலன்



சிவராம் கையாளும் நவீன முறையிலான ஊடகப்பாணி என்பது எந்தத் தலைமுறைக்கும் பொருத்தமானதாக உள்ளது. காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்கின்ற ஒரு ஊடகவியலாளர் என்பது அவரது ஒரு சிறப்பு.

தமிழ்த்தேசிய ஊடகத்துறையைப் பொறுத்தவரை சிவராம் மிக தெளிவான பார்வை கொண்ட ஒரு ஊடகவியலாளராக காணப்படுகின்றார். சர்வதேச ரீதியில் இவருக்கு நல்ல மதிப்பு இருக்கின்றது.

இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டு ஊடகவியலாளர் பெரும்பாலும் முதலில் தாங்கள் சந்திக்கக்கோருவது தராகியைத் தான். இதற்குக் காரணம் அவரது சிறப்பு தான். இதைவிட சிவராம் எளிமையானவர். சமூகத்தில் சகல மட்டங்களுடன் சகஜமாகப் பழகுவார். ஒரு தலை சிறந்த ஊடகவியலாளர் என்ற நிலைக்கு அப்பால் தனது தகவல்களுக்காக அனைவருடனும் இறங்கி பழகுகின்ற தன்மையும் முக்கியமானது. பெரும்பாலானவர்கள் சமூகத்தில் உயர்ந்த ஒரு மட்டத்திற்குச் சென்றுவிட்டால் கீழ் உள்ளவர்களை மதிப்பது இல்லை. ஆனால் சிவராம் இதற்கு முரணானவர். அவ்வாறான இடங்களில் இவர் ஓர் சாதாரண செய்தியாளனாகக் கூட மாறிவிடுகின்றார்.

தமிழர்களுடைய பிரச்சினைகளை அறிவதற்கு முதலில் சர்வதேசம் தட்டுவது தமிழ்நெற் இணையத்தளத்தைத்தான். அந்தளவுக்கு அதனை வளர்த்தெடுத்த பெருமை சிவராமுக்கே சாரும்.

இதைவிட ஆங்கிலத்தளத்தில் இயங்கிய ஒரேயொரு தமிழ் ஊடகவியலாளர் இன்று எங்களிடம் இல்லை. சிவராமின் இழப்பு எங்களுக்கு பேரிழப்பாகவே உள்ளது. சிவராம் கூறியது போல "நடேசனை கொல்லலாம், சிவராமைக் கொல்லலாம். ஆனால் தமிழ்த் தேசிய ஊடகத் துறையைத் தகர்க்கமுடியாது" என்ற கருத்தை கூறியிருந்தார். இனியும் உண்மையான தமிழ்த் தேசியத்தை வெளிப்படுத்த நினைக்கின்ற ஊடகவியலாளர்கள் இதனை கண்டு அஞ்சிவிடப் போவதில்லை. மாறாக அதற்கு எதிராகவே செயற்படுவார்கள்.

---

# சிவராம் சிறந்த ஊடகவியலாளர்

கருணாகரன்

இராணுவ ஆய்வாளராக ஊடகத் துறையில் பிரவேசித்த தராகி பின்னர் அரசியல் ஆய்வுக் கருத்துச் சொல்கின்றவராக மாறிவிட்டார். தராகியின் எழுத்துக்களுக்கு கவர்ச்சி இருந்தது. விமர்சனம் இருந்தது. பின்னாளில் அது குறைந்துவிட்டது. இராணுவ, மற்றும் அரசியல் ரீதியான ஆய்வுகளை அறிவு ரீதியாக விரிந்த கண்ணோட்டத்தைப்பார்த்தும் எழுதியும் வந்த ஒருவர்.

ஒரு ஊடகவியலாளர் என்றால் அதற்குரிய ஒரு பண்பினை தமிழர் தராகியை தவிர வேறு ஒருவரிடமும் காணமுடியாது.

ஒரு ஊடகத்தை அதன் அலுவலகத்தில் இருந்து கொண்டு செயற்படுத்த முடியாது என்பதில் தராகி உறுதியானவர். அவரும் அப்படித்தான் செயற்பட்டார். எந்த நேரமும் ஊடகத்தொழிலோடு பின்னியிருந்தார். தராகி அவர்கள். எல்லா இடங்களிலும் எல்லோரிடமும் எல்லாத் தளங்களிலும் தராகிக்கு உறவுண்டு. அதுவும் அவரின் சிறப்புக்குக்காரணம்.

ஒரு சர்வதேச ஊடகவியலாளனாக இருந்த தராகி ஒரு தமிழ் ஊடகவியலாளர் என்பதையும் காட்டிக் கொண்டார். அதாவது தான் சார்ந்த இனம் ஒடுக்கப்பட்டிருக்கின்றது. தன்னுடைய இனம் விடுதலை பெறவேண்டும் எனத் தமிழ்த்தேசியம் தொடர்பாக ஒரு கருத்து இருந்தது. தமிழ் ஊடகவியலாளர்கள் தரமானவர்களாக வரவேண்டும் என்பதற்காக சிவராம் அவர்கள் எப்போதும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது கடும் விமர்சனங்களை முன் வைத்து வந்தார். இதைப் புரிந்துகொண்ட ஊடகவியலாளர்கள் அத்தனைபேரும் தராகியை மதித்தனர்.

அவரோடு உறவை பேணிக் கொண்டனர். ஏனையோருக்கு தராகி சிம்மசொப்பனமாக இருந்தவர். சர்வதேச ரீதியில் தமிழரின் பிரச்சினையை கொண்டு வருவதில் தராகி உறுதியாக இருந்தார். இதுதான் அவரின் கொலைக்குக் காரணமாகலாம். சிங்கள தேசத்தால் இவ்வாறான கொலை தராகியுடன் நின்று போவதில்லை. தமிழ்த் தேசியப்பிரச்சினையை எவர் எவர் வெளியில் கொண்டு வருகின்றார்களோ அவர்கள் எல்லாம் கொலைசெய்யப்படலாம். ஆனால் என்றுமேகொலையாளிகள் தங்களின் இலக்கை அடையப் போவதில்லை.

---


# அக்கினி கக்கிய அற்புத "பேனா"

"அநீதிகளைச் சுட்டெரிக்கும்
அக்கினி கக்கிய அந்த அற்புதப் பேனா
அஸ்தமனமாயிற்று"
கனத்த சேதியொன்றைக் காவிவந்து
இதயத்தில் இடியிறக்கிப் போயிற்று
நேற்றைய காற்று.
உண்மையின் தரிசனமாய் உரிமைக்குரலுதிர்த்த
உத்தமத் தமிழனவன் கட்டுடையாக் கட்டுரைகள்
உதிரம் வடியும் எங்கள்
ஊமை விழிகளிலே தெறிக்கிறது.
பூடகமான வைகள் கிடையாது அவன் படைப்பு
பொழிப்புரை தேவையில்லை.
ஊடகத்திற்குரித்தான பாணி அவன் பாணி.
பொய்யுரைத்தா செத்தான் நாம் பேசாமலிருப்பதற்கு?
அவன் தான் யதார்த்தவாதியாச்சே!
எப்படிப் பொறுப்போம்?

சாவந்து மிரட்டிய போதும்
சளைத்ததில்லை அவன் பேனா
புயலுக்கும் அசையாத ஆலமரம்
கயமைக்கு சாய்ந்திற்று.
ஆழவேரோடிய ஈழமக்கள் விழிகளுக்குள்
இன்னும் அவன் விம்பமாய் நிற்கின்றான்
நம்ப முடியவில்லை அவன்மேல் அம்பு பாய்ந்ததனை.

வெறும் வேதனைகளே வந்து போகும்
சமாதானச் சாளரங்கள் வழியே
உரிமைக் குரல்வளைகள் குதறப்படுகின்ற
குரூரச் சேதிகளும் கூடவே.
மூடிமறைக்கப்படுகின்ற முகச்சாயங்களுக்குள்ளிருக்கும்
உண்மை முகங்களில் வடிகின்ற வஞ்சனைகளை
தோலுரித்துக் காட்டுகின்ற ஊடகவியலாளனுக்கு
ஆளை வைத்து அடிக்கின்ற கோழைத்தனத்திற்கு
உலகத்தில் வேறெதுவும் உவமைகள் கிடையாது.
கயமைகளே இதையுணர்ந்து
பேனாக்களைச் சுதந்திரமாய்ப் பேசவிடுங்கள்
உலகிற்கும் தெரியட்டும் உங்கள் உண்மைமுகம்
அநீதிகளுக்கெதிராய் அக்கினி கக்குகின்ற
பேனாக்களை அழித்து
பேய் நாக்களே!
பேனாக்களுக்கெதிராய் எச்சரிக்கையா விடுகின்றாய்?
நல்லது. உச்சரித்துக் கொள்.
"உண்மைகள் ஒரு போதும்
உறங்கப் போவதில்லை" யென்று.


க.லிங்கராசா



டி.சிவராம்

# அழுகை விடுத்து எழுவோம்: தென்கொரியா ஒரு பாடம்

அவளுக்கு ஏழு வயது. கவலை மட்டுமல்ல எதுவுமே இல்லாது வெறிச்சோடிப்போனதொரு முகம் யாராவது கூப்பிட்டால் மட்டும் 'முகமனுக்காக என்பதுபோல' போலிப்புன்னகை ஒன்றைச் சிந்திவிட்டு, மீண்டும் வெறிச்சோடிப்போகும். பெண்ணென்பதால் அது அவளுக்கு கைவந்த கலையென்று இலக்கியவாதிகள் யாரும் வாதிட்டுக்கொள்ள முடியாத அளவிற்கு, மழலை வயதினளாக அவள் இருந்தாள். தனது தாயை டிசம்பர்-26 இடம் பறிகொடுத்துவிட்டு, மனம் உடைந்துபோய் தந்தை எனும் ஸ்தானத்திலிருந்து அன்பு செலுத்த முடியாத, தன் உறவிடமிருந்து அந்நியப்பட்டுப்போன நிலை அவளுக்கு ! வேறெங்கேயாவது ஆதரவு தேடவேண்டிய கட்டாயத்தில்! ஒவ்வொருவரின் வேதனையையும் அவரவர்களால் மட்டுமே முழுமையாக உணர்ந்து கொள்ளப்படமுடியும். அதிலும் 20 வருட யுத்த வடுக் களுக்கு மேலாக, சுனாமி ஏற்ப டுத்திய கொடுந்துயரம் வார்த்தைகளின் வரையறைகளையும் தாண்டியது.



எவருமே தன்னைத்தான் உலகிலேயே அதிகமான துன்பத்தில் வாடுபவரென்று வாதிட்டுக்கொண்டாலும், நம் ஒவ்வொருவருக்குமே சோகம் கொள்வதற்கு ஆயிரம் துன்பங்கள் உண்டு. எவருடைய கண்ணீரையும் மறுதலிப்பதற்காக இது எழுதப்படவில்லை உங்கள் ஒவ்வொருவரின் கண்களிலும் அது வெறுக்கப்படும் காரணத்தினால், சில வேண்டுகோள்களுடன் இக்கட்டுரை விரிகிறது. கடந்த காலத்தின் வேதனைகளை எண்ணி கண்ணீர் வடித்து ஆற்றுப்படுத்த முயல்வதை விடுத்து, எதிர்காலம் குறித்த சாதனைகளுக்காய் எழுவதற்கு ஏன் முயற்சி செய்தலாகாது ? அன்பானவர்களே! அழுகையை விட்டெறிந்து எழுகை செய்வோமென நிமிர்வோம் ! அதுவே கண்ணீரின் காரணங்களுக்கு நாம் கொடுக்கக்கூடிய கனமான காணிக்கையும் கூட !

அதற்காக 50 வருடங்களுக்கு முன்பாக உலகின் மோசமாக வறுமைப்பட்டிருந்த நாடென்ற நிலையிலிருந்து, இன்று 'பொருளாதாரப் புலி' என்ற அசாதாரணமான துரித வளர்ச்சிக்கு தன்னை இட்டுச்சென்ற வடகிழக்காசிய நாடான தென்கொரியா பற்றிப்பார்ப்போம். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைப் பொறுத்தவரையில் அவைகளின் வளர்ச்சி மூன்று நூற்றாண்டுகளுக்குக் குறையாத வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. ஆனால், நம்நாட்டைப் போலவேயே நீண்டகாலமாக பாரம்பரிய விவசாயக்குடிமக்களாக இருந்து வந்த ஒரு நாட்டின் குடிமக்கள், குறுகியதொரு 5-6 தசாப்த[...]ில் பாரியதொரு வளர்ச்சியைக் காண முடிந்ததென்றால் ஏன் எம்மால் முடியக்கூடாது ? ?


யப்பானிற்கு வடமேற்காக அமைந்திருக்கும் தென்கொரியா 99,268 சதுர கி.மீ. (இலங்கைத்தீவு 65 610 km²) பரப்பளவைக் கொண்டது. சுமார் 49 மில்லியன் மக்கள் தொகையுடன் உலகி லேயே சனநெருக்கம் கூடியதொரு நாடாகவும் இது விளங்குகிறது. காலாகாலமாக பாரம்பரிய மரபுசார் வழிகளிலே விவசாயத் துறையில் ஈடுபட்டுவந்த தென்கொரிய மக்கள், நவீன உலகின் விழுமியங்களின் பாதிப்புக்குட்படாத வகையில் தத்தம் வாழ்க்கையினை நடாத்திவந்தனர். 2ஆம் உலக யுத்தத்திற்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட பனிப்போரின் விளைவாக வல்லரசுகளின் கைகளில் கொரியத்தீபகற்பம் 1948 இல் வடக்கு-தெற்கு என பிரிக்கப்பட்டதுடன், 1950-1953 காலப்பகுதியில் கொடியதொரு யுத்தத்திற்கும் முகம் கொடுக்கவேண்டி நேர்ந்தது. ஏற்கனவே யப்பானிய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த காலப்பகுதியில் தனது இயற்கைவளங்கள் காரணமாக தொழில்துறையில் ஓரளவிற்கு முன்னேறியிருந்த வடகொரியா கம்யூனிச ஆளுகைக்கு உட்பட, இயற்கை வளங்கள் குன்றிய தென்கொரியாவோ தனித்துவிடப்பட்டது. இருந்தாலும் உலகின் மிகமோசமான வறுமைக்கு முகம்கொடுக்கவேண்டியிருந்த தம் நிலையை மாற்றிவிட தென்கொரியர்கள் உறுதி பூண்டனர். உள்நாட்டில் தன்னிறைவும், வெளிநாடுகளுக்கான ஏற்றுமதியும் இலக்குகளாகக் கொள்ளப்பட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன. இதன்பயனாக 1960-1990 காலப்பகுதியில் தொடர்ச்சியாக 9% பொருளாதார வளர்ச்சியை வருடாந்தம் இது எட்டியிருந்தது. 1990களின் நடுப்பகுதியில் பொருளாதார ஆய்வாளர்களால் 'ஆசியாவின் பொருளாதாரப்புலிகள்' என வர்ணிக்கப்பட்ட ஹொங்கொங், சிங்கப்பூர், தாய்வான் ஆகிய நாடுகளுடன் தென்கொரியாவும் இடம் பெற்றிருந்தது. ஏனென்றால் இந்த நான்கு நாடுகளும் துரித பொருளாதார வளர்ச்சியுடன், உலகின் அதியுயர் வாழ்க்கைத்தரத்தையும் தனது மக்களுக்குப் பெற்றுக்கொடுத்திருந்தது. ஆமாம், குறுகியகாலப் பகுதியில் எவ்வாறு இது சாத்தியமானது ?

கைத்தொழில்துறை மற்றும் பாரிய உற்பத்திக்கான அடித்தளம் எதனையும் தென்கொரியா ஆரம்பத்தில் கொண்டிருக்கவில்லை. 1940 களில் கொண்டுவந்த 'அனைவருக்கும் விவசாயநிலம்' என்னும் திட்டத்தின் அடிப்படையில் மாத்திரம், தரிசாகக் கிடந்த நிலங்கள் யாவும் விவசாயத்தை ஊக்குவிக்கும் முகமாக, பொதுமக்களிடையே பங்கிட்டு வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக விவசாயத் துறை மட்டும் நல்லதொருநிலையை எட்டியிருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட (எங்களைப்பொறுத்த வரையில் மேற்கு-நாடுகளில் தாயக உணர்வுடன் வாழ்ந்துவரும் கிளைத்தமிழர்களின் பங்களிப்பு காரணமாக, அந்நிய உதவிகள் அவசியப்படாமல் போகலாம்) உதவியுடன் ஏற்றுமதியைக் குறியாகக்கொண்ட இலகு-உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் தயாரிக்கப்பட்டன. இந்தவகையில் 1960களின் இறுதிவரைக்கும் ஆடையணி வகைகள், காலணிகள், உணவுப்பொருட்கள் என்பனவற்றை தென்கொரியா பெருமளவில் ஏற்றுமதிசெய்து வந்தது. பாரம்பரிய விவசாயத் தொழிலாளர்களை இதற்காக பணியிலமர்த்தி தரமானதும், மலிவானதுமான தனது தயாரிப்புகளை மேற்கு-நாடுகளுக்கு இது வழங்கி வந்தது. இதன் காரணமாக 1965-1980 காலப்பகுதியில் வருடாவருடம் ஏற்றுமதி சராசரியாக 27% ஆல் அதிகரித்தது. தனது இலக்குகளை அடைந்துகொள்வதற்

**சு.ஞாலவன்**

காக குறுகிய 5ஆண்டு காலத்திட்டங்களை வகுத்துக்கொண்டு நடைமுறைப்படுத்தியது. மிகவும் குழப்பம் வாய்ந்ததும், அரசியல் முறுகு நிலைகள் நிறைந்த சட்டமாற்றங்களுக்கு உட்பட்டதுமான தென்கொரியாவைப் பொறுத்தவரையில், இவ்வாறான குறுகியகால அபிவிருத்தித் திட்டங்கள் கூடுதல் செயற்றிறன் வாய்ந்தவையாகவும், குறித்த ஆட்சியாளர்களின் பொறுப்பை அதிகளவில் வெளிப்படுத்து[...] ஆகவும் அமைந்தன. நான்கு [...]களாக அரசின் நிதியலகுகள் [...]டின் பொருளாதாரத்தை சுமா[...] ஆண்டுகளுக்கு தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்துவிட்டு, 1980களிலிருந்து சந்தைப்பொருளாதாரத்தையும் நாட்டினுள் அனுமதித்திருக்கிறது.

இலகு-உற்பத்தித்துறையில் தன்னை நல்லதொரு நிலைக்கு வளர்த்திருந்த தென்கொரியா 1970 களின் ஆரம்பத்தில், தனது தேசிய வளர்ச்சிக்கட்டத்தின் அடுத்த நகர்வாக [...]யர்தொழில்நுட்பக்கருவிகளின் உற்பத்தியைத் தேர்ந்தெடுத்தது. இதன் விளைவாக வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசிகள், வீடியோச்சாதனங்கள் என தனது ஆளுமையை வளர்த்ததுடன், இன்று கணனி மற்றும் மோட்டர்-வாகனங்களின் ஏற்றுமதியிலும் தனியொரு இடத்தைப் பிடித்துக்கொண்டுவிட்டது. கப்பல் கட்டுதலும் இதன் மிக முக்கியதொரு பொருளாதாரமாக விளங்குவதுடன், 1960ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு 650 இற்கு மேற்பட்ட ஆழ்கடல் மீன்பிடிக்கப்பல்களையும், இன்னும்பல சிறுஅளவிலான கலங்களையும் கொண்டு, மீன்பிடித் துறையிலும் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது. இவ்வாறாக 1999 இல் மட்டும் 2.4 மில்லியன் தொன் கடலுணவினை பிடித்து இது பயனடைந்துள்ளது (இலங்கைத்தீவின் மூன்றிலொருபங்கு மீன்பிடிப்பைச் செய்யும் தமிழீழப்பகுதியில் இவ்வுற்பத்தி 2002 இல் 41 மெற்றிக்தொன் -அறுபதில் ஒரு பங்கு- மட்டுமே ! 81 கி.மீ. நீளமான நம் கடற்கரை அதியுயர் பாதுகாப்புவலயம் என்ற பெயரில் ஆக்கிரமிப்புக்குட்பட்டுள்ளது).



ஆரம்பத்தில் விவசாயத் துறையில் ஈடுபட்டிருந்த பலரும் தொழிற்சாலைகளில் பணியாற்றத் தொடங்கியிருந்தும், திட்டமிடப்பட்ட நவீனமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு உணவுற்பத்தியிலும் நல்லதொரு வளர்ச்சி பேணப்பட்டது. 2001 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இருந்த 24 மில்லியன் தொழிலாளர்களில் (சரிபாதி மக்கள் தொகை: மொத்த தொழிலாளர்களில் 42% ஆனவர்கள் பெண்கள்) 11% ஆனவர்கள் கடற்றொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். நம்மைப்போலவே நெல்லையே பிரதான உணவாகக்கொள்ளும் தென்கொரியாவின் மொத்தப்பரப்பில் 17% ஆன நிலம் (தலா ஒருவருக்கு இரண்டரை ஏக்கர் என) பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர மக்களுக்குத் தேவையான போசாக்குள்ள உணவுவகைகளை உள்நாட்டிலேயே விளைவிக்கும் முகமாக மரக்கறி வகைகள், பழங்கள் மற்றும் விலங்குணவுகளுக்காக கால்நடைகளை (2002 இல் கையிருப்பு: 8.8 மில்லியன் பன்றிகள், 2.5 மில்லியன் ஏனைய கால்நடைகள்) வளர்க்கும் பல்லாயிரம் பண்ணைகளையும் தென்கொரியா கொண்டிருக்கிறது.

பல குழப்பமான காலகட்டங்களிலும், நெருக்கடியானநிலைமைகளை எதிர்கொள்ள வேண்டி வந்திருந்தபோதும் தென்கொரிய மக்கள் ஒருபோதும் துவண்டு போய்விடவில்லை. 1446ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஹங்கூல் வரிவடிவத்திற்கு முன்பாக இவர்களுக்கென்று எந்தவொரு எழுத்து வடிவம் கூட இருந்திருக்கவில்லை. இருந்தபோதும் இன்று தகவல் தொழில்நுட்பத்திற்குத்தேவையான பாகங்களை உற்பத்தி செய்பவர்களில் முன்னணியில் திகழ்ந்து, அதன் தலைவிதியையே நிர்ணயிக்கக்கூடியவர்களாக முன்னேறியுள்ளார்கள். இதற்காக சுமார் 350 உயர்கல்வி நிறுவனங்கள்மூலம், வருடாந்தம் நாடளாவிய ரீதியில் 3 மில்லியன் துறைசார் வல்லுநர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். இவர்கள் அனைவரினதும் கூட்டுமுயற்சியில் எட்டப்பட்ட தென்கொரிய வளம், அந்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை. அதன் பலனை அனைவருமே பகிர்ந்துகொள்கிறார்கள். நம்முடைய சமுதாயத்தில் நாம் முழு உரித்துடையவர்கள். நம்முடைய தேவைகளை அதன் வளத்திலிருந்து பெற்றுப்பூர்த்திசெய்யும் உரிமை கொண்டவர்கள். ஆனாலும் அப்படியான நம்முடைய சமுதாயம் நம் மக்கள் அனைவரினது தேவைகளையும் நிறைவுசெய்யும் வளம் கொழித்ததொரு தேசமாக எழுவதற்கு, நம் அனைவரினது பங்களிப்பும்கூட அவசியமல்லவா! தேவைப்படும் பொழுது எடுப்பதற்கு, இருக்கும்போது கொடுப்பது முக்கியமல்லவா! (வெறுமனே பணம் மட்டும் இங்கு குறிப்பிடப்படவில்லை, புதியதொரு மாற்றத்திற்கான ஒட்டுமொத்த உழைப்பும்தான்!

இனிய உள்ளங்களே ! இப்போது சொல்லுங்கள்! உங்களின் நியாயமான வேதனைகளைக் காரணம் காட்டி கண்ணீர் வடிக்கப்போகிறீரகளா ? அல்லது கண்ணீருக்கான காரணங்களைக் களைவதற்காய் சித்தம்கொண்டு, புன்னகைவிளைச்சலுக்காய் உழைக்கப்போகிறீர்களா? எமது கண்ணீருக்குக் காரணமான எதிரியும், இயற்கையும், இன்னும் ஏனையவையும் இன்புற்றிருக்க நீங்கள் மட்டும் நொந்து மூலையில் பயன் நலிந்து போகப்போகிறீர்களா? சோகத்திற்கு ராஜாவாக இருப்பதை விட, சந்தோசத்தின் சகதொழிலாளியாக இருங்களேன்! உங்களின் புன்னகைகளை உங்களிற்காக நேசிக்கும் ஒருவனின் அன்பான வேண்டுகோள் இது ! !




# யமனாகும் எவரெஸ்ட்



இன்றைய உலகத்தவர்களில் பெரும்பாலானவர்களுக்கு ஏதோ ஒன்றை சாதிக்க வேண்டும் என்ற வெறி காணப்படுகிறது. தங்களது பெயரும், படங்களும் ஊடகங்களில் வர வேண்டும். கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற வேண்டும் என்பதற்காக சாதிக்க நினைக்கின்ற மனங்கள் நிறையவே உள்ளன.

அந்தவகையில் உலகில் மிக உயரமான மலையான எவரெஸ்ட்டின உச்சியை அடைந்து சாதனை படைத்தவர்களும் இருக்கும் அதே வேளை சாவைத் தழுவிக் கொண்டவர்களும் இருக்கின்றனர்.

இந்த வரிசையில்தான் அண்மையில் கனேடிய நாட்டைச் சேர்ந்த கெனடி எனப்படும் 63 வயதுடைய ஒருவர். எவரெஸ்ட்டின் உச்சியை அடைவதற்கு முயன்றவர் முடியாமல் மரணத்தின் உச்சியை அடைந்து விட்டார். இவரது பயணத்தின் ஒரு கட்டத்தில் சுவாசக்கோளாறு காரணமாக சாதிக்க நினைத்த அம்மனிதர் சாவைத் தழுவிக் கொண்டார்.

இவ்வாறு எவரெஸ்டின் உச்சியை அடைய முயன்று முடியாமல் இறந்தவர்களின் எண்ணிக்கை 185 ஆக காணப்படுகிறது. போகின்ற போக்கைப்பார்த்தால் எவரெஸ்ட்டும் சாதனை படைக்கும் போல் உள்ளது.

நியூசிலாந்து விஞ்ஞானிகளின் ஆய்வின்படி நாள் ஒன்றுக்கு இரண்டு மணித்தியாலத்திற்கு அதிகமான தொலைக்காட்சியை பார்க்கும் குழந்தைகளும் இளம் வயதினரும் பிற்காலத்தில் பாதிப்புக்குள்ளாகின்றனர் என கூறுகின்றனர்.

மேற்படி தொலைக்கட்சியை பார்ப்பவர்கள் உடல் அளவுக்கு மீறி பருமன் அடைவதாகவும் அவர்கள் புகையை பிடிப்பதில் அதிகம் ஆர்வம் காட்டுவதாகவும், கொலஸ்ரோலின் அளவு அதிகரிப்பதாகவும் ஒட்டாக்கோ பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த டொக்டர் ரொபர்ட் ஹன்காக்ஸ் தலைமையிலான ஆய்வுக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.



# தொலைக்காட்சியால் தொலைந்துபோகும் வாழ்க்கை

இவர்கள் நியூசிலாந்தின் நகர் ஒன்றிலிருந்து 1000 குழந்தைகளை பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். இக்குழந்தைகளை 26 வயதுவரை பரிசோதித்தே இம்முடிவுக்கு வந்தனர். 26ஆவது வயதில் அவர்களின் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல், இதயத்துடிப்பு என்பன பரிசோதனை செய்த போது இதில் 17வீதமானோர் உடல் பருத்தும் 15 வீதமானோருக்கு இரத்த அழுத்தம் அதிகமாகவும் மேலும் 17 வீதத்தினர் புகைபிடிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவதாகவும், ஏனைய 15 வீதத்தினர் உடல் நலிவுற்று காணப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

26 வயதில் பெரியளவிலான பிரச்சினைகள் ஏற்படாது என்றாலும் காலப்போக்கில் இதயம் தொடர்பான பாதிப்புகள் ஏற்படலாம் என டொக்டர் ஹன்காஸ் கூறுகின்றார். அவர் மேலும் கூறுகையில் நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் மட்டுமே தொலைக்காட்சியைப் பார்ப்பது சிறந்தது என்கிறார்.

---

# அவதானம்; அலட்சியம் செய்தால் ஆபத்து

உடலின் எந்தப் பாகத்திலும் உள்ள மேற்பகுதி இயற்கையிலிருந்து மாறுபட்டு செயற்கையான விளைவுகளை காட்டுமானால் அது பெரும்பாலும் தோல் நோய்களாக இருக்கலாம். சிலவேளை அரிதாக உடலுக்குள் ஏற்படும் நோயின் வெளிப்பாடு தோல் மூலமும் இருக்கலாம்.



உண்டபின் யோகப்பயிற்சி செய்வது, அதிகவெப்பம், வாந்தி, அதிக தூக்கம், மனத்துயர், சோற்றுடன் முடி மண் ஆகியவற்றை உட்கொள்ளல் போன்றவை காரணங்களாகக் கூறப்படுகின்றன.

அதிகமான சூரிய ஒளியில் இருப்பது, நவீனரக துணிகளை அணிவது, சத்துக் குறைவான உணவுகளை உண்ணுவது, சுகாதாரமற்ற கழிப்பிட வசதியை பயன்படுத்துவது, எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகம் சாப்பிடுவது, அதிகம் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை சாப்பிடுவது, போன்றவற்றை தவிர்க்கவேண்டும்.


அத்தோடு உடலில் தேய்த்து குளிக்க இரசாயனம் கலந்த சோப்பு மற்றும் ஷாம்பு போன்றவற்றை தவிர்த்தால் தோல் நோய்களை தடுக்கலாம்.


சிலவேளைகளில் உடலுக்கு நிறத்தை கொடுக்கின்ற மெலனின் குறைந்து போதல் அல்லது இல்லாமல் போதல்

தோல் நோய்களில் பலவகையுண்டு. அவை காளாஞ்சகப்படை (சோரியாஸிஸ்), கரப்பான், பெருநோய், வெண்குஸ்டம், சொறி, சிரங்கு, முகப்பரு, தேமல் என்பனவாகும்.

இத் தோல் நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களை அழுகிய நீரில் வாழும் உயிர்களான மீன், நத்தை, நண்டு இவற்றை அதிகமாக சாப்பிடுவது, உணவு காரணமாக தோல் நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

பெரும்பாலும் சாதாரண தோல் நோய்களுக்கு ஆயுர்வேதத்தில் நல்ல சிகிச்சைகள் காணப்படுகின்றன இருப்பின் தோல் நோய் ஏற்பட்ட ஒருவர் தோல் நோய் சம்பந்தமான சிறப்பு மருத்துவரை நாடுவது சிறந்தது.





## மருத்துவம்

# தொண்டையில் தொல்லையா?

தொண்டையில் உள்ள குரல் நாண்கள் (Vocal Conds) பாதிக்கப்படும்போது தான் கரகரப்பு ஏற்படுகிறது. குரல் நாண்கள் பாதிக்கப்படுவதற்கு பல காரணங்களை கூறலாம். இவற்றுள் குரல்வளை அலர்ஜி (Laryngitis) முக்கியமானது.

அசுத்த நீர், அசுத்த காற்று, இவற்றின் மூலம் உடலுக்குள் நுழையும் பக்டீரியா அல்லது வைரஸ் நுண்கிருமிகள் குரல் வளையைத் தொற்றும்போது அவை வீங்குகின்றன. மிக குளிர்ந்த நீரை குடித்தால்கூட இவ்வாறு ஏற்படுகிறது. அப்போது குரல் நாண்களின் அசைவு பாதிக்கப்படும். இதன் விளைவாகவே தொண்டையில் கரகரப்பு ஏற்படுகின்றது.

இதைவிட அடிக்கடி இப்படி ஏற்படுவதற்கு பின்வரும் நோய்களும் காரணமாக இருக்கலாம்.

1. குரல் வளைக்காசநோய்
2. குரல் வளைத்தொடு நோய்
3. சிபிலிஸ் எனும் பால்வினை நோய்
4. குரல் வளைச் சவ்வுச் சதை
5. குரல் வளைக் கட்டிகள்
6. குரல் வளை வாதம்

இதைவிட மிக அரிதாக சிலருக்கு இரத்தச் சோகையினாலும் தைரொய்ட் குறை நிலை சுரப்பு காரணமாக தொண்டையில் கரகரப்பு ஏற்படலாம்.

காரணம் எதுவானாலும் இவை அனைத்துக்கும் நிவாரணி உண்டு. இதை ஆரம்ப நிலையிலேயே கவனித்துவிட்டால் பூரண சிகிச்சை பெற்றுவிடலாம். எதற்கும் இவை தொடர்பாக நல்ல மருத்துவரின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது சிறந்தது.




# மாறிவிட்ட மாற்றங்கள்



பொன். சுகந்தன்

ஹயஸ் வான் ஒன்று வீட்டிற்கு முன்னால் வந்து நின்றதும்தான் தாமதம். எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள். "அம்மா மாமாவாக்கள் வெளிநாட்டாலை வந்திட்டினம்..." என்ற கத்தலைத் தொடர்ந்து சொந்தங்களெல்லாம் ஓடிவந்து ஹயஸ் வானை சூழ்ந்து கொண்டன. உள்ளேயிருந்த ராகவனிற்கும் சுமதிக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை... எல்லையற்ற மகிழ்ச்சியைத்தவிர வேறொன்றும் அவர்களது முகத்தில் தென்படவில்லை. எத்தனை நாட்கள் இடைவெளி... சொந்த பந்தங்களை பிரிந்திருப்பதன் இனம் புரியாத துன்பமும் அன்றுதான் தெரிந்தது. அவர்களையும் மீறி எழுந்த கண்ணீர்ப் பெருக்கு அது அவர்கள் கொண்ட அன்பிற்கு அத்திவாரம் அமைத்தது.

ராகவன் ஹயஸ் வானால் இறங்கி எல்லா இடங்களையும் நோட்டம் விட்டான். எல்லாம் நன்றாகத்தான் மாறிப்போயிருந்தன. அடுத்த வளவினுள் சிறியளவில் சூலத்துடனும் சிறிய கொட்டிலுடனும் இருந்த வைரவர் ஆலயம் கூட இன்று பிரமிப்பூட்டும் வகையில் பெரிய கட்டடங்கள் கொண்ட ஆலயமாகவும் வர்ணவேலைப்பாடுகள் பொருந்திய அழகுடனும் அமைந்திருந்தது ராகவனின் இதயத்தை ஆக்கிரமித்திருந்தது. சற்றுக் கண்களை உல்லாசமாக உலாவவிட்ட போதுதான் அருகே இருந்த கிடுகு வேலிகளும் கொட்டில்போட்ட வீடுகளும் மாடமாளிகைகளாக அவன் கண்முன் விரிந்துகிடந்தன. இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது அவன் மனதில் அவனை அறியாத ஒரு இனம்புரியாத இன்ப மகிழ்ச்சி.

"என்ன... மாமா... மயங்கிப்போய் நிற்கிறியள்..." என தங்கையின் மகள் சுபா கேட்டபோதுதான்... திரும்பிய ராகவன் "அட சுபாக்குட்டி... என்ன மைடியர் பூதம்போல குண்டாய் வந்திட்டாய்..." என்றதும் பெரிய சிரிப்புச் சத்தங்கள் சூழ்ந்தன. "என்னமாமா... நீங்களும் சன்.ரீ.வி பார்க்கிறனீங்களோ..."

ச்சாய்... எங்களிற்கெங்கை நேரமிருக்கு... இயந்திரவாழ்க்கைதானே அப்பப்போ சந்தர்ப்பம் வரும்போது பார்ப்பேன் என்றதும், "இஞ்சை எல்லாத்துக்கும் சன்.ரீ.வி பைத்தியம்தான் காலையிலை சாலமன் பாப்பையாவிலை தொடங்கினால் கடைசி கணவனுக்காக... நாடகம் வரைக்கும் ரீ.வி யோடைதான்..." என்றதைக் கேட்டதும் ராகவனின் உள்ளங்கள் அன்றைய காலங்களை அசைபோடத் தவறவில்லை. அது கரண்டில்லாக்காலம். அருமை பெருமையாய் எங்கேயாவது ஜெனரேட்டர் பிடித்து ஒன்று, இரண்டு படங்கள் ஓடும். அதை தூரம் என்றாலும் பொருட்படுத்தாது படம் பார்க்கின்ற ஆசையிலை ஓடி ஓடி படம் பார்த்தகாலம். "என்ன மாமா... யோசித்துக்கொண்டு இதிலையே நிற்கிறியள். என்றதும்தான் நினைவு திரும்பிய ராகவன் மேலும் சிந்தனைகளிற்கு இடம் கொடுக்காது உள்ளே நுழைந்தான். வீட்டிற்கு மாபிள் எல்லாம் பதித்து வீடே தாஜ் மஹால் போலக் கட்சியளித்தது. ஒருதரம் வேலிக்கரையோரங்களை பார்த்து ஏமாந்து போனான் ராகவன்.அப்போதென்றால் வீட்டிற்கு யாரும் வந்தாலே கிடுகு வேலிகளெல்லாம் இசைக்கத் தொடங்கும். ஆனால் இன்று அவன் அந்த இசையை காணவுமில்லை கிடுகு வேலியுமில்லை.

மனதுக்குள் ஒரு லேசான சிரிப்புடன் உள்ளே சென்றான்.

உள்ளே சென்றவனின் கண்கள் மாலை போட்ட தன் தம்பியின் படத்தைக் கண்டதும் கலக்கம் கொண்டன. "அண்ணா... ஹீரோக்கொண்டா எடுக்கணும்..." என்று தம்பி ஆசையாய் ரெலிபோனிலை கேட்டுவிட்டான் என்ற உடனே ஹீரோக் கொண்டா எடுக்க ஒன்டரை இலட்சம் அனுப்பியது... "அதுவே தம்பிக்கு யமனாக வருமென்று..." மனதில் நினைத்து வருந்தியபோதுதான் வாசலில் தமையனின் மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. தமையனுடன் சேர்ந்து மனைவி பிள்ளைகளும் வந்திருந்தனர். "தம்பி... வெளிநாட்டாலை வந்திட்டான் என்று தங்கைச்சி இப்பதான் போன் பண்ணிச்சொன்னாள்... அதுதான்..." என்றபடி உள்ளே வந்த தமையன் முன்னைய தோரணையில் "ராகவன்... தம்பி... எப்பிடி" "பிரச்சினை யில்லையண்ணை... இஞ்சை கிளைமற்றுத்தான் கொஞ்சம் வித்தியாசம் அதான் பிள்ளைகளிற்கு ஒத்து வருகுதோ தெரிய வில்லையென்று நினைச்சு பிள்ளைகளை மாமியாக்களோட விட்டுட்டு வந்திட்டம்..." என்று கதைத்துக்கொண்டிருக்க சொந்த பந்தங்களென்று வந்து சூழத் தொடங்கி விட்டனர். ஆசைதீரக் கதைத்துவிட்டு அவர் அவர்களிற்கு அன்புடன் வாங்கிவந்தவற்றை மகிழ்ச்சியுடன் கொடுத்து அவர்களை வழியனுப்பிவைத்தான். இவ்வாறாக அன்றைய பொழுது இனிதாகக் கழிந்தது.

அன்று ஒரு வெள்ளிக் கிழமை அன்று தான்... ராகவனின் தங்கையின் மகளிற்கு பூப்புனித நீராட்டு விழா... வெகு விமர்சையாக ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. விடிவதற்கு முன்னரே சமையல் வேலை களெல்லாம் ஆரம்பமாகிவிட்டன. ராகவனும் வேளைக்கு எழுந்துவிட்டான். நேரத்திற்கே தனது வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு வெளியே வந்தவனிற்கு சிறியதொரு அதிர்ச்சி "என்ன எல்லோரும் வேலை செய்யாமல் இதிலையிருக்கிறியள்..." என்றபோதுதான் எல்லோரும் சிரித்துவிட்டனர். "எங்களிற்கு என்ன வேலை... ஆம்பிளைகளிற்கு கொட்டகைபோடுற வேலையும் இல்லை... எங்களிற்கு சமைக்கிற வேலையுமில்லை... எல்லாம் காசிருந்தால் போதும்..." என்று தங்கை சொன்னதும் சிரிப்பொலிகள்... "டே தம்பி உந்தப்பாட்டை நிற்பாட்டடா... திருப்பாச்சி படப்பாட்டுக்களை கொஞ்சம் போடேன்... கேட்போம்..." இது பக்கத்து வீட்டு சாரு அக்காவின் கட்டளை. அதனைத் தொடர்ந்து திருப்பாச்சிப் படப்பாடல்கள் ஒலிக்கத் தொடங்கின. "மாமாவிற்கு இந்தப்பாட்டுகளொன்றும் பிடிக்காது... அவருக்கடி பாலும் பழமும் கைகளில் ஏந்தி என்ற பழைய பாட்டுத்தானாமடி பிடிக்கும்..." என்றுவிட்டு மீண்டும் சிரிப்பொலிகள். ராகவனும் சற்று லேசான சிரிப்புடன் அப்பால் சென்றான். சொக்கட்டான் பந்தலின் சொக்கவைக்கும் அழகைப்பார்த்து ஏதோ மனதுக்குள் சிரித்த ராகவன் ஏதோ விபரீத சத்தம்கேட்டுத் திரும்பினான்.

"டே வேலைகளைச் சொன்னால் பிறகென்ன செய்ய வேண்டியதுதானே அதென்ன முறைச்சுக்கிறைச்சுப் பார்க்கிறது. பல்லுடைச்சுப் போடுவன் ராஸ்கல்! எனத் தமையன் ஆவேசமாகக் கத்திக்கொண்டிருந்தார். ராகவன் பார்த்தபோது அங்கே மூன்று சமையல் காரர்கள் நின்று வேலைசெய்து கொண்டிருந்தனர். அதில் ஒன்று வயசான பெண். அவனது மனைவியாக இருக்க வேண்டும். மற்றையது ஒரு இளம் வயதை உடையவன். அது அவனது மகனாக இருக்கவேண்டும் என மனதுக்குள் ஊகித்துக் கொண்டிருந்தபோதுதான் மேலும் பேச்சுக்கள் வலுக்கத் தொடங்கின... சொன்னால் அந்த ரைம்முக்குள்ளை முடிக்க வேண்டியதுதான் வேலை... பிறகு என்ரை குணத்தைத் தெரியும்தானே" பேச்சுச் சத்தங்களைக்கேட்டு பாட்டுக்கேட்டு, கதைத்துக்கொண்டிருந்த பெண்களும் கூடிவிட்டனர்... "விடாதை... மூத்தண்ணா... இப்படி நாலு தகடு கொடுத்தால்தான் வேலை வேளைக்கு முடியும்... நேரம் செல்ல வாறது நாங்கள் என்ன செய்யிறது... நேரத்திற்கு முடிக்க முடியாவிட்டால் இன்னும் மூன்று,நாலுபேரை கூட்டி வந்திருக்கலாம்தானே..." என பெண்களும் நின்றதும், கீழ்க்குரலினால் "இரண்டுபேருக்குக் காய்ச்சலம்மா... அதான் வரலை... நாங்கள் எப்படியும் மதியத்துக்குள்...ளை" என்றதும் "என்ன... விசர்க்கதை கதைக்கிறியள். இப்ப என்ன நேரம் எனச் சாரத்தை மடித்துக்கட்டிய தமையன் சமையற்காரரை நெருங்கியபோது "ஸ்ரொப்பிற்...!" ராகவனின் உணர்ச்சிவசப்பட்ட கத்தல். "நானும் எல்லாம் மாறிவிட்டது என்று சந்தோஷப்பட்டேன்... ஆனால் நீங்கள் இன்னும் மாறவில்லை... இக்கட்டான நிலை எல்லாருக்கும் வருவதுதான். காய்ச்சலால் வேலைக்கு மற்றையவர்கள் வரமுடியுவில்லை. ஏன் இதிலை இருக்கிற உங்களாலை சமைக்கமுடியாதோ...! முடியும் அப்ப... ஆனால் இப்ப முடியாது சமைக்க காஸ்குக்கர், அரைக்க மிஹ்சி, படுக்க ஈச்செயார், பார்த்து ரசிக்க சன்ரீவி, வருத்தங்கள் மூட்டுவாதம், மூட்டுவலி முடங்கிப்போயிட்டிங்கள்... மற்றையவர்களையும் மதித்து நடக்கிற தன்மை எப்போது வருகுதோ அப்போதுதான் சமூகம் உயரும் எங்கள் நாடும் உயரும்" "இதைக் கேட்டதும் சற்று லேசான கோபமேற்பட்ட தமையன்" "வெளிநாட்டிலை இருந்திட்டு வந்த உனக்கு தம்பி... இதொன்றும் விளங் காது..." என்றதும் கோபம் மேலிட்ட ராகவன் எங்களிற்கு சொகுசான வேலை இல்லா விட்டாலும் கௌரவமாக வைத்துள்ளது. அந்தச் சமூகம் உங்களை உழைத்து மேம்படுத்திய நானும் அங்கு ஒரு சமையற்காரன்தான்...??

# அரங்கேறிய பவளக்கொடி நாடகம்

ஒவ்வொரு இனமும் தனது தனித்துவத்தை இழக்காது தனக்கென சில அடையாளங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்தவகையில் தமிழர்களின் அடையாளச் சின்னமாக கிராமியக் கலைகள், கூத்துக்களைக் குறிப்பிட முடியும். ஈழத்தின் அரங்க வரலாற்



றில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிமுகமாகிய அரங்கப் பாரம்பரியத்துடன் சங்கமித்து, எமது தனித்துவமான மரபாக மகிழ்ந்தெழுந்த இசைநாடகம் இன்று எமது மரபுக் கலைவடிவங்களில் ஒன்றாகியுள்ளது.

இசைநாடக பாரம்பரியத்தில் அண்மைக்காலமாக அதன் தன்மை இழந்து நலிந்துபோன நிலையிலுள்ளது. இவ்நாடக வடிவத்தை பழமைமாறாது பேணிக் காப்பதுடன், அரங்காற்றுகைகளையும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு இத்துறை சார்ந்தவர்களையே சாரும். ஒரு இனத்தினுடைய அடிநாதமாக விளங்குவது கலையும் பண்பாடுமேயாகும். அத்தகைய எமது இனத்தின் அடையாளத்தை கட்டி வளர்க்கின்ற பாரிய பொறுப்பு ஒவ்வொரு கலைஞர்களிடமும் கொடுக்கப்பட்டுள்ளது.

இசைநாடக வடிவம் தொடர்பாக பேராசிரியர் கா.சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ஈழத்து நாடக வரலாற்றில் இந்நாடக வடிவம் மிகவும் முக்கியமானது. பிரித்தானியர் ஆட்சியின் காலப்பெறுபேறுகளிலொன்று என்று சொல்லத்தக்க வகையில் தோற்றமுற்று பம்பாயில் இருந்து சென்னை மாநிலத்திற்கு வந்து, கன்னட, தெலுங்கு மொழியூட்டலின் பின் தமிழோடிணைந்து கொண்டு அந்த இணைவினுள் தென்னகத்தின் செந்நெறி சங்கீதத்தின் பாரம்பரியத்தையும், தமிழின் இலக்கிய நாடக பாரம்பரியங்களையும் இணைத்து வளர்ந்த ஜனரஞ்சகமான ஒரு நாடக வடிவம் இது. அதற்கு முன் பரவிய கூத்து மரபின் தன்மைகளையும், கர்நாடக சங்கீதத்தின் நாடக நிலை ஆற்றலையும், பின் வந்த சினிமாவின் வரலாற்றையும் உள்ளடக்கியுள்ள கலைவடிவமென்கிறார்" இவரது ஆழமான கருத்துக்களில் இருந்து இசை நாடகத்தின் கனதியை உணர முடியும்.

இசைநாடகத்தின் வருகையால் கூத்துக் கலையில் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றதுடன் இசை நாடக விழுமியங்கள் சிலவற்றைப் பின் பற்றியமையும் மூத்த கலைஞர்களினது உரையாடல்களில் இருந்து அறியமுடிகிறது. இசை நாடகத்தில் துன்பியல், மகிழ்நெறி நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்ட போது துன்பியல் நாடகங்களே பெரும்பாலான ரசிகர்களை கவர்ந்து கொண்டுள்ளது. இதற்கு ஒரே ஒரு உதாரணமாக "வி.வி.வைரமுத்து குழுவினர் நடித்த அரிச்சந்திர மயான காண்டம்" நாடகத்தை குறிப்பிட



முடியும்.

காலப்போக்கில் மகிழ்நெறி நாடகங்களும் ...கள் மனங்களை வெல்லத் தவறவில்லை. மகிழ்நெறி நாடக வரிசையில் ...வளக்கொடி" இசைநாடகத்தை குறிப்பிட முடியும். யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகமும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து தயாரித்து அறிக்கை செய்யப்பட்டு வரும் பவளக் கொடி நாடகத்தை இம்மாத (ஏப்ரல்) ஆரம்பத்தில் பார்க்க முடிந்தது ஒரு மனநிறைவத் தருகின்றது.

## இரா-வின்

சங்கரதாஸ் சுவாமிகளின் பவளக் கொடி இசை நாடகம் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இசை நாடக ஆர்வலர்கள் மட்டுமன்றி, கல்விமான்கள், கலைஞர்கள், இளையோர்களினால் அரங்கு ஆக்கிரமிக்கப்பட்டு இசை நாடகத்திற்குரிய பரிமாணங்கள், தனித்துவங்களுடன் கலாநிதி கலாமணியின் நாடக அறிமுகத்துடன் பவளக்கொடி ஆரம்பமாகியது.

கலைக்காவலன், கலாபூசணம்- செல்லையா- மெற்றாஸ் மயில். ஆசிரியர் விமலநாதன் ஆகியோரது பெருமுயற்சியின் செயல் வடிவமாக உருப்பெற்ற இவ்நாடகத்தில் இவ் இருவரும் பாத்திரமேற்று நடித்துள்ளமை மேலும் சிறப்பைத் தருகின்றது.

மதுரை மாநகரை ஆளும் அல்லியின் மகனான பட்டத்து இளவரசன் புலேந்திரன், சிறுவர்களுடன் விளையாடும்போது அவனது தேர் அடிபட்டுவிட்டது. ஆத்திரம் கொண்ட புலேந்திரனை ஏனைய சிறுவர்கள் கேலிசெய்ய, நான் இனிப்பவளத்தேருடனேயே விளையாட வருவேன் என சபதம்செய்து, தனது தாயிடம் நடந்தவற்றை கூறி பவ்ளத்தேர் கேட்கிறான். பவ்ளத் தேர் செய்வதற்கு தனது கணவனை அழைத்து பவளக் காட்டிற்கு அனுப்பி பவளத்தேர் கொண்டுவரும்படி கட்டளையிடுகிறாள். பவளக்காட்டிற்குச்செல்லும் அருச்சுணன் பவளக்கொடியின் மீதும் மையல் கொண்டு அவளை திருமணம் செய்கிறார். அருச்சுணன் மூர்ச்சையாகி இறந்து பின்னர் உயிர் பெற்று தனது மூன்று மனைவிமாரையும் ஒன்றாக ஒரு இடத்தில் நோக்குகிறார். பவளக்கொடியின் மூலமாக பவளத்தேர்செய்து தனது புதல்வனிற்கு கையளிக்கிறான் இதுவே பவளக் கொடியின் கதைச் சுருக்கமாகும்.

பதினைந்து பேர் பங்கு கொண்ட இவ் இசைநாடகத்தில் ஏழு பெண்பாத்திரங்கள் உள்ளன. ஆனால் முற்றிலும் ஆண்களே. பெண் பாத்திரங்களேற்று நடத்தமையானது. இடையிடையே சிறிய தளர்வுகளை ஏற்படுத்தி...போதிலும் சுபத்திரை அல்... ...ய பாத்திரத் தெரிவு மிக மிகப் பொருத்தமாக அமைந்தது. நெருக்கமான காதல் காட்சிகள் இடம் பெறுகின்றமையால் ஆண்களே பெண் பாத்திரமேற்று நடித்திருக்கிறார்கள் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

இந்த இடத்தில் மட்டும் நாம் சற்றுத் தொலைவில்தான் இருக்கிறோம். இதற்கு பலர் வெவ்வேறு காரணங்களை முன் வைத்தாலும், மூத்த கலைஞர்களில் சிலது நடத்தைகளின் பிரதிபலிப்பே பெண்கள் அரங்குகளில் தோன்றாமைக்கு காரணமாகின்றது. பவளக்கொடி நாடகத்தில் அல்லியின் மந்திரி சேனாதிபதி பவளக்கொடியின் தோழியர்கள் என இப்பாத்திரங்களிற்கேனும் பெண்களை இணைத்திருக்கலாம். இவ் நான்கு பேரும் நடிப்பையோ பாடல்களையோ சரிவர கைக்கொள்ளவில்லையென்பது நாடக ஆர்வலர்களின் கருத்தாகவுள்ளது.

புலேந்திரனாக பாத்திரமேற்ற சிறுவன் தன் ஆளுமைக்கு மேலாக அரங்கில் வலம் வந்தமை பாராட்டிற்குரியது. அதுமட்டுமன்றி, தாயுடன் தர்க்கம் புரிந்து சபதம்செய்யும் காட்சி சிறுவனது உணர்வு ரீதியான வெளிப்பாடாக அமைகின்றது.அல்லி தனக்கே உரியதான அதிகாரம், ஆணவம், கோபத்தை வெளிப்படுத்துகின்றாள்.

(20ஆம் பக்கம் பார்க்க..)

# மறக்கப்பட்ட சிலுவைகள்

ஒரு பொழுதில்
காத்திருந்து
இந்தத்தரிசு நில வெளியில்
உங்களின் பயணப்
பதிவுகள்

துருப்பிடித்த ஏதுக்களாய்
சிதவல் தெருக்களில்
ஆங்காங்கே
எதிர்த்தேர்.

தேவைப்படலாம்
படமெடுத்து பக்குவப்படுத்துங்கள்
பின்னொரு விவாதங்களின்...
வியாக்கியானங்களின்...
ஆவணமாய்..

தப்பிய நிழலில்
அமரலாம்.
உங்கள் அரட்டைகளில்
எல்லாம் அவைகள்
மறக்கப்பட்ட சிலுவைகள்.

வட்டிழந்த
முண்டத்தின் கீழ் புதைந்துபோன
உயிரின் கதை
உங்கள் உதடுகள் உச்சரிக்கத் தவறிய
பக்கங்கள்.

ஓ...
இன்றைய கனாக்காலங்களுக்கு
மட்டுமே...
அவைகள் எல்லாம்
கருகிப்போன
மரங்கள்.

நா.கானகன்

# நிழல் யுத்தப்பிரகடனம்

புத்தனின் முகத்தில் குருதியின் கோடு
வெள்ளை மலர்களில் அழகிய நிறம்
பூமிப்பரப்பு எங்கும் மரண ஓலம்.

தொடரும் "நிழல் யுத்தப்பிரகடனம்"
நிமிர்ந்து பார்த்தேன் என்ன ஆச்சரியம்
தேவகுமார் வருகை அவர்கள்

புன்னகைத்தார்கள் கண்ணீர் வடித்தார்கள்
என்ன அதிசயம் ஓ.... கையில் ஒப்பந்தப்பத்திரம்
வெள்ளை நிற மனிதராய் இப்பூமியில் மாறினார்கள்.

மறுபுறம் வையம் முழுதும் சமாதானப்
புறாக்கள் பறந்து மகிழ்ந்தன.
நாம் எல்லாம் ஆனந்தக் கூத்தாடினோம்.

முடிந்தது யுத்தத்தின் சத்தம் - இனி
புதிய தேசம் பிறப்பின் வருகையை
ஆவலோடும் அதர்மம் ஒழிந்து நீதியின் கண்கள்
திறந்து ஈழம் பூக்கும் என நம்பியிருந்தோம்.


எல்லாம் தகர்ந்து போனது "நிழல் யுத்தப்பிரகடனம்"
நீண்டு கொண்டது இறப்பின் கதை.
எஞ்சியிருப்பது உயிர் மட்டும் உணர்வும்.

பதவிக்கும் பணத்துக்கும் முகத்துக்கும்
பணிந்து விடாது"சத்தியம்" இப்போது
துரோகங்கள் மலிந்து போன காலமாய் கழியும் பொழுதுகள்
இனி இருளின் விலகலின் அறிகுறிகள்
தர்மத்தின் குரலுக்காய் எம் காத்திருப்பு அதுவரை
நிழல் யுத்தப்பிரகடனம்.

அமரேசன்

# வீடு

## மகிழ்ச்சியாய் வாழ்வோம்



நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம். என்பதுபோல் எம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஊற்றுக்களை நாம் தேடவேண்டும். நாம் இருவர் ஒருவராய் வாழ்ந்த காலங்கள் மாறி நமக்கு பிள்ளைகள் இருக்கின்றபோது இரட்டிப்பான மகிழ்ச்சியில் வாழ்கின்றோம். பிள்ளைகளின் மகிழ்ச்சி எங்களின் மகிழ்ச்சியாய் வடிவங்கள் மாறிவிடுகின்றன. இதனைப் பார்க்கின்றபோது வாழ்வினில் மகிழ்ச்சி ஒருபுறமிருக்க மறுபுறம் இவ்வாறான நிலையில் இல்லையே என எண்ணும்போது மனக்கவலைதான். குடும்பத்தில் எல்லோரும் ஒன்றித்து வாழ்கின்றபோது ஓர் மகிழ்ச்சிதான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசைகளில் வாழும்போது இதில் என்ன மகிழ்ச்சியுண்டு. அதிலும் ஒருவன் தனிமனிதனாக பிறந்து வளர்ந்த பின்னரும் அவன் தன் குடும்பத்திலிருந்து ஏதோவொரு காரணத்தினால் ஓர் திசையில் வாழும்போது இதில் என்ன மகிழ்ச்சியை அவன் அனுபவிக்கமுடியும். சிந்தித்துப் பாருங்கள் சிறிதளவேனும்.

உண்மையில் அவன் மனக்கவலைக்குள் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்பவர்கள் பிறவுறவுகள் தான். இவ்வாறாகக்கிடைக்கின்ற உறவுகளின் மகிழ்ச்சியின் பகிர்வின் மூலம் தன் வாழ்க்கையினை இட்டுச் செல்கின்றான். இவ்வாறான நிலைகள் நம் நாட்டில் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. பலர் நினைப்பதுண்டு நாம் தனிமையாகப் பிறந்து இருந்தால் சிலபிரச்சினைகளுக்குள் நாம் உட்படத் தேவையில்லையென. அவ்வாறான நினைப்புக்களிலிருந்து மாறுபடுங்கள். இருகரம் சேர்ந்தால்தான் காற்றினூடே அவ்வோசை கலக்கும். இதுபோன்றுதான் எமக்கு துணையாய் ஒருவராயினும் இருக்கவேண்டும். இதன் மூலம்தான் எமக்கு ஏற்படுகின்ற இடர்களை இலகுவாய் விலகிச் செல்ல முடியும். தனிமைப்படுத்தப்பட்டு தாங்கிடா மனக்கவலைக்குள் வாழ்கின்றவர்களை நீங்கள் நிறையவே கண்டிருப்பீர்கள் அவர்களுக்கு நீங்கள் என்ன கூறமுனைகின்றீர்கள்?

குடும்பத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளிற்கு இலகுவாய் முடிவு காணுங்கள். மாறான முடிவுகளை பிரசவிக்காதீர்கள். இதன் காரணமாய் ஒவ்வொருவரும் தனிமைப்படுத்த நிறைய வாய்ப்புக்கள் ஏற்படும். நல்லதொரு குடும்பமாய் நாளும் மகிழ்ச்சியாய் வாழ எம் மனங்களில் தான் இருக்கின்றது. இடர்கள் எமை சூழ்கின்றபோதும் எதையும் உடைத்தெறியும் ஆயுதமாய் உங்கள் மனதினை மாற்றிக்கொள்ளல் வேண்டும். மழலையுள்ளங்களில் மனத்தாக்கங்களை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ளாதீர்கள். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகின்ற போது அதன் தாக்கம் அவர்களை மனநோயாளியாகக் கூட மாற்றிவிடும். இருவருக்குமிடையில் ஏற்படும் மனக்கசப்புக்கு சகித்து மாற்றீடு செய்யுங்கள். திசைமாறிய பறவைகளாய் எவரும் வாழ்கின்ற நிலைமைக்குள் வாழாது ஒருமுகப்படுத்தப்பட்டு நல்லதொரு வாழ்வினில் வாழ வழி சமையுங்கள். மனிதர்களாகப் பிறந்து விட்டால் போதுமா? மற்றவர் மதிப்பளிக்கும் படியும் வாழ்ந்து காட்டுங்கள். இறந்தபோதும் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கவேண்டும். நிறைவான நிம்மதியான குடும்பமாய் வாழவேண்டும். உங்கள் மனதில் மகிழ்ச்சியை தேடுங்கள் எல்லோரும் கூடி வாழுங்கள். வானிலிருக்கும் வெண்மதியோடு மின்னிச் சிரித்திடும் வெள்ளிகளைப்போல் உங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியாய் என்றும் நல்லதொரு குடும்பமாய் நாளும் மகிழ்ச்சியாய் வாழுங்கள்!

சி.மதீஸ்

## முடியும் என்றவர்களே முன்னேறினார்கள்

வரலாற்றின் எந்தப்பக்கமும் வெற்றிக்கதை இருந்தாலும் அதை ஒருமுறைக்கு இருமுறை ஆழ்ந்து படித்துப்பாருங்கள் "முடியும்" என்று முயன்றவர்களே முன்னேறியிருக்கின்றார்கள். வெற்றியும் கண்டிருக்கிறார்கள். சிலவிடயங்களினை பார்க்கும்போது கடினமாகத்தான் தோன்றும். எந்தவொரு கடினமான விடயங்களினையும் சுலபமாக முடிப்பதற்கு ஒரே ஒரு வழி உண்டு "அது என்னவென யோசிக்கின்றீர்களா?" அதுவே தான் "நம்பிக்கை" முதலில் அதனை நம்பவேண்டும். அதில் நம்பிக்கை என்பது ஏற்பட்டுவிட்டால் முடிவில் வெற்றியை பெறமுடியும்.

"முடியும் என்ற சொல்லுக்கு மகத்தான மந்திர சக்தி உண்டு"

"முடியும்" என்ற சொல்லே எந்தவொரு காரியத்திலும் நம்பிக்கை ஏற்படுவதற்கு ஆரம்பமாகின்றது. என்னால் இதனை செய்யமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் வெற்றிப் படிகளை விரைவில் தாண்டலாம். ஒருவேளை முடியாது என்ற காரியம் மற்றொருவேளையில் முடியும் என்றாகி விடுகின்றது. முடியாது என்பது ஒரு தோற்றம். முடியும் என்பது ஒரு வழி. ஆகவே நாம் மேற்கொள்ளும் எந்தவொரு விடயத்திலும் இரு நிலைகள் உண்டு. முதல் நிலை முடியாது என்பது பொய்த்தோற்றம்.



இதனைப் புரிந்து கொண்டால் அடுத்தபடி முடியும் என்பதே. முதல் நிலையிலேயே மலைத்து விட்டால் அடுத்த நிலைக்கு போகும் எண்ணம் வராது. வெறும் தோற் றங்களைக் கண்டு மலைப்பது வாழ்க்கையல்ல வெற்றிக்கான வழியை கண்டு பிடித்து அதன் வழி முன்னேறுவதே வாழ்க்கையாகும்.

"முடியாது என்ற சொல் இயலாதவனின் அகராதியில் தான் உள்ளது"

எந்த வொரு காரியத்தையும் எப்படியும் செய்துமுடிக்கலாம் என்ற நம்பிக்கை மனதில் தோன்றுமானால் அடுத்தபடி வெற்றி உங்கள் கைகளிலே தவழ்ந்து வரும். "முடியும் என்பது நம்பிக்கையின் ஆரம்பம், முயற்சிக்கு முன்னுரை, எழுச்சிக்கு வித்து, செயலுக்கு ஆதாரம், வெற்றிக்கு ஊன்றுகோல், நம்புகின்றபோது நம்பிக்கை பிறக்கின்றது. நாம் அதன் மீது ஆசைப்படுகின்ற போது அது கிடைப்பதில்லை. ஆனால் நாம் அதன் மீது நம்பிக்கை வைக்கின்ற போதுதான் அது கிடைக்கத்தொடங்குகின்றது. அடைந்தே தீரவேண்டும். என்று நாம் நினைக்கும்போதுதான் அதற்கான முயற்சிகளில் முற்றாக ஈடுபடுகின்றோம். ஆனால் எல்லா முயற்சிகளும் வெற்றியைக் கொடுத்து விடுவதில்லை. சில முயற்சிகள் வெற்றியளிக்காமலும் போகலாம். ஆனால் நாம் மன உறுதியோடு நம்பிக்கை வைத்து தொடர்வோமானால் வெற்றி கிடைக்கும். எனவே முயற்சி எனும் இறக்கை பலமாக இருந்தால் நிச்சயம் மகிழ்ச்சி வானில் சிறகடித்துப் பறக்கலாம்.

எஸ்.சுகந்தி

## பயனுள்ள சில குறிப்புகள்

*சின்னக் குழந்தை பால் குடித்தவுடன் தொட்டிலில் படுக்கவிடாமல் தோளில் சாய்த்து முதுகைத் தடவினால் ஏப்பம் விடும் வயிற்றில் வாயு கொண்டு வலி வராமல் நிம்மதியாகத் தூங்கமுடியும்.*

✣ ✣ ✣

*30 நாட்களான குழந்தைகளின் தொட்டில் அல்லது படுக்கைக்கு மேல் வண்ணமயமான பொம்மைகளை கட்டித்தொங்கவிட்டால் குழந்தை கவனிக்க ஆரம்பிக்கும்.*

✣ ✣ ✣

*குழந்தையை வெதுவெதுப்பான தண்ணீரில் குளிப்பாட்டுவதே ஆரோக்கியமானது. லேசாகஎண்ணெய் தேய்த்தால் போதும். காது, கண் மூக்கு துவாரங்களுக்குள் எக்காரணம் கொண்டும் எண்ணெய் விடக் கூடாது. அவை ஆபத்தை விளைவிக்கக் கூடிய பழக்கங்கள்.*

✣ ✣ ✣

*குழந்தைகளின் நகங்களில் அழுக்கு சேரவிடாமல் 10 நாட்களுக்கு ஒரு முறை குளித்த பின் வெட்டிவிடவும். இல்லாவிட்டால் அவற்றால் தங்களையே கிள்ளி காயப்படுத்திக்கொள்வார்கள்.*

✣ ✣ ✣

### சைவக் கேக்



சமையல் குறிப்பு

தேவையானப் பொருட்கள்:-

| | |
|---|---|
| ரின் பால் | -3/4 ரின் |
| கோதுமை மா | -250 கிராம் |
| றவை | -250 கிராம் |
| மாஜரின் | -250 கிராம் |
| சீனி | -100 கிராம் |
| பேக்கிங் பவுடர் | -2 தே.க |
| வனிலா | -1 தே.க |
| முந்திரிகைவற்றல் | -50 கிராம் |

செய்முறை:-

* மாஜரினுடன் சீனியைச் சேர்த்து நன்கு அடிக்கவும், பின் ரின்பாலையும் சேர்த்து அடித்துக் கொள்ளவும்.
* பேக்கிங் பவுடர் சேர்த்து அரித்த மா, இலேசாக வறுக்கப்பட்ட றவை இவற்றைச் சேர்த்து நன்கு கலக்கவும்.
* வனிலா, முந்திரிகைவற்றல் சேர்த்து பேக்பண்ணவும்.

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 41 தொடக்கம் 45 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் –41**
றோமலோயோசப்.அன்ரனிசா,
3ஆம் கட்டை,
சிலாவத்தை, முல்லைத்தீவு.

**பரிசுத்திட்டம் –42**
அ.சுரோகா,
கே.கே.எஸ்.வீதி,
முடவேம்படி, சுன்னாகம்.

**பரிசுத்திட்டம் –43**
க.தர்சிகா,
மே/பா தெய்வேந்திராசா,
இல–7, 1ஆம்
குறுக்குத்தெரு,
வவுனியா.

**பரிசுத்திட்டம் –44**
இ.சுபாசினி,
பா.சத்திரன் தேநீர்கடை,
இல:11 விக்கிகுடியிருப்பு,
தேவிபுரம்.

**பரிசுத்திட்டம் –45**
யூ.சோபனா,
இல.29,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்கானும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்– 46**

பெயர்:..............................................

முகவரி:..............................................

..............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.




## ஏழு நற்குணங்கள்

ஏழ்மையிலும் நேர்மை.
கோபத்திலும் நிதானம்.
தோல்வியிலும் விடாமுயற்சி.
வறுமையிலும் பரோபகாரம்.
துன்பத்திலும் தைரியம்.
பதவியிலும் பணிவு.
செல்வத்திலும் எளிமை.

*ப.நாகேஸ்வரி,*
*இரணைமடு.*

# உண்ணிகள்

உண்ணி என்பது பூச்சிகள்போல் தோற்றமளிக்கும் இறக்கைகளற்ற உயிரினம். ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள் ஆகியவற்றில் ஒட்டிக்கொண்டு வாழும் ஒட்டுண்ணி. இது அரக்னிடா வகுப்பில் அகாரினா எனும் வரிசையைச் சேர்ந்தது. இதில் பலவகை உண்ணிகள் உள்ளன. மனிதர்களையும் விலங்குகளையும் தாக்கிப்பலவகையான நோய்களை உண்டு பண்ணும். மலைக்காய்ச்சல், முறைக்காய்ச்சல், உண்ணிக்காய்ச்சல், டுலாரெமியா (TULARE-MIA) எனும் ஒருவகை நச்சுக்காய்ச்சல் முதலியன இவற்றினால்தான் உண்டாகின்றன.

இதற்கும் பூச்சிகளுக்கும் பலவேறுபாடுகள் உள்ளன. முதிர் உண்ணிகளுக்கு எட்டுக்கால்கள் இருக்கும்.

இதன் உடல் ஒரேகட்டமைப்புடன் இருக்குமே தவிர, மூன்று கண்டங்களாக இருக்காது. பெரும்பாலான உண்ணிகள் 17 மி.மீ.நீளம்தான் இருக்கும். இதன் உடல் முட்டை வடிவிலோ, நீள். சதுர வடிவிலோ, கேடய வடிலிலோ இருக்கும்.

இதன் உணவு ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள் ஆகியவற்றின் இரத்தம். பின்புறமாக வளைந்த பற்களினால் இரையைக் கெட்டியாகப் பற்றிப்பிடித்துக்கொள்கிறது. உண்ணியை எடுக்கும்போது அதன் வாய்ப் பகுதியும் பற்களும் கடித்த புண்ணிலேயே தங்கிவிடும்.

இதன் வாழ்க்கை முட்டை, புழு, இளந்தை, முதிர் உண்ணி என்று நான்கு நிலைகளைக் கொண்டது. பெண் உண்ணி தரையிலோ, புல்லிலோ ஏராளமான முட்டைகளிடும். 20முதல் 180 நாட்களுக்குப் பிறகுமுட்டை பொரிந்து ஆறுகால் முட்டை புழுவாக வெளிவருகிறது. இதற்கு வித்து முட்டை புழு என்று பெயர். ஏதேனும் ஒரு உயிரினத்தில் தொற்றிக்கொண்டு சில நாட்கள் கழிக்கிறது. பிறகு அதிலிருந்து உதிர்ந்து சட்டை உரித்துக்கொண்டு எட்டுக்கால் இளந்தை (NYMPH) ஆகிறது. புதிய விலங்கைப் பற்றி இரத்தமுண்டு கொழுத்து கீழே விழுந்து தோலுரித்துக்கொண்டு வேறொரு விலங்கைத் தேடுகிறது. முதிர் உண்ணியாக மாறும் முன் இனத்திற்குத் தகுந்தவாறு 3முதல் 7முறைவரை சட்டை உரித்துக்கொள்கிறது. உணவு உண்ணாமலேயே இதனால் ஓராண்டு காலம்வரை இருக்க



முடியும்.

இது பலவிதங்களில் விலங்குகள் மீது ஒட்டிக்கொள்ளுகிறது. இவை ஏறக்குறைய 32 செ.மீ அதாவது தங்கள் உடல் நீளத்தை விட நூறுமடங்கு நீளம்வரை தாவக்கூடியவை. இந்தத் தாவு திறனே மற்ற விலங்குகளைப்பற்றிக் கொள்ள உறுதுணையாக உள்ளது.

## சொற்சிலம்பம் - 85

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | ப் | க் | சி | ன் | லை | தீ |
| டு | கு | நீ | பா | ந் | மி | ங் |
| தி | லா | தி | கோ | னி | ணி | ன் |
| து | அ | பி | ரி | டோ | சீ | ச் |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | ஜே |
| நை | ப | யா | சா | ஸ் | ரு | ம |
| ர் | ல் | ரே | ஓ | கி | த் | கா |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -83 இன் விடைகள்

01. விக்டோரியா
02. இங்கிலாந்து

## சொற்சிலம்பம் - 83 இன் பரிசுக்குரியவர்

க.தருபன், தரம்-5c,
மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை,
புதுக்குடியிருப்பு.

## சொற்சிலம்பம் - 83 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ந.மோகன்ராஸ், கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.
02. அ.பிரவீன், புதுக்குடியிருப்பு, மத்தியகல்லூரி.
03. ம.நித்தியகரன், கேப்பாபுலவு, முள்ளியவளை.
04. A.A ஜெயக்குமார், இல:63A, இராஜவரோதயம்வீதி, திருகோணமலை.
05. இ.பருணிதன், இல:-17/2 விசுவமடு.
06. கு.தயாஸ்கர், கிளி.கனகபுரம் ம.வி, கிளிநொச்சி.
07. ஞா. நினிதன், நல்லூர், யாழ்ப்பாணம்.
08. கு.சரணிகா, உருத்திரபுரம் ம.வி, உருத்திரபுரம்.

01. புதிய பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டவரின் சொந்த இடம்?

01) ....................................

02. விண்வெளியில் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப் பட்ட மூலக்கூறு?

01) ....................................

*சொற்சிலம்பம்-85*
*ஈழநாதம்,*
*யாழ்சாலை,*
*கிளிநொச்சி.*

பெயர் :- ....................................

முகவரி :-....................................

....................................

# ஓட்டப்பந்தயம்...

**பகுதி-03**




நன்றி:- பன்டேடைம்ஸ்

(தொடரும்)

# இளைஞர்களின் மாற்றத்தை அவதானித்து சமூகத்தோடு அவர்களை இணைக்க வேண்டும்

-------- சந்தியாப்பிள்ளை ஆசிரியர்

நாற்பது வருட ஆசிரியர் சேவையுடன் தமிழ் இலக்கியத் துறைக்கு பெரும் பங்காற்றி வரும் சுவாம்பிள்ளை- சந்தியாப்பிள்ளை மாஸ்ரர் தனது 88 வயதிலும் எழுதிக் கொண்டிருக்கிறார். மன்னார்- விடத்தல் தீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மாஸ்ரரை நேர்காணலிற்காகச் சந்தித்தோம். தனது சமய, சமூக இலக்கியப் பணி தொடர்பாக எம்முடன் மனம் திறந்தவற்றை வாசகர்களிற்காகத் தருகிறோம்.

நாம்:- உங்களது ஆசிரியப் பணியுடன் இலக்கியத் துறை தொடர்பாக....

மாஸ்ரர்:- 25 வயதில் வங்காளைப் பகுதியில் ஆசிரியப் பணியினை ஆரம்பித்தேன். தொடர்ந்து வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆசிரியப் பணியாற்றினேன். தமிழ் மொழியைக் கற்பித்த மையால் இயல்பாகவே இலக்கியத் துறையில் என்னை இணைத்ததுடன் எழுத்தாளராகவும் இயங்கத் தொடங்கி னேன். நாங்கள் கல்வி கற்றதும் கற் பித்ததும் விரிவானதும் வித்தியாச மானதும் முழுமையாக விளக்கப் பொருட்களின் பரிமாற்றங்களினா லேயே கற்றல் கற்பித்தல் இடம் பெற்றன.

இன்று இவை முழுமையாக மாற்றமடைந்துள்ளன. ஆசிரியர்- மாணவர்களிடையிலான உறவு இடைவெளியுள்ளதாகவுள்ளது. பொருத்தமற்ற கற்பித்தல் முறையும் திட்டமிடப்படாத அரசாங்கத்தின் கல்விக் கொள்கையும் காரணமாக இருக்கின்றது. இன்றைய ஆசிரியர்கள் தனியே கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதில்லை. வேறு தொழில்களையும் செய்து வருகின்றனர்.

தேடல் உடைய ஆசிரியர் சமூகம் உருவாக வேண்டும். பழைய தண்ணீர் உபயோகமற்றது. நீர் ஊற, ஊற அள்ளிக் கொடுக்கும்போதே அதன் தனித்துவமும் மகத்துவமும் மேலோங்கும். இதைப் போன்றே ஆசிரியர்களது கற்பித்தல் செயற்பாடுகள் அமைய வேண்டுமென்றவரிடம்.

நாம்:- சமய, சமூக பணி பற்றி.....

மாஸ்ரர்:- ஆன்மீகத்தின் ஊடாகக்கலை, இலக்கியப் பணிகளை தேட முற்பட்டவர்களில் கரையோரக் கிராமமக்கள் முதன்மையானவர்கள். நானும் நெய்தல் நிலத்தை சேர்ந்தவன். திறமையானவர்களை இனம் கண்டு அவர்களை வழி நடத்துவதில் ஆன்மீகத் தலைவர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். இவர்களினால் நான் வளர்க்கப்பட்டமையினால் சமயப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றேன்.

1976 ஆம் ஆண்டு ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வு பெற்றதுடன் முழு நேர சமூக செயற்பாட்டாளனாக என்னை மாற்றிக் கொண்டேன். கிராம வளர்ச்சிக்கான உதவிகள், வேலைத்திட்டங்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் கதைத்து என்னுடனும் சிலரை சேர்த்துக்கொண்டும் இன்றுவரை என்னாலான பணிகளை செய்து வருகிறேன்.



நாம்:- எழுத்தாளன் என்ற வகையில் உங்கள் படைப்புக்கள்....

மாஸ்ரர்:- சிறுவர் பாடல்கள், கவிதை, கட்டுரை, சிறுகதைகளுடன் பல நாடகங்களையும் எழுதி நெறியாள்கை செய்துள்ளேன். நொண்டி, மூடன், அல்லி அருச்சுணா போன்ற நாடகங்கள் பலரது பாராட்டை பெற்றன. விடத்தல் தீவு வித்தாப்பு.

அன்புப்பரிசு, முழங்காவில் மாதா, யோசப்சாஸ் காவியம் ஆகிய நான்கு நூல்களை வெளியிட்டுள்ளேன். மன்னிப்பு என்ற நாவலை எழுதி வருகின்றேன். 1949 ஆம் ஆண்டு மன்னாரில் கிறிஸ்தவர்களும் முஸ்லிம் மதத்தவர்களும் மோதிக் கொண்டதில் 36 கிறிஸ்தவர்கள் இறந்தனர். இவர்களது நினைவாக 40 பாடல்களை எழுதி இறை இரக்கத்தை வேண்டினேன். எனது இறுதிக்காலம் வரை எழுதிக் கொண்டிருப்பதனையே நான் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

நாம்:- விடத்தல் தீவு வித்தாப்பு.....

மாஸ்ரர்:- விடத்தல் தீவின் பூர்வீக வரலாற்றை தாங்கிய ஆவணமாகவும் எனது முதலாவது நூலாகவும் இதனை எழுதினேன். 1565 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடல் கோல் பேரலையினால் பல கிராமங்கள் அழிக்கப்பட்டன. மன்னார்- திருக் கேதீஸ்வரம் இரண்டாகப் பிரிபட்டது. மன்னார் பொன்னாங்கொட்டை, கொம்புறுக்கி கிராமங்கள் அழிக்கப்பட்டு கற்குவியல்களாகவுள்ளன. 'கடல் மூழ்கிவிடப்பட்ட இடமே விடத்தல் தீவு' எனப் பெயர் பெற்றது. இங்குள்ள கண்ணா மரங்கள் மடகஸ்கார் தீவில் இருந்து கடல் பேரலையுடன் அடித்துவரப்பட்ட விதைகளினால் உருவாகியன.

இன்றைக்கு சுமார் 300 ஆண்டுகளிற்கு முன் மன்னார் கள்ளிப்பிட்டி- முடக்கனாறு பகுதிகளில் இருந்து கடற்றொழிலை மேற் கொள்ளும் நோக்கில் குடியேறிய மக்கள் குழுமமே எமது கிராம மூதாதையர்கள். கால மாற்றங்களின் விளைவாக தொழில் நிமிர்த்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உறவுகளின் காரணமாக நவாலி, நாவாந்துறை, அல்லைப்பிட்டி, வேலணை பகுதி மக்களும் விடத்தல் தீவில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

எமது கிராமத்தின் வரலாற்றைக் கூறும் காவியமாக இந் நூலை எழுதினேன்.

நாம்:- உங்கள் மாணவர்கள் இன்றைய இளைஞர்கள் பற்றி....

மாஸ்ரர்:- எமது மாணவர்கள் நாட்டின் பல பாகங்களிலும் உயர்ந்த நிலையில் உள்ளனர். பெருமைக்குரிய பதவிகளிலுள்ள பலர் என்னுடைய மாணவர்கள் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களில் அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை மாஸ்ரர் (வங்காளை) அந்தோனிப்புலவர் (பேசாலை) சிற்பக்கலைஞர் அடைக்கலம் போன்றவர்கள் முக்கியமானவர்களில் சிலர். அன்று எமக்கும் மாணவர்களிற்குமிடையே புனிதமான பக்தி நிறைந்த உறவு நிலவியது. அதன் பயனாக நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் எனும் நோக்கில் எம்மை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றினோம். இதனால் அன்றும் சரி இன்றும் சரி முழுமையான நிறைவில் உள்ளோம்.

இளைஞர்களைப் பற்றி கூறுவதென்றால் நிறையக் கூறலாம். இவர்கள் முந்தின கடனை மறந்து பிந்தின கடன்தான் கடனென நினைக்கிறார்கள். பெற்றோர்கள் முதியவர்களை மதிப்பதில்லை. அவர்கள் மீது அன்பின்றியுள்ளனர். அட இவர்கள் இப்படி பொறுப்பில்லாமல் திரிகிறார்களே இவனும் அவங்களோடு சேர்ந்திட்டான் என்று ஒதுக்கி வைக்கக் கூடாது. தற்கால நவீன இலத்திரனியல் தொடர்பு சாதனங்களின் பாவனையின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இன்றைய இளைஞர்களும் துடிப்புள்ளவர்களாக உலகப் போக்கிற்கு அமைவாக தம்மை மாற்றி வாழ நினைக்கிறார்கள்.

இளைஞர்களின் செயற்பாடுகளை இனம் கண்டு அவர்களின் போக்கின் மாற்றத்தை அவதானித்து அவர்களை சமூக செயற்பாடுகளில் இணைக்க வேண்டும். சமூகப் பொறுப்புக்களில் அவர்களையும் இணைக்க வேண்டும். சிறு தொழில்களை தொழில் பயிற்சிகளை இளைஞர்களிற்கு வழங்கி சமூக ஓட்டத்துடன் இணையக் கூடிய வகையில் அவர்களையும் முடிந்த வரை இணைக்கும் போதே இளம் சமூகத்திடம் மாற்றத்தை பெறலாம். அதே நேரம் பயனுள்ள இளம் சமூகத்தையும் உருவாக்கலாம்.

நாம்:- சமய, சமூக பணியாளர்கள் இலக்கிய வாதிகளிற்கு கூறுவதாவது....

மாஸ்ரர்:- இதனை செய்யலாம். இதனை நான் செய்தால் என்ன என்ற மனத்திடத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும். சமூகத்துடன் சேர்ந்து வாழப்பழகிக்கொள்ளவேண்டும். கிடைக்கும் பொறுப்புக்களை தட்டிக் கழிக்காது முடிந்தவரை அவற்றை எடுத்து திறமைகளை வெளிப்படுத்தலாம். இருக்கின்ற போது கிடைக்கின்ற வற்றைக் கொண்டு எதையாவது செய்ய வேண்டுமென்பது ஒவ்வொரு மனித மனங்களிலும் தோன்றி மறையும் துறைசார் திறமைகளை உரிய முறையில் செயல்படுத்த வேண்டும்.

எமது திறமைகளை நாமே வெறுத்தொதுக்கும்போது வேறு யாரும் பாராட்டுவார்கள் என்பது எந்த வகையில் நியாயமாகும். எம்மை நாமே வளப்படுத்த முதலில் எம்மில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். நாம் வைக்கும் நம்பிக்கைக்கு பங்கம் விளைவிக்காது செயலாற்ற நம்மை தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

சமூகத்தில் பல கோணங்களில் இயங்கிவரும் சந்தியாப்பிள்ளை மாஸ்ரரை சந்தித்து நிறைவான கருத்துக்களை பெற்ற நிறைவில் செவ்வியை நிறைவு செய்தோம். சமய சமூக கலை இலக்கியப் பணிகளிற்காக பல பாராட்டுதல்களையும் கௌரவங்களையும் பெற்றுள்ள மாஸ்ரர் 2002 ஆம் ஆண்டு கலாபூசணம் விருதினையும் பெற்றுள்ளார். அரசாங்கம் வழங்கியதனை மெருமையாகக் கூறுகின்றார்.

இப்போது தொடர்ச்சியாக எழுதிவரும் சந்தியாப்பிள்ளை மாஸ்ரரை நேர்காணலிற்காக சந்தித்த வேளை தனது உறவினரிற்கு அஞ்சலிக் கவிதையைக் எழுதிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




காட்டிக்கொடுக்கும் கண்ணியவான்கள் காணும் சுகமென்ன?

எங்கள் வீட்டில் மிக அருகில் வடக்குப்பக்கமாக பாதுகாப்புச்சுவர் மண்ணால் அமைக்கப்பட்டு வேலி அடைத்த இடம். அருகில் பாரிய பதுங்குகுழிகள், கொட்டில்கள் அதிலே அவர்கள்.

வீட்டைவிட்டுப்போக விரும்பாமல் நானும் என்கணவரும் எங்கள் வீட்டிலேயே இருந்தோம். அடிபாடு சுடுபாடு எல்லாம் நடந்ததுண்டு. ஏதோ கதைத்து சமாளித்து சமைத்து சாப்பிட்டு காலத்தை கடும் நரகமாக கழித்துக்கொண்டிருந்தோம்.

எங்கள் அயலில் ஒரு பையன் அழகான அருமையான திறமையுள்ள பையன் என்னிடம் வருவான். அவன் படிப்பு குழம்பி விட்டது. சில நாட்கள் அவனை காணவில்லை. இயக்கத்தில் சேர்ந்து விட்டான் என்று சொன்னார்கள். அவன் முகம் அடிக்கடி எனக்கு நினைவுக்கு வரும். வருடம் மாதம் திகதி எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. அவன் அந்த அற்புதன் மணலாற்றுப் போரில் மண்ணுக்காக தன் இன்னுயிரை பொன்உயிரை கொடுத்து மாவீரன் ஆகிவிட்டான்.

தாய் தலையிலடித்து அழுதாள். புரண்டாள். பொருமினாள். அப்புறம் அவனுக்காக நினைவுமலர் ஒன்று எழுதித்தரும்படி கேட்டாள். எழுதினேன். எப்படி எழுதினேன். மண்ணெண்ணெய் கிடையாத காலம் வெளிச்சம் வெளியே தெரியக் கூடாதென்ற கட்டளை. கும்மிருட்டில் சீவித்த நாட்கள். பகலில எழுத முடியாது. இரவில் மூலை அறை ஒன்றில் குப்பி விளக்கின் வெளிச்சத்தில் அழுது அழுது எழுதி முடித்தேன். அது நினைவு மலராக அச்சேறியது. எனக்கும் சில பிரதிகள் கிடைத்தன.

ஒரு நாள் மாலை இராணுவ வீரன் ஒருவன் அந்த மலரின் பிரதி ஒன்றுடன் வந்து நின்றான். இஞ்ச வாங்கோ என அழைத்தான்.நான் மட்டும் தனியே இருந்தேன். கணவர் எங்கோ போய்விட்டார். நான் அவன் கூப்பிட்ட இடத்துக்குப் போனேன். கையிலிருந்த மலரை என்னிடம் நீட்டினான். இது யார் எழுதினது. நீதானே. அட்டகாசமாய் ஆத்திரமாய் கொதித்தெழும் குரலில் கேட்டான். நான் மறுக்கவில்லை. மறுத்துப் பயன்இல்லை. ஆம் என்று தலையை ஆட்டினேன். வாய் உலர்ந்துவிட்டது. கைகள் கட்டுப்பாடின்றி நடுங்கின.

"நாங்கள் உங்களை புலிகளிடமிருந்து காப்பாற்ற வந்திருக்கிறோம். நீங்கள் புலியைப் பற்றி எழுதலாமா அந்தக் குடும்பத்தை காட்டித்தந்திருக்கவேண்டும். வா பெரியதுரையிடம் என்று அழைத்துப்போனான். அதற்கிடையில் என் கணவர் வந்துவிட்டார். பதறிப்போய் பயந்துபோய் விரைவாக வந்தார். அவரை அவன் கிட்ட வர விடவில்லை. பெரிய தொரை ஏதோவெல்லாம் கேட்டான். சுட்டுவிடுவேன் பாவம் என்றான். பிறகு எப்படியோ விட்டுவிட்டான்.

சரி இதை ஏன் கூறிகிறேன். அந்த மலரில் உள்ள விசயத்தை சிங்களத்தில் மொழிபெயர்த்து அவனுக்குக் கூறி என்னையும் காட்டிக் கொடுத்தவன் எம்மவர்களில் ஒருவன் தானே. அவன் இதனால் கண்டபலன் என்ன ஏன் இப்படிச் செய்கிறார்கள்?

சுந்தரி

# கவனத்தில் கொள்ளப்படவேண்டிய புதிய உபாயங்களின் நகர்வுகள்

ஐங்கரன்

இலங்கை-இந்திய உறவுக்கான அத்தியாயம் இருநாட்டு அரசியல் தலைமைகளாலும் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டுவருகிறது. இலங்கை ஆட்சியாளர்களைக்காட்டிலும் இந்திய ஆட்சியாளர்கள் இதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திய விழிப்புணர்வே இந்திய ஆட்சியாளர்களின் கவனத்திற்குப் பிரதானகாரணமாகவுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினை சார்ந்தே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மட்டுமல்ல இலங்கைக்கும் உலக நாடுகளுக்குமான உறவு காணப்படுகின்றது. தமிழர்களின் அரசியல் வடிவமே இலங்கையின் உலக நாடுகளுடனான உறவுக்குக் காரணமாகிவிட்டது. அந்த வரைபுக்குள் இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் ஷியாம் சரணின் இலங்கை வருகையையும் அதன் தாக்கங்களையும் பரிசீலிப்போம்.



ஷியாம் சரண்

முதலில் ஷியாம் சரணின் தமிழ்ர்கள் தொடர்பான (இந்தியாவின்) பார்வையை நோக்குவோம். இலங்கைத் தமிழரின் நலனைப் பேணவேண்டும் என்ற விடயத்தில் இந்தியா பற்றுறுதியோடு இருக்கிறது. இலங்கையுடனான உறவை இந்தியா கையாளும் போது இலங்கை தமிழர்கள் தொடர்பான நிலைப்பாட்டை இந்தியா கவனத்தில் எடுக்கும் என்றார். இதனை தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடனான சந்திப்பின் போது அவர் தெரிவித்தார்.

இதுவொன்றும் புதியதல்ல என ஒதுக்கிவிடலாம். ஆனால் இந்திய ஆட்சியாளர்கள் எப்போதும் தமிழர்களையும் விடுதலைப்புலிகளையும் வேறுபடுத்திப் பார்க்க விரும்புபவர்கள் அதனையே ஷியாம் மீண்டுமொரு தடவை வெளிப்படுத்தினாலும் இலங்கைத்தமிழர்களையும், இலங்கை அரசையும் தனித்தனியாகப் பிரித்துப்பார்க்கவும் அதற்கென தனித்தனியே உறவை அணுகவும் முயற்சிப்பது அவரது கருத்திலிருந்து உணர்த்த முடிகின்றது. இத்தகைய போக்குக்கான அரசியல் முதலும் ஒரு தடவை இந்தியர்களால் வெளிப்படுத்தப்பட்டது. கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான தாக்குதலை அடுத்து அமெரிக்கர்களின் கருத்து நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அப்போது அமெரிக்கர் வெளியிட்ட அறிக்கையில் வடக்கு கிழக்கில் இலங்கை அரசு நிகழ்த்தும் குண்டுத்தாக்குதலை உடனடியாக நிறுத்தவேண்டுமெனக் கோரியது. அதற்கு மறுநாள் பத்திரிகையாளர்களை சந்தித்த அப்போதய வெளிவிவகாரச் செயலாளர் கட்டுநாயக்கா மீதான தாக்குதலுக்கு எந்தப்பதிலும் அளிக்காமல் மௌனம் சாதித்ததும், அப்போது ஒருபத்திரிகையாளர் விடுதலைப் புலிகளின் தாக்குதலை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா எனக்கேட்டதற்கு செயலாளர் மௌனம் சாதித்தமையும் ஊடகங்களில் முதன்மைப்படுத்தப பட்டு பேசப்பட்டது.

உண்மையில் அந்த மௌனம் விடுதலைப் புலிகளுடனான நெருக்கத்தையோ அல்லது தமிழர் விடயத்தில் நெருக்கமான உறவு என்பதை ஏற்படுத்துவதற்காகவோ அல்லது மாறாக அமெரிக்காவின் அணுகுமுறையில் ஏற்பட்ட மாறுதலின் பயத்தின் நிமித்தமென்றோ கூறலாம். அதேபோன்ற நிலை இந்தியர்களுக்கு தற்போது அதிகரித்துவிட்டது.

இந்தியாவுக்குப் பதில் சீனா என்ற நிலை தென் இலங்கையில் வளரத்தொடங்கிவிட்டது. சீனாவின் அண்மைய நடவடிக்கைகள் பெற்றோலியப் பொருட்களுக்கான வழங்கலில் ஏற்பட்ட சிக்கலால் இலங்கை சீனாவுக்கு வழங்கியுள்ளமை, சீனா அதிகமான நெருக்கத்தையும் உறவையும், உதவிகளையும் இலங்கைக்கு வழங்கமுன்வந்திருப்பவை எல்லாம் சரணின் வருகைக்கும் அவரது அணுகுமுறையில் ஏற்பட்ட சிறிய தளர்வுக்கும் காரணமாகும்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை சந்தித்தமையானது ஒருவகையான எச்சரிக்கையை இலங்கை ஆட்சியாளர்களுக்கு வழங்குவதற்காகவேயாகும். இலங்கை சீனாவுடன் அதிக நெருக்கத்தை பேணுவதை ஏற்றுக்கொள்ளாத இந்தியா இலங்கை தமிழர்களின் பக்கம் சாய்வது போல காட்டிக்கொண்டு மீண்டும் இலங்கை அரசை தம்மோடு இணையவைப்பதே நோக்கமாகும். இதனை விளங்கிக் கொள்ள அவரது விஜயத்தின் மறுபக்கத்தையும் பார்ப்போம்.



சீனப்பிரதமர்

இலங்கையின் பாதுகாப்பில் இந்தியா நிலையான அக்கறை கொண்டுள்ளது. கடல்கோள் நிவாரண நடவடிக்கையிலும் உதவுவதற்கு தயாராகவுள்ளது. இலங்கையின் ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடு, மற்றும் இறைமை ஆகியவற்றுக்கு இந்தியா உறுதியான ஆதரவை வழங்குவதோடு, இனப்பிரச்சினைக்கான தீர்வு அனைத்து மக்களின் அபிலாசைகளையும் நிறைவேற்றும் தீர்வாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் என்று குறிப்பிட்டார்.

இலங்கை அரச இயந்திரத்தையும், அதன் இறைமையையும் பாதுகாக்கும் ஒரு நாடு எப்படி தமிழர்களின் நலன்களை பேண முடியும். இது இலங்கையின் வரலாற்றையும் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்திற்கான காரணத்தையும் புரிந்துகொள்ளத் தெரியாத ஒருவர் கூறுவதுபோன்றல்லவா அமைந்துள்ளது. இத்தகைய இரட்டைவேடமே இந்தியாவையும் தமிழர்களையும் பிரித்த முக்கிய கருத்து நிலை காரணியாகும். அதிலிருந்து இந்தியர்கள் இப்போதும் மாறவில்லை. அவர்கள் சீனாவின் வருகையையும் சீனா-இலங்கை நெருக்கத்தையும் ஆபத்தாகக் கருதுகிறார்களே அன்றி தமிழர் பிரச்சினையோ அல்லது இலங்கை ஆட்சியாளர்களின் போக்கையோ புரிந்துகொண்டதன் வெளிப்பாடல்ல.

மறுமுனையில் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் அடுத்த ஆபத்தானது அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான விசேட செயலாளர் அம்மணி கிறிஸ்ரினா ரொக்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்தபோது கூறியிருப்பது. அதாவது தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு அமெரிக்கா எதிரான நாடு அல்ல என்பது வன்முறையிலான அணுகுமுறையையே அமெரிக்கா நிராகரிக்கின்றது.



கிறிஸ்டினா றொக்கா


இது உண்மையில் சாதகமாகவும், பாதகமாகவும் கருதவாய்ப்புண்டு. அதனை வேறொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம். அத்தகைய போக்கும், அணுகு முறையும் இந்திய தலைமைகளை குழப்பிவிட்டது. சில வேளைகளில் அமெரிக்கா இந்தியாவை முந்திவிடுமோ? என்பதே சரணின் அத்தகைய அறிக்கைக்குக் காரணமாகும்.

இலங்கை இனப்பிரச்சினையில் அமெரிக்காவுக்கும்-இந்தியாவுக்கும் இடையில் ஒரு இழுபறியும் போட்டித்தன்மையும் ஏற்பட்டுவிட்டது. இதனைப்புரிந்துகொண்டு நாம் செயற்படத் துணிய வேண்டும். உலகிலுள்ள எல்லா அரசுகளும் உபாயங்களையும் தந்திரங்களையும் கையாள முனையும்போது தமிழர்கள் அதனை பின்பற்றுவது ஒன்றும் தவறானதல்ல. அரசியலை முனைப்பாக பின்பற்றும் ஒவ்வொருவரிடமும் வளரவேண்டிய அம்சம் தந்திரமும், உபாயமுமாகும்.

சர்வதேசத்தில் முதலாவது வலுமிக்க சக்தி அமெரிக்கா, ஆபத்தான் சக்தியும்கூட. அவ்வாறே பிராந்திய சக்தியாகவும், 2020 பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடாக வேண்டும் என்ற தூர நோக்கோடு செயற்படும் அரசு இந்தியா எப்போதும் தமிழர்களையும் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தையும் அச்சத்தோடும் அழிக்கும் நோக்கத்தோடும் செயல்படும் அரசு. மூன்றாவது நிலையில் இலங்கையை பாதுகாக்கும் சீனாவின் வருகை மொத்தத்தில் உலகின் பிரதான சக்திகளை வைத்து இலங்கை அரசும் ஆட்சியாளர்களும் உபாயங்களையும், தந்திரங்களையும் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கும் போது இவ் உலக சக்திகளும் தமது நலன்களை முன்னிறுத்தி செயல்பட்டுவருகின்றன.

முடிவாக சரணின் வருகை இந்தியாவின் போக்கில் பெரிய மாறுதல் எதனையும் காட்டாது விட்டாலும் அமெரிக்கா, சீனா, போன்ற சக்திகளின் உபாயங்களுக்கு பதிலளிப்பதாக உள்ளது. இதனை முறியடிக்காதுவிட்டாலும் புரிந்துகொண்டு மாற்று வழிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். தமிழர்களையும் அவர்களது போராட்டத்தையும் தக்கவைக்க அரசியல் உபாயங்களை அதிகம் பின்பற்றவேண்டிய காலகட்டத்தில் நிற்கிறோம்.

# பெண்கள் இயல்பாய் வாழவேண்டும்



"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' எனும் பாரதியின் சிந்தனை பெண்களின் உரிமைக்குரலுக்கான தாரக மந்திரமாக அமைந்தது. அச் சிந்தனையின் பேறாக பெண்கள் இழிவு செய்யப்படக் கூடியவரல்லர் என்பது வலியுறுத்தப்பட்டது. மாதர்களின் அறிவைக் கெடுத்து அவர்களைப் பேசாமடந்தைகளாக ஆக்கிய மூடர்களை"மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்" என்பதாக ஆர்ப்பரித்தார்.

இன்று கல்வி கற்று பல்துறைகளிலும் மேலோங்கிய பெண்கள் புதுமைப் பெண்களாக வலம் வருகின்றனர். சமுதாயக் கொடுமைகள் குறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. எந்தவகையில்? எந்தவொரு தனிச்சமூகமும் பெண்களின் மீது தனது விருப்பத்தைத் திணிக்காதவாறு இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அவை வரையப்பட்டுள்ளனவா? சமூக வேறுபாடுகளிடையே மனிதாபிமான முறையில் தத்தம் உரிமைகள் உரைப்பதற்கு உகந்தவழியாது? மரபுகளின் எதேச்சதிகாரமும் பாகுபாடுகளும், வல்லமைகளின் ஆற்றல்களாகப் பெண்களின் உரிமைகளை மறுக்கும் தமது சொந்தமான சுயத்தைத் தெரிவிப்பதில் உள்ள தடைகளாக இடையூறாக இருக்கின்றது. உயர்குழாமின் கலாச்சாரமொன்றை அல்லது சித்தாந்தம் ஒன்றை ஆதரித்துப் பேசுவது பெண்கள் மீது பெரும்பான்மை மேலாதிக்கத்தைத் திணிக்க மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகவே கருத முடிகிறது.

பெண்கள் உணர்வற்றவர்களாயுள்ள காலமும் பொறுமையே பெருமையாய் கண்ணை மூடிக் கொண்டு காலத்தை ஓட்ட வேண்டியவர்களாக கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை விட்டுக்கொடுத்தல் மனித உயர்விழுமியங்களாக விதந்துரைக்கப்பட்ட வேளைகளில் பெண்கள் மத்தியில் மட்டும் காலம் காலமாய் அடிமைச்சங்கிலியால் பூட்டப்படுவதற்கு அதியுயர் ஆதாரங்களாகக் கணிக்கப்படுகின்றன.

மனிதமெனும் அமைப்பினுள் அனைத்து மட்டங்களில் உள்ள பெண்களும் நேர்மை, உண்மை எனும் அளவுகோல்களால் எந்த வகையில் இனங்காணப்படுகிறார்கள். மனிதர்களிடையே பெண்களெண்ணும் ஒருமைப்பாட்டை எந்த மட்டத்தில் எந்த அடிப்படையில் காண்பது? பொருளாதாரமா? கல்வி அறிவா? வாழ்வியற்கோலங்களா? தனிமனித சுரண்டல்களா? பாலியற் சுரண்டல்களா? கடமைகளா? கருத்துக்களா? வல்லமை பொருந்தியவர்களா? நடத்தைப் பண்புகளா இவற்றுக்கு மேலாக உண்மையா, நேர்மையா? எவை? எவை?எவை?? பெண்களின் சிந்தனைகளும் சிந்தனைகளை மறுதலிக்கும் பாரம்பரியத் தடைகளும், ஆணாதிக்கத்தின் கோரமான அச்சுறுத்தல்களுக்கிடையே மனித இனத்தின் சமூக ஒழுங்கமைவு உண்மையிலேயே நியாயமானதா? நியாய மற்றதா? எனும் சிந்தனையைத் தோற்றுவித்தது.

இவ்வகையில் இதுவரை கேள்வி மறுப்பின்றிப் பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் எதிர்க்கப்பட்ட வேளையில், மறுதலிக்கப்பட்ட வேளையில் பெண்ணியம் உயிர் பெற்றிருக்கலாம்.

பொதுவாழ்க்கைப் பண்புகள் தன்வயப்படுத்தலாகி பெண் என்பதற்குக் காரணமாகப் பல பட்டங்கள் வழங்கி பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதா?

சிந்தனை மனச்சான்று, மதமாகியவற்றின் சுதந்திரத்திற்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவரெவரும் சித்திரவதைக்கோ, அன்றேல் கொடுமையான மனித தன்மையற்ற இழிவான முறையில் நடத்தப்படுவதற்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படலாகாது. சட்டத்தின் முன் சகலரும் சமமானவர்கள். மேலும் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உருத்துடையவர்கள். பாரபட்சத்துக்கு எந்த அடிப்படையிலும் உட்படுத்தலாகாது. இவையாவும் மனித உரிமைகள் சாசனத்தில் வரையப்பட்டவை. மனிதனை மனிதனே வதைப்பதற்காய் வடிக்கப்பட்டவையா?

சிறுசிறு பிரச்சினைகளாகக் கூறி வஞ்சிப்பவர்கள் சுலபமான காரியமாக காண்பவர்கள் ஒரு பெண்ணின் சமூகத்தின் வாழ்வியல் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளையும் தம்வசதிகள் போலவே முன்வைக்கலாம். வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டதன் பயனாக பெண்ணுக்குரிய வடிகாலாகத் தீர்வாக பொறுமை,சிந்தனை போன்றவற்றுடன் வாழத்தெரியாமல் வாழ்பவளும், சுயமாகத்தன் காலால் நடப்பவளும் யாரையோவெல்லாம் நம்பி வாழ்வதாக சித்திரங்களையும் வரைந்து விடுகிறார்களே"பாதிப்பு" என்பது உண்மையான அளவுகோல் கொண்டு அளக்கப்படவேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் தனிமனித இயல்பாய் வாழவேண்டும் எனும் அவாவுடன் வாழுதல் தவிர்க்க முடியாதது.

**இனியவள்**

---



## விசுக்விசுக் விசாலாச்சி

இந்தா அந்தா எண்டு மேதினமும் முடிஞ்சுது. அவரவர் இயண்டளவு ஆள்திரட்டி ஊர் வலமும் விட்டுக் கூட்டமும் போட்டிட்டினம். இப்பானெல்லோ எங்கள ஜே.வி.பி. காறற்ர வெத்துவேட்டுகளுந்தெரிஞ்சது. அ...நீ என்னத்தச் சொல்லு. தேனிலகையவிட்டவன் புறங்கையநக்காமவிடுறானே. பின்ன ஆட்சி, அதிகாரம், கதிரை, வரவேற்புகள், பூமாலையள் இதெல்லாங்கதிரையில இருக்குமட்டுந்தானே. எடேய் எல்லாரும் ஏறின குதிரையில சக்கடத்தாரும் ஏறிச்சறுக்கி விழுந்தாராம்.

பின்ன இடதுசாரி, இடதுசாரியெண்டு நிண்டவை இப்ப, வலதுசாரியோட கைகோத்துக்கொண்டு வாய்க்கு வந்தமாரிப் பேசிக் கொண்டுதிரிய, உன்னப் போலான்றாப்பா நானும் நினைச்சன். இவங்கள் பெரிய கொள்கைப்பற்றாளர்தான்போலயெண்டு. அம்மாவக்கண்டதோட எல்லாஞ் சும்மாண்டு போட்டாங்கள்.

மேதினத்தில சொல்லியிருக்கிறான்பாவி ஒரு வார்த்தை. லச்சமில்லகோடி பெறும்.அரசாங்கம் மக்களுக்கு தேவையானதெல்லாஞ் செய்யுமட்டும் அதைக்குழப்பமாட்டம் எண்டெல்லே திருவாய் மலர்ந்தருளியிருக்கினம். மறந்திடாத கதையோட கதை பொதுக்கட்டமைப்பபோட்டுத் தான் தீருவனெண்டு அம்மா சொல்லிப் போட்டா எப்பண்ட கதையெல்லாம் வேண்டாம். போடுவனெண்டாப்போடுவா. இல்லாட்டித் தான் எங்கடதரப்பால தந்தாத்தா தராட்டி விடெண்டு சொல்லிப் போட்டினமே. இப்ப விழுந்தது லேசான விசயமில்ல. தம்பி... 'தராட்டிவிடெ'ண்டு சொன்ன கதையிருக்கெல்லே. அந்தக் கதைக்குமட்டும் கொண்டு கூட்டு, விளக்கம் பொழிப்புரை எல்லாம் போட்டிச்சினமோ கதை கந்தலெண்டு விளங்கும்.

உந்தக்கதையோட அம்மாவுக்கு முகம் ஓடிக்கறுத்திட்டுது. இனி இடதுகை வலது கை வரட்டுமெண்டு பார்த்தாலோ தானாத்தாரை வார்த்துக்குடுத்திட்டாவெண்டதுதான் வெளிச்சம். பின்ன அங்கால இஞ்சால புறண்டிக்கொண்டு வந்து பொத்தல் பானைக்க போட்ட மாதிரி எல்லாந்தான் போகப்போகுது. நீ இருந்து பாரன். பொதுக்கட்டமைப் பெண்டதுதான் இப்ப பிரச்சினை எண்டமாரியெல்லே நாடகம் பட்டிமன்றமெல்லாம் நடக்குது. அப்ப சமாதானப்பேச்சுவார்த்தையள் ஒப்பந்தங்களெல்லாம் எங்கயாம்.அ... முந்திவந்த செவியப் பிந்திவந்த கொம்பு மறைக்கிறதாம்.

சுனாமியெல்லே இப்ப எல்லாப் பிரச்சினைக்கும் முன்னுக்கு நிக்குது. பொதுக்கட்டமைப் பெண்டதையே குடுக்கக்குத்தி முறியிறவை... இடைக்கால வரைவைக்காண, அரசாங்கத்தையே குழப்பி லெக்சன் வச்சவை. தமிழனுக்கு உரிமையோட தரப்போறாங்கள். அ... அதுக்குள்ள இன்னுமொரு கதையிருக்கு.

முன்னையொருக்கா இதேமாரி இடதுசாரி வலதுசாரியோட நிண்ட காலமிருந்ததடா... எப்ப... அ... சந்திரிகாம்மாவட தாய்க்காறி ஆட்சியப் பிடிக்கக்கூட்டமைச்சவா... அறுவத்தொம்பதில. அ... அப்ப இலங்கை கொமினிசுப் பாட்டியும் கூட்டு... அவை போட்ட யாப்புத்தான்ராப்பா குடியரசு யாப்பு கொல்வினாடி சிலுவா போட்டது. பிறகு-அவை தங்கட காலம் முடிய முதல் குழம்பிப்போய் கைவிட்டவை தானே. அதுசரி... இப்ப யென்னத்துக்கு இதை யெல்லாங் கதைக்கிறனெண்டு பார்க்கிறியள். எல்லாங் காரணமாத்தான் காலத்துக்குக் காலங் கூட்டணியள் அமைச்சுக் கலக்கல் அரசாங்கம் நடத்துறவை... இலங்கையில இல்லையடா, உலகம் முழுக்கத்தான் சொல்லுறன்.

சனத்துக்கு ஒண்டுஞ் செய்யவுமேலாது. செய்ததுமில்ல. அவையளுக்கு ஒருத்தரையொருத்தர் தடவி விடவும் மருந்துகட்டவும், நேரஞ்சரி- எவனவன் எப்பிடிப் போனாலும் என்னவோ சொல்லுவினமே 'என்னதான்சொல்லி எதைத்தான் உரைத்தாலும் கந்தனுக்குப் புத்தி எதுக்கையோ எண்டு. அதோடப்பா. சூரபத்மனை வதைச்சுத் தான் மயிலாயும் சேவலாயும் மாத்தினது. மயில்ல இருக்கிற கந்தனுக்கு மயிலாயிருக்கிற சூரன் ஏதுஞ் செய்து போடுறானோ எண்ட எச்சரிக்கை உணர்ச்சி இருக்கத்தானே செய்யும். அது மாதிரி கூட்டணி அமைச்சவை பாடும் பாம்பெண்டு மிதிக்கவும் மாட்டாம பழதையெண்டு தாண்டவும்மாட்டாமக் கிடக்கு' எப்ப எவன் எங்கயேனும் பேசினாலும் கவனிக்கோணும். வாய்தவறி ஏதுஞ் சொன்னா லும் மழுப்போணும். என்னவோ சீதனத்துக்குத் தாலி கட்டினவன் குடும்பம் நடத்தின மாதிரி, விட்டிட்டும் போகேலாது. மனமொத்தும் இருக்கேலாது. என்ன செய்யிற. இப்ப இவயட ஆட்சிக்க எம்பிட்டுத் தவிக்கிற மக்கள்தான் பாவம். இவயட குடுமிப்பிடி சண்டையள் முடிச்சாத் தானே அதுகளுக்கும் ஏதும் வெளிக்க, ஆனா நான் எங்கயிருந்து சொல்லுறனெண்டுபார்.

அடியப்போல அண்ணன் தம்பி உதவ மாட்டான். ஜே.வி. பிகாரர் துவக்குத்தூக்கிக் கிழிச்சவை தானே. பின்ன அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே... நண்பனே... நண்பனே. இந்தநாள் அன்று போல் இன்பமாய் இல் லையே... ஏன்... ஏன்... எண்டு யோசிச்சுப்போட்டுத்தான் சிலபல வேலையளச் செய் யினம். அதிலயொண்டுதான் சுனாமிநிவாரணத்தக் கொள்ளையடிச்சது. பின்ன கொலையள் கொசுறுதான். இவை சரிவருவினமெண்டு நீ சொல்லுறியோ... பாப்பமே...

## திருத்தம்

29.04.2005 வெள்ளிநாத இதழில் வெளியான "1796 இல் இலங்கையின் ஆட்சி கைமாறியதன் பின்னணியில் அதிகம் பேசப்படாத சில தகவல்கள்" என்ற கட்டுரையில் தவறு ஏற்பட்டுள்ளது. கீழுள்ளவாறு அவற்றைத் திருத்தி வாசிக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

1775-1783 காலப்பகுதியில் பிரித்தானியாவிற்கு எதிராக நிகழ்ந்த 13 அமெரிக்க மாநிலங்களின் போர் 8 வருடங்கள் நீடித்திருந்தன. இது 13 வருடங்களென தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க விடுதலைப் போர் 8 வருடங்களே நீடித்தது.

1789 இல் நிகழ்ந்த பிரெஞ்சுப்புரட்சியைத் தொடர்ந்து பலம் பெற்று விளங்கிய பிரான்சின் படைகளிடம் நெதர்லாந்து தோல்விகாண வேண்டி வந்தது. இந்தக் கால ஒழுங்கும் கட்டுரையில் மாறி வந்துள்ளது.



## எதிரொலி

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி-தேசப்பற்றாளர் தேசிய இயக்கம்.
- ஏன் இப்ப நிமிந்தே நிக்குது.

வருகைதரும் அனைவருடனும் ஹக்கீம் பேசினாலும் முஸ்லிம்களுக்கு எந்த விமோசனமும் இல்லை -பேரியல் அஸ்ரப்.
"அவருக்கு இருக்குதுதானே."


பொதுக்கட்டமைப்புத் தொடர்பான அழுத்தத்தை அமெரிக்கா நிறுத்திவிடவேண்டும்-ஹெலஉறுமய
-"விறுமாண்டி"-

பொதுக்கட்டமைப்புப்பற்றி ஜே.வி.பியுடன் இணக்கப் பேச்சுவார்த்தை நடத்துகிறோம் -மகிந்தஅமரவீர
"வண்ணக் கனவுகள்"

நிவாரண உதவிவழங்க லஞ்சம் பெற்ற கிராமசேவகர் கைது-மாத்தளைச்செய்தி.
"சின்னமீன் சிக்கியது"

வரதர் அணி உறுப்பினரின் சடலத்துடன் கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்-செய்தி.
"சாத்தான்கள் வேதமோதுது"



# கால்பந்து ரசிகர்களுக்கு சோதனையா?

சர்வதேச விளையாட்டரங்கில் அடுத்து இடம்பெற இருக்கும் பெரும் போர் 2006 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் உலகக் கிண்ண கால்பந்துத் தொடராகும். இதில் பெல்ஜியம் கிண்ணத தைக் கைப்பற்றும் நிலையிலிருக்கிறது. காரணம் நடந்து முடிந்த தகுதிப் போட்டிகளில் கிடைத்துள்ள பெறுபேறாகும்.

எனினும் நிச்சயமாக எந்த நாடு கிண்ணத்தைக் கைப்பற்றும் என இறுதிப் போட்டியின் இறுதி செக்கன் வரை கூறமுடியாது. கடந்த முறை நடைபெற்ற உலகக் கிண்ணத்தை பிரேசில் தட்டிச்சென்றது. என்றாலும் பிரான்ஸ், ஜேர்மன், இங்கிலாந்து, ஆர்ஜென்டினா என்பனவும் முன்னணியில் இருக்கின்றன.

எவ்வாறேனும் 2006 உலகக்கிண்ணப் போட்டிகளின் பின்னர் ஒருசில முக்கிய நட்சத்திரங்கள் ஓய்வுபெற இருப்பது பற்றிய கசப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆயினும் அது யார் என்பது புரியாத புதிராகவே உள்ளது. உலகக் கிண்ண போட்டிகளின் பின்னர் வீரர்கள் ஓய்வை அறிவிப்பது வழமையான விடயமாகவுள்ளது.

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத்தின் பின்னர் பேலே ஓய்வில் சென்ற அதேவேளை 1994 ஆம் ஆண்டு மரடோனா பிரச்சினைகளுக்குள்ளாகி ஓய்வுபெற்றார்.

2006 ஆம் ஆண்டின் பின்னர் பெரும்பாலும் பிரான்சின் சினடின் சிடென் ஓய்வை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. றியல்மெட்ரிட் அணிக்காக அவர் விளையாடும் அதே வேளை 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வரையே அவர் ஒப்பந்தம் செய்துள்ளார். அவர் தனது கால்களுக்கு ஓய்வு தேவை என தெரிவித்துள்ளார்.

1988 ஆம் ஆண்டு களம் புகுந்த அவர் கெய்ன்ஸ் கழகத்துக்காக ஆடி 139 லீக் போட்டிகளில் 28 கோல்களை அடித்துள்ளார்.

அவர் 1994ஆம் ஆண்டிலேயே சர்வதேசப் போட்டிகளில் கா்லடி வைத்தார். செக்குடியரசுக் கெதிராக ஆடி 17 நிமிடங்களில் இருகோல்களை அவர் அடித்தார். அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய சம்பியனாகவும் உலகச் சம்பியனாகவும் முன்னேறினார்.

சிடென் உலகக் கால்பந்தாட்டப் பிரியர்களிடம் செல்வாக்கைப் பெற்றது போல ரசிகர்களால் விரும்பப்படும் மற்றொரு வீரர் பிரேசில் நாட்டின் றொனல்டோ ஆவார். இவர் 1998 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் பின்னர் காலில் உபாதை ஏற்பட்டது. எனினும் அதிலிருந்து குணமடைந்து தற்போது போட்டிகளில் பங்கேற்றுவருகிறார்.

இவரும் 2006 ஆம் ஆண்டின் பின் ஓய்வில் செல்வாரா என்பது பற்றி குறிப்பிட வில்லையாயினும் இவரும் ஓய்வில் செல்வார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. காரணம் அவர் அண்மையில் மறுமண பந்தத்தில் இணைந்துள் ளதாகும்.

றியல் மெட்ரிட் அணிக்காக ஆடும் இவ்விரு வீரர்களும் ஓய்வில் செல்லலாம் என்ற வகையில் அடுத்தபடியாக டேவிட் பெக்காமும் ஓய்வு பற்றி சைகை காட்டியுள்ளார்.

அவர் பப்பரஸ் இனத்தவர்களால் தமது பிள்ளைகளுக்கு பிரச்சினைகள் தோன்றியிருப்பதாகவும் அதனால் குடும்பத்துடன் தாய் நாடான இங்கிலாந்து செல்லவுள்ள தாகவும் தெரிவித்துள்ளார். இவர் 2003 ஆம் ஆண்டு மஞ்செஸ்ர் அணியிலிருந்து றியல்மெட்ரிட் அணிக்கு வந்தார். இவரை மெட்ரிட் கழகம் 25 மில்லியன் ஸ்ரேலிங் பவுணுக்கு ஒப் பந்தம் செய்தது. இவர் பற்றி இங்கிலாந்து தனது ஆனல்ட் கழகத்தில் இணைப்பதற்கும் முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



முன்னதாக ஆர்ஜன்டீனா அணியின் கப்ரியேல் பெட்டிஸ்ருவா ஓய்வில் சென்றார். இவர் 78 சர்வதேசப்போட்டிகளில் பங்கேற்று 56 கோல்களை அடித்துள்ளார்.

எனவே இவ்வாறான நட்சத்திர வீரர்கள் ஓய்வில் சென்றால் உலகில் கால்பந்தாட்டம் இருண்டு விடுமோ என சிந்திக்கத் தோன்றுகிறது.

**சம்பத்**



# கங்குலி சிறந்த கப்டன்

**-அருஜுூன ரணதுங்க**

சவுரவ் கங்குலி மிகவும் சிறந்த கப்டன் என்று இலங்கை அணிமுன்னாள் கப்டன் ரணதுங்க கூறியுள்ளார். அருஜுூன ரணதுங்கா டுபாய் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்,

சிறந்த வீரரான கங்குலி தடை காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் மிகுந்த மன நம்பிக்கை கொண்ட கப்டன். நான் விளையாடிய காலத்தில் எனக்கு எதிராக ஆடிப் பார்த்தவர்களில் கங்குலி இந்தியாவின் சிறந்த கப்டன்களில் ஒருவராவார்.

1996ஆம் ஆண்டில் உலகக்கோப்பையை வென்ற இலங்கை அணியோடு, தற்போதைய இந்திய அணியை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை மிகவும் வலுவானதாக உள்ளது. கங்குலி டெண்டுல்கர், ஷேவாக், ராவிட், முகமது கைப், யுவராஜ்சிங் ஆகியோர் அடங்கிய இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை அடுத்த உலகக் கோப்பை (2007) வரை நீடித்தால் இந்தியா உலகக் கோப்பையை வெல்லும் என்பதில் ஆச்சரியமில்லை.

கடந்த சில மாதங்களாக கங்குலி ஓட்டங்கள் பெறவில்லை. ஆனால் அதற்கு முன்பு அவர் நல்ல 'ரன்ரேட்' எடுத்து இருக்கிறார். இதுபோன்ற மோசமான ஆட்டநிலை எல்லா வீரர்களுக்கும் ஏற்படக்கூடிய ஒன்றுதான். இந்த நேரத்தில் இந்திய அணியும், கிரிக்கெட் போர்ட்டும் மக்களும் அவருக்கு ஆதரவு அளிக்கவேண்டும். கங்குலி மீண்டும் சிறந்த நிலைக்குத்திரும்புவார்.

*மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சமீபகால தோல்விகளுக்கு கப்டன் லாராவின் மோசமான தலைமையே முக்கிய காரணமாகும் என்று முன்னாள் விக்கெட் கீப்பர் ரிட்லே ஜேக்கப்ஸ் தெரிவித்துள்ளார். சமீபத்தில் ஓய்வுபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர், துடுப்பாட்ட வீரரான ரிட்லே ஜேக்கப்ஸ் அன்டிகுவாவிலிருந்து வெளிவரும் 'சென்ட்சியல' என்ற மாதமிருமுறை பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.*

*ஜேக்கப்ஸ் இதுவரை 65 டெஸ்ட் மற்றும் 147 ஒருநாள் போட்டிகளில் பங்குகொண்டிருக்கிறார். இவற்றில் பெரும்பாலானவை லாராவின் தலைமையின் கீழ் பங்கேற்றவையாகும்.*

*ஜேக்கப்ஸ் டெஸ்டில் மொத்தம் 2,577 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார். இதன் சராசரி 28.31 தவிர கீப்பிங் மூலம் 219 பேரை ஸ்டம்பிங்செய்து ஆட்டமிழக்க வைக்கிறார்.*

*ஒருநாள் போட்டிகளை பொறுத்தவரை, 1,865 ஓட்டங்களை எடுத்திருக்கிறார். இதன் சராசரி 23.31 ஒருநாள் போட்டிகளில் ஸ்டம்பிங்மூலம் 189பேரை ஆட்டமிழக்கவைத்திருக்கிறார்.*



# லாராவின் மீது பாயும் ஜேக்கப்ஸ்ரிட்லே

*சமீபகாலங்களில் மேறகிந்தியத் தீவுகள் தோல்விகளுக்கு கப்டன் லாராவின் மோசமான தலைமையே முக்கிய காரணமாகும் என்று ஜேக்கப்ஸ் தெரிவித்தார்.*

*மேற்கிந்தியத்தீவு அணியின் முக்கிய பிரச்சினையே கப்டன் தான் என்று முன்னாள் விக்கெட் கீப்பரும் துடுப்பாட்ட வீரருமான ரிட்லே ஜேக்கப்ஸ் குறிப்பிட்டார்.*

*கப்டன் என்பவர் தனது சிறந்த நடவடிக்கைகளால் மற்றவர்களுக்கு முன்னு தாரணமாக இருக்கவேண்டும். சரியாகச் செயல்படாவிட்டால் சிறந்த கப்டனாக இருக்கமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.*

*"கப்டனின் நடவடிக்கைகளைப் பார்த்து மற்ற வீரர்கள் நன்றாக செயல்பட வேண்டும்" தங்களின் சிறப்பான ஆட்டத்திறனை அவர்கள் வெளிப்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.*

*"ஒரு கப்டன் சுயநலம்மிக்கவராகச் செயற்படக்கூடாது. தனது சாதனைகளும், சுயவிளம்பரமுமே முக்கியம் என்ற ரீதியில் செயல் படக்கூடாது. இதுபோன்ற கப்டன்களால் மற்றவீரர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் வராது. வெறுப்பே உண்டாகும்" என்றும் அவர் தெரிவித்தார்.*

*மேலும் ஒரு அணி சர்வதேச அளவில் வெற்றிபெற வேண்டுமென்றால் அந்த அணி வீரர்களிடம் ஒற்றுமை மிக அவசியம் என்று 37 வயதான ஜேக்கப்ஸ் குறிப்பிட்டார்.அவுஸ்திரேலிய அணி சர்வதேச அளவில் வெற்றிவாகை சூடிவருவதற்கு, அந்த அணி வீரர்களுக்கு ஒற்றுமையும், சிறந்த தலைமைத்துவமுமே காரணமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். "மேற்கிந்தியத்தீவுகள் அணியில் ஆர்வம் மிக்க வீரர்கள் பலர் இருக்கின்றனர். எனவே பலம் மிக்க அணியும் புதிய தலைவரும் புதிய கப்டனும் அணிக்குத் தேவை" என்று அவர் குறிப்பிட்டார்.*

# தரவரிசையில் முன்னேறுவேன்

## -ஹொனேருஹம்பி

ஹங்கேரியில் நடை பெறவுள்ள சர்வதேச சதுரங்கப் போட்டிகளின் மூலம் எனது தரவரிசையை முன்னேற்றுவேன் என்று கிராண்ட் மாஸ்டர் கொனேரு ஹம்பி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஹங்கேரியில் உள்ள பிடாபஸ்ட் நகரில் இரண்டு சர்வதேச சதுரங்கப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

மொத்தம் 9 நாடுகளைச் சேர்ந்த 12 வீரர்கள் பங்கேற்கும் இப்போட்டி ரவுண்ராபின் முறையில் நடைபெறவுள்ளது.

இதில் இந்தியாவில் முதன்முதலாக மகளிர் பிரிவில் கிராண்ட் மாஸ்ரர் அந்தஸ்தைப் பெற்றுள்ள கொனேரு ஹம்பி, 3ஆம் நிலை வீராங்கனையாக கணிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த இரண்டு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்பதன் மூலம் தரவரிசைப் பட்டியலில் தனது நிலையை முன்னேற்ற முடியும் என்று கோனேருஹம்பி நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னணி கிராண்ட் மாஸ்டர்களான ரஷ்யாவின் கென்ஸ்டன்டின் செர்னிஷோவ் (2531 புள்ளிகள்) வியட்நாமின் நிருயென் நாக்டிங்சன் (2527) ஆகியோருடன் ஹம்பியும் பங்கேற்கிறார் என்று அவரது தந்தையாரான அசோக் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார். வரும் 21ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை இதே நகரில் நடைபெறவுள்ள எலீக்ஸ் நினைவு கிராண்ட் மாஸ்டர் போட்டியிலும் ஹம்பி விளையாடவிருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தந்தையார் அசோக்கின் பயிற்சியின் கீழ் உருவான ஹம்பியின் சகோதரியான கொனேரு சந்திரஹாங்காவும் இந்த இரண்டு போட்டிகளிலும் பங்கேற்கவிருக்கிறார்.



கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தென்னைச் செய்கையில் பெயர்பெற்றவை. எனினும் தென்னைசார் உற்பத்தி முயற்சிகள் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப் படவில்லை. கடந்த சில வருடங்களாக 'மைற்' எனப்படும் நோய் தென்னையைத் தாக்கி வருவதனால் தேங்காய் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் தற்போது சுனாமியாலும் தென்னைச் செய்கைக்கு பாதிப்பு உண்டாகியுள்ளது.

பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

இவ்வாறான சூழ்நிலையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தென்னை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் இம்மாவட்டங்களில் தென்னைச்செய்கையை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமியால் அழிவுற்ற தென்னைகளுக்குப் பதிலாக மீள் நடுகைக்கான தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டதுடன் வேண்டிய கருத்துரைகளும் அளிக்கப்பட்டன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்பாடு பின்வருமாறு விரிவுபெறுகின்றது.

★நான்கு ஏக்கர் கொண்ட நல்லினநாற்று மாதிரிப்பண்ணை ஒன்றை முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைத்தல்.

★நல்லின நாற்றுக்களை பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு தென்னை அபிவிருத்திச்சபை தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

★அளம்பில், கிளிநொச்சி,பளை போன்ற பிரதேசங்களில் நாற்று மேடைகளை உருவாக்கல்.

★தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை வன்னியில் நிறுவுதல்.

★தென்னை மரங்களுக்குத் தேவையான உரவகைகளை வன்னியில் களஞ்சியப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

★இதுவரை காலமும் தென்பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட விதை தேங்காய்களுக்கு பதிலாக தேவைப்படும் விதை தேங்காய்களை இங்கேயே தெரிவின் மூலம் பெறுதல்.

என்பனவே செயற்படுத்தப்படவுள்ள திட்டங்களாகும். இவை உரிய முறையில் செயற்படுத்தப்படுமானால் தென்னைச் செய்கையில் மேம்பாடு ஏற்படும். தென்னைச் செய்கையாளர்களும் இத்தகைய திட்டங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். இதுவே உரிய பலனைத்தரும்.

# அன்னாசிச் செய்கை

அன்னாசி பயிரிட விரும்பும் விவசாயிகள் தெரிவு செய்ய வேண்டிய இனம் "கியூ" (Kew) என்ற இனமாகும். அன்னாசித் தாவரத்தின் இயற் பெயர் அனாஸ் கோமோசல் ஆகும். இத்தாவரம் புரோசி மினியேசி இன குடும்பத்தைச் சேர்ந்தது. இது வாழை போன்று ஒரு வித்திலைத் தாவரமாகும். இதன் பிறப்பிடம் அமெரிக்காவிலுள்ள பிறேசில் என்ற இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு உலகில் பல இடங்களுக்கும் பரப்பப்பட்டது.

இப்பயிரை நடுவதற்கு மணல் கலந்த இருவாட்டி மண்ணே மிகவும் பொருத்தமானது. களி அல்லது சுண்ணாம்பு கலந்த மண் சாத்தியமற்றதாகும். கார அமில நிலை பி.எச் பெறுமானம் 5.5-6 ஆகவுள்ள மண் வகை மிகவும் சிறந்தது.

கியூ என்ற இனத்தின் பழங்கள் பெரியவை. உறிஞ்சி முனைகள் உண்டாவது குறைவு. பழங்கள் பீப்பா வடிவம் உடையவை கண்கள் பெரியவை. இலைகள் செந்நிறம். பழத்தின் தசைகள் வெண் மஞ்சள் நிறமாக இருக்கும். அடுத்தது "மொருசி இனம்" இது பழமாக உண்பதற்கு சிறந்தது. இதன் இலைகளில் முட்கள் இருக்கும். செடிகள் மத்திய அளவு பருமன் உடையது.அதிக உறிஞ்சிகளை உருவாக்கும் பழங்கள் கூம்பல் வடிவமாக இருக்கும். ஆழமான கண்கள் வெளியே துருத்தி போன்ற உருவ அமைப்பு இருக்கும். பழத்தின் தசை பொன்மஞ்சள் நிறமாக இருக்கும்.

அன்னாசியின் பயிர்ச் செய்கை முறையினை நோக்கும்போது இதன் இனப்பெருக்கம் ஏனைய பழமரங்கள் போலல்லாது முற்றிலும் வேறுபாடுடையது. இத்தாவரத்தின் வெவ்வேறு பகுதிகள் இனப்பெருக்கத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது. அன்னாசியின் வேரில் இருந்து வெளி வரும் வேர் உறிஞ்சிகள் இவை 12-14 மாதங்களில் பயன் தரும். அடுத்து கக்க உறிஞ்சிகள் இவை தாவரத்தின் இடைத்தண்டுப் பகுதியில் வெளி வரும். இவை 16-18 மாதங்களில் பயன்தரக்கூடியன.

அடுத்து தண்டு உறிஞ்சிகள் இவை பழத்தின் கீழ்ப் பகுதிகளில் அதாவது தாவரத்தின் மேற்தண்டுப் பகுதியில் வெளிவரும் சுமார் 20-22 மாதங்களிடையே பயன் தரும். அடுத்தவை கனியின் மீதுள்ள முடிகள் இது பழத்தின் மேல் காணப்படும். இவை 24 மாதங்களுக்கு மேலேயே பயன்தரக்கூடியன. இவற்றிலே கக்க உறிஞ்சிகளே நடுகைக்காக அதிகம் பயன்படுத்தப் படுகிறது. கனியின் மூடிகளை நான்காக நீளப்பாட்டிற்குப் பிரித்து பதிய வைத்து 5-6 மாதங்களிற்குப் பின்னர் நடுகை செய்யலாம்.

உறிஞ்சிகளை இரண்டு முறைகளில் நாட்டலாம். ஒன்று தனி வரிசை முறை. மற்றையது இரு வரிசை முறை. ஒரு ஏக்கரில் 21000 உறிஞ்சிகள் வரை நடுகை செய்யலாம். நாற்றுக்களை நடுகை செய்ய முன் தொற்று நீக்கம் செய்ய வேண்டும். நடுகை செய்யப்படும் நாற்றுக்களை தொற்று நீக்கம் செய்வது முக்கியம். வேர் விடுதலைத் துரிதப் படுத்த உறிஞ்சிகளில் காணப்படும் செதில் இலைகள் அகற்றப்பட வேண்டும்.

நடுகை செய்யும் போது 20 ச.மீ கான்களில் நடப்பட வேண்டும். உறிஞ்சிகளை கான்களில் நாட்டி நேராக இருக்கத்தக்கதாய் கான்களின் மேல் பக்கத்தில் 10 ச.மீ ஆழத்தில் மண்ணைத் தோண்டி நட வேண்டும். மண்ணின் ஈரப்பதன் பெறும் பொருட்டு பொதுவாகப்பருவ காலங்களில் நடுவது சிறந்தது. அழுகலைத் தடுப்பதற்கு பெரும் மழை காலங்களில் நடுவதைத் தவிர்க்க வேண்டும்.

பசளைப் பிரயோகம் 11:7:01 என்ற அளவில் கலந்து நிலையமொன்றிற்கு 30 கிராம் வீதம் நாட்டி ஒரு மாதத்தின் பின் இட வேண்டும். அமோனியம் சல்பேற், சுப்பர்பொஸ்பேற், பொட்டாஸ் என்ற அளவுகளில் கலக்கும் போது மேற் கூறிய கலவையில் பெற முடியும்.

**நோய் பீடை பாதுகாப்பு:-**

வாடல் நோய் இது பொதுவான நோய். வர்ணமூட்டுப் பூச்சிகளால் பயிர்களுக்கும் செலுத்தப்படும். திரவம் உட்செல்ல இலைகள் நுனியில் இருந்து கருகி ஊதா கலந்த கபில நிறமாக மாறிப் பின்னர் மஞ்சளாக மாறி இறுதியில் கருகி அழிகின்றன. இரசாயனக் கலவை மூலம் கட்டுப்படுத்தலாம். அத்தோடு நோய் ஏற்பட்ட பயிரைப் பிடுங்கி எறிவதன் மூலம் கட்டுப்படுத்தலாம். எறும்புகளால் ஏற்படும் வெண் மூட்டுப் பூச்சிகள் இருக்கும் இடங்களில் வெண்தூள் போன்று படர்ந்து இருக்கும் பங்கசு நாசினிகளைப் பயன்படுத்தி எறும்புகளையும் மூட்டுப் பூச்சிகளையும் இல்லாமல் செய்யலாம்.

**அறுவடை:-**

பழங்கள் இளம் பச்சை, மஞ்சள் பருவத்தினை அடையும் போது பழங்களில் மேற்பரப்பில் உள்ள இலைகள் உலரத் தொடங்கும். இந்நிலையில் அறுவடை செய்யலாம். அறுவடைக்குப் பின்னரும் இதன் உறிஞ்சிகள் நீண்ட காலத்திற்குப் பயன் தரும் என்பது குறிப்பிடத்தக்கது.

**எஸ்.கே**

# பிளாஸ்ரிக் பெற்றோல்

நவீன காலங்களில் மிகவும் தொல்லை தருகின்ற சூழல் மாசுபடுத்தியான உயிரியல் ரீதியாக சிதைக்கமுடியாத (Non-Biodegradable) பிளாஸ்ரிக் இருக்கிறது.

இத்தொல்லையை ஆக்கபூர்வமான முறையில் தீர்ப்பதற்கு ஒருவழியை சென்னை வேலம்மாள் கல்லூரி பொறியியல் மாணவர்களான சிறீதர்ஜய்கர்சத்தீஸ், V.லக்ஸ்மணன், குருபிரசாத் ஆகியோர் இணைந்து கண்டுபிடித்துச் சாதனை படைத்திருக்கிறார்கள்.

பிளாஸ்ரிக்கைச் சூடாக்கும் பொழுது அது உருகி ஒரு திணிவாக ஆகிவிடுவதை தடுத்து அதற்குப் பதிலாக, இரகசிய ஊக்கி ஒன்றின் பயன்பாட்டின் மூலம், பெற்றோல், மண்ணெண்ணை மற்றும் டீசலை பெறக் கூடிய செய்முறை ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள் இந்த தமிழ்நாட்டு மாணவர்கள்.

*செய்முறை*

பிரதானமாகக் கைவிடப்பட்ட பைகள் மற்றும் உயிரியல் - மருத்துவக் கழிவுப்பொருட்கள் முதலியவற்றைக் கொண்ட கழிவுப் பொலித்தீன் மற்றும் பொலிப்றொப்பலீன் (Polythene/Polypropyolene) ஆகியவற்றை ஊக்கி வழி பிரித்தலுக்கு (Catalytic Cracking) உட்படுத்தப்படுகிறது. அல்லது காபன் சங்கிலி உடைக்கப்படுகிறது.

அதிக உற்பத்தியை பெறுவதற்கு சரியான விகிதத்தில் ஊக்கியும் பிளாஸ்ரிக் பொருட்களும் தாக்கமுறும் குடுவையில் இடப்பட வேண்டும்.

இந்தக் குடுவை $400^0$ செல்ஸியஸ் இற்கு சூடாக்கப்பட்டதும் அதில் இடப்பட்ட பிளாஸ்ரிக்குகள் காய்ச்சி வடிக்கக்கூடிய மசகுக் கலவையை (Distillate crude) இதனை பகுதி மீள் காய்ச்சி வடிப்புக்கு (Fractional Re-Distillation) உட்படுத்தினால் $100\text{-}120^0c$ இல் ஒருவகை பெற்றோலையும் $150\text{-}180^0c$இல் மண்ணெண்ணையும் இறுதியாக இந்த செய்முறையானது எச்சமாக டீசலையும் தருகிறது.

இரண்டு மணி நேரத்தில் இந்த மாணவர்களால் 2.5kg பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து 2லீற்றர் மசகை உற்பத்திசெய்ய முடிந்தது. இதனை மீளக் காய்ச்சி வடித்தபொழுது, ஒருலீற்றர் பெற்றோல், அரை லீற்றர் மண்ணெண்ணை, 1/2 லீற்றர் டீசல் ஆகியவை பெறப்பட்டன. இதற்கான செலவு பெற்றோலுக்கு 22 (இந்திய) ரூபாய்களாகவும் டீசலுக்கும் மண்ணெண்ணைக்கும் தலா 26ரூபாய்களாகவும் இருந்தன.

ஒட்சிசன் இல்லா நிலையில் பிளாஸ்ரிக்கைச் சூடாக்குவதன் மூலம் நச்சியல்பான டையொக்ஸின் (Toxic Dioxin) வெளிப்பாடுகளும் தவிர்க்கப்படும் என்றும் இது, இந்த எரிபொருளை சூழல்-நட்பானதாக ஆக்கிவிடுவதாகவும் சிறீதர் என்ற மாணவர் தெரிவித்தார்.

மீத மிருக்கும் பரவின் திணிவும் (ஆண்.500கிராம்) மெழுகுதிரி செய்யப்பயன்படும்.

*சான்றிதழ் வழங்கல்*

இந்த அணியினரால் உற்பத்தி செய்யப்பட்ட எரிபொருளுக்கு இந்திய கூட்டுத்தாபனத்தின் கொறுக்குப் பேட்டை பிராந்திய ஆய்வுகூடம் சான்றிதழ் வழங்கியுள்ளது. வழமையான பெற்றோலுடன் ஒப்பிடும் பொழுது பிளாஸ்ரிக்கிலிருந்து பெறப்பட்ட இந்த பெற்றோல் சிறிது அதிக ஒக்ரேன் பெறுமதியைக் (Octanevalue-எரிதிறன் அலகு) கொண்டுள்ளது. மாசுப்பொருள் வெளியீடும் நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளுக்குள் உள்ளது. 20 வருட பழமையான தன் ஸ்கூட்டரில் ஒரு லீற்றருக்கு 40 கி.மீ பயணம் செய்யக்கூடியதாக இருக்கிறது என சிறீதர் தெரிவித்தார்.

இந்த செய்முறைக்கான உரிமத்தை இந்த மாணவர்கள் ஏற்கனவே பெற்றுள்ளதோடு, இவர்களது உற்பத்திகளின் தரப் பரிசோதனை செய்து தர இந்திய தொழில்நுட்ப நிலையம் ஒப்புக் கொண்டிருக்கிறது.

இந்தச் மாணவர்கள் தங்கள் முயற்சியில் கல்லூரி முதல்வர் C.இரத்தினசபாபதி மற்றும் பேராசிரியர்களான D.சிவராஜ் மற்றும் K.R.செந்தில்குமார் ஆகியோரால் நெறிப்படுத்தப்பட்டனர்.

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இசைத் துறை மாணவனான விஜயகுல சிங்கம் அல்லி பாத்திரமுணர்ந்து பாத்திரமாக நடித்தமையானது வளர்ந்து வரும் இளம் கலைஞர் என்பதை பொய்ப்பிக்கவில்லை.

சுபத்திரையாக வந்த இளைஞன் பாத்திரமாக ஒன்றித்து அருச்சுனனுடன் மிக நெருக்கமாகக் கதைக் காட்சிக்கமைவாக ஊடல் கொண்டமை சிறப்பாக அமைந்தது. இருந்த போதிலும் பெண்களிற்கான நளினம் அங்க அசைவுகளை பின்பற்றி தோத்துப் போனார் என்பது வெளிப்படையான உண்மை.

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியரான விமலநாதன் அருச்சுணனாக மிகச் சிறப்பாகத் தனது பங்களிப்பை வழங்கினார். அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடாக சில காட்சிகளில் (பாடல்) உணர்ச்சி வசப்படுவதனை பார்வையாளர்களும் அவதானிக்கத் தவறவில்லை. ஆனால் நகைச் சுவைப் பாணியிலான உரையாடலும் தனது செய்கைகளை வெளிப்படுத்துவதுமான வசன நடைகளும் பார்வையாளர்களினால் பாராட்டப் பட்டதனை அவதானிக்க முடிந்தது. தனது தேவைகளிற்கு மட்டும் மைத்துனரான கண்ணனை உபயோகித்து காரியம் சாதிக் கின்றமையும் குறிப்பிடப்பட வேண்டியது.

மகாஜனாக் கல்லூரி ஆசிரியரான விஜயபாஸ்கர் கண்ணன் பாத்திரமேற்றார். அரங்கை அதிர வைத்த பாடல்களும், தெளிவான வசன உச்சரிப்புகளும் தேர்ச்சியான ஒரு கலைஞரை இனம் காண வைத்தது. அன்னம் விக்கும் வேடுவனாக வரும் செல்லையா-மெற்றாஸ் மயில் பவளக் கொடிக்கு அன்னத்தை வித்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் அன்னத்தின் சிறப்புகளை சிறிய ஆட்டத்துடன் வெளிப்படுத்தி தனது பங்களிப்பையும் செய்துள்ளார். ஆர்மோணியத்தால் அரங்கை ஆட்சி செய்த ஜோண்கவாஸ், சதா வேல் மாறன் தபேலா, மிருதங்கம், கலாமணியின் தாளம் ஆகியவை ஆர்வலர்களை சிதற விடாது பவளக் கொடியுடன் இரண்டறக் கலந்தமையானது இந் நாடகத்திற்கு வலுவான பங்களிப்பாகவுள்ளதனை அவதானிக்க முடிந்தது. ஒப்பனையும் பாத்திரத் தெரிவும் சற்றும் சோடை போகவில்லை என்பது சுபத்திரை, கண்ணன் ஆகிய இருவரையும் வைத்தே கூற முடியும். அந்தளவிற்கு மிகச் சிறப்பாக அமைந்தது.


சிறிய இடைவேளைக்கு பின்னர் முழுமையான அதே நேரம் மன நிறைவான இசை நாடகத்தை பார்க்க முடிந்தமை யதார்த்தமான உண்மையாகும். பத்து நாட்களில் புங்குடுதீவு, கைலாசபதி கலையரங்கு, நயினாதீவு ஆகிய இடங்களில் அரங்கேறியுள்ளது பவளக்கொடி. இவையே பவளக் கொடியின் சிறப்பிற்குக் கட்டியம் கூறுபவையாகவுள்ளன.

காலத்திற்கேற்ற கட்டாயமான ஒரு நிகழ்வை ஒழுங்கமைத்து செயற்படுத்திய ஒவ்வொருவரும் தனித்தனியாக பாராட்டப்பட வேண்டியவர்கள். இடைவெளிகளைக் குறைத்து இவ்வாறான பாரம்பரிய படைப்புக்களைத் தொடர்ச்சியாக ஆற்றுகை செய்ய வேண்டுமென்பது இத்துறை சார்பானவர்களது பெருவிருப்பாகவுள்ளது. பவளக் கொடி இசை நாடகம் இக் கலைஞர்களது உழைப்பில் பார்க்க வேண்டிய ஒரு நாடகம்.

# எல்லோரும் முழுமூச்சாய்... நாட்டைக் கட்டியெழுப்புவம்

உலா 32

வணக்கம் வணக்கம் பிள்ளையள்! போனகிழமை உங்களை இடையில விட்டிட்டு போட்டன். தெரியும்தானே, பசி வந்தால் பத்தும் பறந்திடும் எண்டு சொல்லுவினம். அப்பிடித்தான் நானும் அப்போதைக்குக் கழண்டிட்டன். ஆனால் இலங்கை அரசியலோடை பார்த்தால் உதெல்லாம் சின்ன விசயம் பாருங்கோ! வெளிநாடுகள் குடுத்த சுனாமி நிவாரண நிதியை பாதிக்கப்பட்ட சனங்களுக்குப் பிரிச்சுக்குடுக்கிறதுக்கான பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டால், தமிழ்த்தரப்பு சரிக்குச்சமமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டால், 'இந்தாபார் கூட்டணியில இருந்து பாயிறன்' எண்டு ஜே.வி.பி சத்தம் போட்டுக்கொண்டிருக்கு. நோணாவும் அந்தக் காசை எடுத்துப் போடிறதுக்காக கொஞ்சம் அடக்கி வாசிக்கிறா. இல்லைக் கேட்கிறன்: பொதுக்கட்டமைப்புக்கும், புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் எதிராய் ஒவ்வொருநாளும் தவறாமல் சிங்களப் பக்கங்களில ஆர்ப்பாட்டங்கள் நடக்கிது. ஏன் ஒருக்கால் சந்திரிகா முன்னின்று, ஒப்பந்தத்துக்கு ஆதரவாய் ஒரு ஊர்வலம் வைக்கட்டும் பார்ப்பம். அது நடவாது பாருங்கோ, ஏனெண்டால் வெளிநாடுகளுக்குக் கேட்காமல் உள்ளூரில இனவாதம் பேசிறதுதான் அவாவின்ர தந்திரம். ஏதோ இனப் பிரச்சினையை தீர்க்க வெளிக்கிட்டு இழுபட்டதால, தற்காலிகமாய் எண்டாலும் அன்றாடப்பிரச்சினையை உடனடியாய் தீர்ப்பம் எண்டு எங்கட தரப்பு சொல்ல, அதுக்கும் சிங்களம் ஒத்துக் கொள்ளேல்லை. ஐயோ ! தாங்கள் ஒத்துக்கொள்ளேல்லை எண்டதைக் கூட அவையள் ஒத்துக்கொள்ளேல்லை. இப்பை என்னடாவெண்டால் டிசம்பர் 26 இற்குப் பிற்பட்ட நிலைமையை சேர்ந்து கையாளவே சிங்களத்தரப்பு தயாரில்லையெண்டால் என்ன கணக்கு உது ? ஏதோ முட்டுப்படு மட்டும் நாங்கள் எல்லா வகையிலையும் எங்களைத் தயார்செய்துகொண்டிருப்பம். (நானும் அதுக்கு முன்னாடி உங்கால வந்து சேர்ந்திடவேணும் !)




சரி சரி நாங்கள் பிரான்சுக்கு வருவம். மிச்சம் பெரியநாடு தானே ! அதுதான் போனகிழமையே எல்லாத்தையும் சொல்லி முடிக்கேலாமல் போய்ட்டிது. அதுக்குள்ளை இன்னும் நல்லாய் சுத்தியடிச்சு மேலதிகமாய் விசயங்களை அறிஞ்சு கொள்ள முடிஞ்சிது. எனக்கு மட்டும் உங்களை மாதிரி உடம்புக்கு இயலுமான இளம்வயசாய் இருக்கோணும், இன்னும் எக்கச்சக்கமாய் திரிஞ்சு விசயங்கள் தந்திருப்பன். மேற்கு-ஐரோப்பாவிலேயே விவசாயத்தில அதிகமாய் ஈடுபடிற நாடும் இதுதான். ஐரோப்பிய யூனியன் விவசாயிகளைப் பாதிக்கிற சட்டம் ஏதாவது கொண்டுவர வெளிக்கிட்டால், பிரெஞ்சு விவசாயிகள் கதைச்சும் பார்த்து சரிவரேல்லை எண்டு சொன்னால் தங்கட ட்றக்ரர், அதுஇதெண்டு எல்லா வாகனங்களையும் நெடுஞ்சாலை வழியில குறுக்காய்விட்டு நாள் கணக்காய் ஆர்ப்பாட்டம் செய்வினம். அதால ஏற்படுகிற பொருளாதார முடக்கத்துக்குப் பயந்து அரசாங்கங்கள் அடங்கிடும். மற்றது சொல்ல மறந்திட்டன், பிரெஞ்சு மொழி பேசும் மக்கள் பெல்ஜியத்திலையும் இருக்கினம். உலகத்திலையே அதிகம் முட்டுப்பட்ட நாடுகளெண்டால் பிரான்சும், இங்கிலாந்துமாய் தானிருக்கும். பிரான்சின்ரை பெரும்பகுதி 2ஆம் உலக யுத்தத்திலை யேர்மன் படையளாலை ஆக்கிரமிக்கப்பட்டிருந்திச்சிது. பேந்து நீங்கள் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கக்கூடிய 'நோமண்டித்தரையிறக்கம்' நேசநாட்டுப்படையளால மேற்கொள்ளப்பட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிச்சிது. பிரான்சும் என்ன லேசுப்பட்ட நாடே!

வடஆபிரிக்கா உட்பட கன நாடுகளை பிடிச்சு தங்கட காலனித்துவ ஆட்சிக்கிள்ளை வைச்சிருந்த நாடெல்லே அது. அதாலதான் ஆங்கிலத்துக்கு அடுத்ததாய் (நாடு கூடப் பிடிச்ச நாடுகள்) பிரெஞ்சு மொழியும், அதற்கடுத்ததாய் ஸ்பானிஸ் மொழியும் இருக்கிது. ம் . . என்னத்தைச் சொல்லி . . எங்கட சோழரும் கிழக்காசியாவில எத்தினை இடத்தைப் பிடிச்சவை. பெரிசாய் படைநகர்த்திக் கொண்டுபோய் வீரவேல், வெற்றிவேல் எண்டுகொண்டு போய் ஆயிரம்,ஆயிரமாய் ஆக்களையும் இரண்டு தரப்பிலையும் இழந்து நாடுகளைப் பிடிச்சுப்போட்டு, மாதாமாதம் 2 யானை திறை தந்து தங்கட மேலாண்மையை ஏற்றுக் கொள்ளச்சொல்லி சம்மதிக்க வைச்சுப்போட்டு வந்ததெல்லே மிச்சம்! தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், இந்தோனேசியா எல்லாம் எங்கடயெண்டு கட்டியெழுப்பினது ஆக உயரஉயரக் கோயில்களை மட்டும் தான். பிரெஞ்சு மொழி இண்டைக்கு வடஆபிரிக்கா மட்டுமல்லாமல் கன[illegible]களிலை பேசப்பட்டு வருகிது.

யுத்தத்தால நலிவடைஞ்சு போயிருந்த பிரான்ஸ் 1946 இலதான் 'மார்ஷல் பிளான்'எண்ட திட்டத்தின் கீழ் கிடைச்ச கடனை அடிப்படையாய் வைச்சு முன்னேறினது. 1957ஆம் ஆண்டில இது மேற்கு-யேர்மனி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க், இத்தாலி ஆகிய நாடுகளோடை சேர்ந்து செய்து கொண்ட 'ஐரோப்பிய பொருளாதார சமூகம்' எண்ட ஒரு கூட்டுத்தான் இண்டைக்கு நுரு எண்ட ஐரோப்பிய யூனியனாய் உருவாகியிருக்கிது. இன்னுமொரு விசயம் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளிறதுக்காக 1970 களில மூண்டிலொரு பங்கு எரிபொருளை இதுவெளியால இருந்துதான் பெற்றுக்கொள்ளவேண்டி இருந்திச்சிது. நாட்டின்ரை அத்தியாவசிய தேவை ஒண்டுக்காய் இவ்வளவு தூரம் அடுத்த நாடுகளில தங்கியிருக்கக்கூடாதெண்டு யோசிச்சிட்டு, அணுமின்-உற்பத்தி நிலையங்களைத் திறந்திச்சினம். இண்டைக்கு 75 வீதமான மின்சாரம் அதிலையிருந்துதான் பெறப்படுகிது. அமெரிக்காவுக்கு அடுத்ததாய் அணுமின்னை உற்பத்தி செய்யிற நாடும் இதுதான். அப்பிடிப்போகுது பாருங்கோ உலகம்.

சரி அவங்களைப் பற்றின கதையைவிடுவம். எங்கட ஆக்களைப்பற்றிப் பார்ப்போம். குளிரோ, வெயிலோ வேலை, பள்ளிக்கூடம் எண்டு எல்லாரும் ஓடுப்பட்டுக்கொண்டு திரிவினம். நான் பெல்ஜியத்தில பாதையைத்துலைய விட்டுப்போட்டு கஷ்ரப்பட்ட நிலைமை இஞ்சை வராது. ஏனெண்டால் லா சப்பல் பக்கத்தில ஆரைக்கண்டாலும் அது எங்கட தமிழ்ச்சனமாய்த்தான் இருக்கும் எண்டிற அளவுக்கு ஆக்கள். இன்னுமொரு யதார்த்தம் : 'முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்' எண்டொரு பழமொழி இருக்கெல்லோ. அதுக்கேத்த மாதிரி இஞ்சை எல்லா வாகனத்திலையும் தவறாமல் ஒரு உரஞ்சல் எண்டாலும் இருக்கும். என்னண்டெண்டு கேட்கிறீயளோ ? நான் பார்த்த மற்ற நாடுகளிலை எல்லாரும் போக்குவரத்துச் சட்டங்களை மதிச்சு ஒழுங்காய், நிதானமாய் ஓடுவினம். அவையின்ரை கார் எல்லாம் 10,15 வருசம் செண்டாலும் அந்தமாதிரி பார்க்கிறதுக்கு புதுசு மாதிரித்தெரியும். ஆனால், பிரான்சில எல்லாரும் நான் முந்தி, நீ முந்தி எண்டு போய்விடப் பார்க்கிறதால எல்லாரும் ஏதோ ஒரு பக்கம் கட்டாயம் இடி வாங்கியிருப்பினம். 'அப்பு ! பிரான்ஸில புதுக்கார் வாங்கிறது வீண். வேற நாடுகளிலை இருந்து வாற எங்கட ஆக்களும் ஞாபகக்கையெழுத்து மாதிரி லைற்றா ஒரு இடி வாங்காமல் போறேல்லை', எண்டு தம்பி ஒருத்தர் எனக்கு விளக்கினார். 'உது தம்பி முந்தியே உப்பிடித்தானோ ? இல்லாட்டி எங்கட ஆக்கள் வந்துதான் நிலைமை மாறிட்டிதோ ? ஏனெண்டால் அவசரமாய் தான்மட்டும் முன்னால போகோணும் எண்டு நினைச்சு, ஒருத்தரையுமே ஒழுங்காய்ப்போக விடாத உந்தப்புத்தி எங்கட நாட்டு வாகனக்காரர்களுடையதெல்லோ !'. இஞ்சைத்தை நெடுஞ்சாலையைப் பற்றியும் ஒண்டு சொல்லோணும். இதுவரைக்கும் பார்த்த மற்றநாடுகளில வருசத்துக்கு வீதி வரி கட்டிணாச்சரி. ஆனால் அந்த வரிக்கிள்ளை வெளிநாட்டு வாகனங்கள் வராதெல்லோ. அவையளிட்டை இருந்தும் அறவிடுகிறதுக்காக நாட்டு எல்லையிலையே வைச்சு ஸ்ரிக்கர் ஒண்டு வேண்டி ஒட்டோணும். ஒருக்கால் வாங்கினால் அது ஒரு வருசம் முழுக்கச் செல்லும். ஆனால் இங்கை பிரான்ஸில பாருங்கோ நெடுஞ்சாலையில போறதெண்டால் குறிப்பிட்ட' தூரத்துக்கொருக்கால் தடுப்பு-வாயில்கள் வரும். அதிலை வைச்சு வாகனத்தின்ரை நிறைக்கேற்ற மாதிரி காசைக் கட்டினால்தான் மேல பயணிக்க முடியும். இல்லை நான் திரும்பிப்போறன் எண்டும் வெளிக்கிடேலாது. ஏனெண்டால் அதெல்லாம் ஒருவழிப்பாதையள். ஆக நெடுஞ்சாலையில ஏறினால் காசு கட்டியே தீரவேணும். இந்தக் காசுகளை வைச்சுத்தான் வீதியளையும் கவனிக்கினம். கையை விட்டுக்காசுபோகுதே எண்டு கவலையாய் இருந்தாலும், நாங்கள் சுமக்காமல்விட்டால் வானத்தில இருந்தே விழப்போகுது வசதியான போக்குவரத்து !




உதெல்லாம் லூட்ஸ் (லூர்து) மாதா கோயிலுக்குப் போகேக்கிள்ளை நான் அறிஞ்ச விசயங்கள். அவையள் 'என்னமாதிரி கோயிலுக்கு போட்டுவருவோம், வாறீங்களோ ? ' எண்டு கேட்டிச்சினம். நான் அதுக்கு உடன கேட்ட கேள்வி 'பக்கத்திலையோ, தூரத்திலையோ?' எண்டதுதான். தூரத்திலையெண்டால் தானே நாட்டைப் பற்றி கனக்க பார்க்கலாம். அது ஸ்பெயின் எல்லையில இருக்கிது, சரியானதூரம் எண்டு பதில் கிடைக்க, வலு சந்தோசத்தில வெளிக்கிட்டுவந்திருக்கிறன். 'லூட்ஸ் இக்குக் கிட்ட வந்திட்டம். ஊவைல-அயி ஒண்டு இருந்தால் நல்லாயிருக்கும்' எண்டு சொன்ன ட்றைவர் தம்பி, கடையொண்டுக்கு முன்னால காரை நிற்பாட்டி அடுக்கி வைச்சிருந்த ஒரு பெட்டிக்கிள்ளை இருந்தொரு அயி இழுத்தெடுத்துக் கொண்டு வந்தார். அதிலை மாதா கோயிலையும், தங்கிறதுக்கான இடத்தையும் தேடிச்சினம். சே! என்ன பழக்கம். கடைக்காரன் ஏதோ ஒரு நம்பிக்கையிலதானே வெளியால வைச்சிருக்கிறார். அப்பிடியிருக்க காசு குடுக்காமல் எடுத்துக் கொண்டு வைச்சிருக்குதே உந்தப் பொடியன்! வந்த இடத்தில சொல்லிக் காட்டவும் ஒருமாதிரிக் கிடந்திச்சிது. இருந்தும் வேற ஒருநாட்டில வந்திருந்து கொண்டு நாங்கள் உப்பிடிச் செய்யக்கூடாது. மனம் கேட்காமல் 'தம்பி ! இடம் என்னமாதிரி கிட்டயோ? ஆ... நீர் அவசரத்தில அயி காசு கட்ட மறந்திட்டீர். எவ்வளவெண்டு சொல்லும் நான் கட்டிறன்', எண்டபடி பேர்ஸை எடுத்தன். 'இல்லை.... அது கசநந தான்! காசொண்டும் குடுக்கத்தேவையில்லை'. எட சுத்தினது போதாதெண்டு, நான் நாட்டுக்கு புதிசு எண்டதால எனக்கு இவர் புலுடா வேற விற்றார். 'அதென்னெண்டு தம்பி, சும்மா என்னண்டு குடுக்கிறது ! ஒவ்வொருத்தரும் உப்பிடி சும்மா தூக்கிக்கொண்டு போனால், பாவம் கடைக்காரருக்கு என்னண்டு கட்டுப்படியாகும் !', கேள்வியளால அவரைத துளைச்சன். நான் தன்னைச் சந்தேகப்படிறன் எண்டு அவருக்கு விளங்கீட்டிது, தன்னை இப்போதைக்கு ஒண்டும் கேட்காமல் நம்பச்சொன்னவர், இரவைக்கு றூம் எடுத்தாப் பிறகு எல்லாத்துக்கும் பதில் சொல்லிறன் எண்டு வாக்குத்தந்தார்.

இரவு ஆகிச்சிது. மறக்காமல் அவர் என்னட்டை வந்தார். 'அப்பு ! அப்போதை நான் றூம் எடுக்கிற அந்தரத்தில நிண்டதால உங்கட கேள்விக்கு பதில் சொல்லேலாமல் போயிட்டிது. மன்னிக்கோணும். உங்களுக்கு சுகத்துக்காக ஒரு உதாரணம் சொல்லிறன். நான் சித்திரை வருசத்துக்கு நாட்டில நிண்டிட்டு விடுமுறை முடிஞ்சு இப்ப 2 கிழமைக்கு முன்னால தான் வந்தனான்.

(22 ஆம் பக்கம் பார்க்க..)



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 09**

**பகுதி -45**



# முழுப்பனிக்குள் ஒரு தேடல்

**மொழியாக்கம் :- வி.பி.யோசப்**

"உங்களுக்கு நிறங்களின்ர பேர்கள எழுத்துக் கூட்டிச் சொல்ல ஏலும் எண்டா நானும் அப்பிடிச் செய்யவேணுமோ?" என்று கேட்டேன். "எனக்கு அதுகள சுருக்கமா குறிக்க வேணும் எண்டு விருப்பமா இருந்தா நான் அதுகள சுருக்கி எழுதலாம் எண்டு நீங்க நினைக்கயில்லையா?"

"ம்...ம்...ம்..." என்று இழுத்தவன், ".....ஓம்... அப்பிடி நினைக்கிறன்தான். ஆனா அதுகளுக்கு அப்பிடிச் செய்யவேண்டாம் எப்பவும் சரியான முறையில விஷயங்களச் செய்யுங்கோ எழுத்துக்கள் எல்லாத்தையும் எழுதுங்கோ சரியான முறையில அதைச் செய்யுங்கோ" "ஏன்?" என்று நான் கேள்வி யெழுப்பினேன்.டிப்ஸ் என்னைப் பார்த்தான். புன்னகை ஒன்று அவன் முகத்தில் விரிந்து கொண்டது.

"நான் சொல்லுறபடியால் அப்படிச் செய்யுங்கோ" என்றான்.

"அந்தக் காரணம் போதுமா?" நான் கேட்டேன்.

"ஓம் நீங்கள் உங்கட வழியில தான் செய்யவேணும் எண்டு நினைக்காவிட்டால் அது போதும்" என்றவன் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டான். மேசைக்கு கிட்டவாகச் சென்ற வன் களிமண் உருண்டைகள் இருந்த போத்தலுக்குள்ளிருந்து ஒரு உருண்டையை எடுத்து மேலே எறிந்து பிடித்து மீண்டும் போத்தலினுள் வைத்தான். கழிவுக் கூடைக்கு அருகே ஒரு படம் இருந்தது. அதை அவன் எடுத்து நன்றாகப் பார்த்தான். "எனக்கு இது வேணும்... நான் இந்தப் படத்த வெட்டி எடுக்கப் போறன். இந்த சின்ன உருவங்கள வெட்டி யெடுக்கப் போறன். எங்கே கத்தரிக் கோல்?" என்றான்.

நான் ஒரு கத்தரிக் கோலை அவனி டம் கொடுத்தேன்.அவன் படத்தை வெட்டி யெடுத்தான். பின்பு பொம்மை வீட்டை நோக்கி நடந்து சென்றான். "இங்க எனக்கு இண்டைக்கு ஒரு வேலை இருக்குது" என்று அறிவித்தான்.

"அப்பிடியோ?"

" ஓம்" என்றவன் மிக அவதானமாக பொம்மை வீட்டில் இருந்த எல்லாச் சுவர்க ளையும் கழற்றி அவற்றை மணல் பெட்டியை நோக்கிக் கொண்டுசென்றான். பின்பு ஒரு சவளை எடுத்து ஆழமான குழி ஒன்றைத் தோண்டி சுவர்களை அதில் புதைத்து விட்டான். பின்பு திரும்பவும் பொம்மை வீட்டை நோக்கிச் சென்ற அவன் உலோக சவள் ஒன்றை எடுத்து பொம்மை வீட்டின் கதவை பெயர்த்து எடுத்து, அதை மண்ணில் புதைத்து விட்டான். அவன் விரைவாகவும் செயல் திறனோடும் எதுவுமே பேசாமலும் முனைப்பாகவும் வேலை செய்தான். இந்த வேலையை முடித்ததும் அவன் என்னைப் பார்த்தான். "எல்லாச் சுவரின்ரயும், கதவின்ரயும் கதையை முடிச்சுப்போட்டன்" என்றான்.

"ஓம் நீங்கள் செய்ததை நான் பாத்தனான்" பின்பு கதவுக்கான இடத்தை கொண்டிருந்த ஆனால் கதவு இல்லாத அந்தச்சுவரை எடுத்து அதை மணலில் நாட்டி விட முயற்சி செய்தான். இறுதியிலே அந்த முயற்சியில் வெற்றியும் அடைந்தான். பின்பு ஒரு சிறிய காரை தெரிந்தெடுத்து மணலில் அங்குமிங்குமாக தள்ளி விளையாடினான். அவன் மணல் பெட்டியின் விளிம்பில் அமர்ந் திருந்தான். இசகுபிசகானதும், கட்டுப்படுத்த முடியாததுமான ஒரு குனிந்த நிலையில் அவன் அதில் இருந்தான். தான் இருக்கும் நிலையை அவன் ஆராய்ந்தான்.

"நான் முழுவதுமாக மணல் பெட்டியுக் குள்ள இறங்க வேணும் " என்றான். ஊர்ந்து மணல் பெட்டிக்குள் முழுமையாக இறங்கிய அவன் அதன் மையப் பகுதிக்குள் சென்று அமர்ந்து கொண்டு என்னைப் பார்த்துச் சிரித் தான். "இண்டைக்கு நான் மணலுக்க இறங் கிற்றன்" என்றவன் "கொஞ்சம் கொஞ்சமா நான் மணலுக்க இறங்கியிற்றன். போன முறைக்கு முந்தின முறை கொஞ்சம் இறங் கினன்... போனமுறை கொஞ்சம் இறங்கினன். இப்பவும் இறங்கியிருக்கிறன்"

"ஓம் அப்பிடித்தான்" என்று பதில் சொன்னேன்.

"இண்டைக்கு நீங்க முழுசா இறங்கி யிட்டீங்கள்"

"என்ர சப்பாத்துக்க மணல் போகுது ஆனபடியா நான் என்ர சப்பாத்துகள கழட்டப் போறன்" பிறகு ஒரு சப்பாத்தைக் கழற்றினான். பின் அந்தக் காலை மணலுக்குள் ஆழமாக செருகினான். பிறகு மணலில் குப்புறப் படுத்துக் கொண்டவன் தனது கன்னத்தை மணலில் தேய்த்துக் கொண்டான். பின்பு நாக்கை வெளியே நீட்டியவன் மணலை ருசி பார்த்தான். மணலை பற்களால் கடித்துப் பார்த்தான்.பிறகு என்னைப் பார்த்தான்.

"இந்த மணல் கரகரப்பாயிருக்கு.... கூரா இருக்குது.... ஆனா ஒரு சுவையும் இல்லை சுவையில்லாவிட்டா இப்பிடியா இருக் கும்?" என்று கேட்டான். ஒரு பிடி மண்ணை எடுத்து தலையின் மீது சொரிந்து கொண்டான். மணலை தலைமயிரோடு தேய்த்தான். பிறகு பெரிதாக சிரித்தான். திடீரென்று ஒரு காலை மேலே உயர்த்தினான். "இஞ்ச பாருங்கோ... என்ர காலுறையில ஒரு பீத்தல் இருக்குது பீத்தல் காலுறையை ஒரு காலில போட்டிருக் கிறன்" என்று உரக்கச் சொன்னான் 'ஓம் நான் கண்டுவிட்டேன்' என்றேன். மணலில் நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டான். அங்கு மிங்கு மாக நெளிந்தவன் கைகளால் மணலை வாரி தனக்கு மேல் குவித்துக் கொண்டான். அவனு டைய நகர்வுகள் இயல்பானவையாக, விரி வடைகின்றவையாக பதட்டமில்லாதவையாக இருந்தன. "சூப்பிப் போத்தல என்னட்டத் தாங்கோ" கட்டளை போல் அவன் குரல் ஒலித்தது. நான் அதை எடுத்து அவனிடம் கொடுத்தேன். " இதுதான் என்ர தொட்டில் எண்டு நினைச்சுக் கொள்ளப்போறன். பந்து போல சுருண்டு கொண்டு, இன்னொருக்கா குழந்தையாகி விட்டது போல விளையாடப் போறன்" என்று சொல்லிக்கொண்டே சூப்பிப் போத்தலை திருப்தியுடன்



உறிஞ்சினான். திடீரென்று எழுந்து உட்கார்ந்தவன் என்னைப் பார்த்துச் சிரித்தான்.

"நான் அத உங்களுக்கு பாடிக்காட்ட வேணும்" என்று அறிவித்தான்.

"நான் பாட்டு ஒன்று பாடிக்காட்டப் போறன்.... உங்களுக்கு மட்டுந்தான் பாடிக்காட்டு வன்... சரியா?" என்றான்.

"சரி" என்றேன் நான்.

"சப்பாணிகொட்டி அமர்ந்து கொண்ட அவன் பொறுங்கோ... நான் யோசிக்கிறேன்...." என்றான்.

"சரி. உங்களுக்கு யோசிக்க வேணும் போல இருந்தா யோசியுங்கோ" என்று பதில் சொன்னேன்.

அவன் சிரித்தான். "நான் பாடப் பாட சொல்லுகள இயற்றிக் கொள்ளுவன்"

"சரி"

ஆழமான மூச்சொன்றை இழுத்து விட்டான். பின்பு பாடத் தொடங்கினான். இசை யையும் அவனே அமைத்துக்கொள்வதாகத் தோன்றியது. அவனது குரல் தெளிவாக ஒலித்தது. சந்தத்தோடு இனிமையாக ஒலித்தது. அந்த இசை அவன் இயற்றிய சொற்களுக்கு வேறுபட்டு முனைப்பைக் கொடுத்தது. அவனது கைகள் இரண்டையும் கோர்த்துப் பிடித்துக் கொண்டிருந்தான். முகத்தின் விளையாட் டுத்தனம் தெரியவில்லை. தேவாலய பாடகர் குழாமிலுள்ள ஒருவனாக அவன் தோற்ற மளித்தான். ஆனால் அவனது வாயிலிருந்து வந்த வார்த்தைகள் பாடகர் குழாம்பைய னுடையதாக இருக்கவில்லை.

(தொடரும்)

---


# செஞ்சிலுவை செய்தி

**கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பெயருக்குரியவரை அடையாளம் காட்டக்கூடிய எவராவது இருப்பின் அவரது தங்குமிட விபரங்களை ஐ.சி.ஆர்.சி யின் கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் புதுக்குடியிருப்பு அலுவலகங்களில் தெரியப்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

| | |
|---|---|
| *பெயர்* | *:- அந்தோனிப்பிள்ளை றெனெய்* |
| *பிறந்த திகதியும் இடமும்* | *:- 25.மார்கழி1956 மிருசுவில், யாழ்ப்பாணம்.* |
| *தந்தையின் பெயர்* | *:- மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை* |
| *தாயின் பெயர்* | *:- மேரி மார்கறெற் அந்தோனிப்பிள்ளை* |
| *மகனின்பெயர்* | *:- பேனாட்றெனெய் அந்தோனிப்பிள்ளை* |

*இறுதியாக வசித்தஇடம் (2001ஆம் ஆண்டில்): - ஸ்கந்தபுரம்-கிளிநொச்சி.*

**உங்கள் ஆதரவுக்கு நன்றிகள்**

இப்படிக்கு
றசெல் பேண்காட்
உப பேராயத்தலைவர்
ஐ.சி.ஆர்.சி-கிளிநொச்சி.

(6089)



(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கை வருசத்துக்கு எல்லாத்தினசரிகளும் சிறப்பு மலர் வெளியிட்டிருந்தவை. ஒண்டு விடாமல் எல்லா தமிழ்த்தின சரியளும் 20,30 பக்கங்கள் மேலதிகமாய் கலரில வெளியிட்டிருந்தவை. ஆனால், அந்த இதழும் வழமையான காசுக்குத் தானே வித்தவை. அது என்னண்டு?' 'இதென்ன தம்பி! சின்னப்பிள் ளைக் கேள்வி. அதெல் லாம் மேலதிகமான விளம்பரதாரர்கள் தங்கட விளம்பரங்க ளைப் பிரசு ரிக்கிறதுக்குக் கொடுக்கி றதை வைச்சுப்பார்த்தால் நட்டம் வராது', அவற்றை சில்லறைக்கேள் விக்கு சிரிப்போட பதில் சொன்னன். 'நீங்கள் சொன்னது சரி. ஆனால் அப்பிடி 50,60 விளம்பரங்களை 20 பக்கங்களுக் குள்ளை போட்டு நிரப்பிற புத்தாண்டுச் சிறப்பின்ரை பெறுமதி என்ன? எத்தினை வாசகர்கள் அது களை அவதானிச்சுப்பார்ப்பினம். 99வீதமான ஆக்கள் விளம்பரம் குவிக்கப்பட்ட பக்கங்களை அப்பிடியே தூக்கிப் புரட்டுவினம். பார்த்து முடிஞ்ச உடன குப்பைத்தொட்டி தான். ஆக விளம்பரதாரருக்கும் லாபமில்லை, வாசகருக்கும் லாபமில்லை. அந்த மேலதிகப்பக்கங்களுக்கு சராசரியா ஒவ்வொருத்தரும் ஒதுக்கிறநேரம் வலுவலு குறைவு. இப்பை இந்த அயி ஐப் பாருங்கோ! இதைச் சுத்தி விளம்ப ரங்கள் நிறைஞ்சிருக்கு. இந்த இடத் துக்கு வர்ற ஆக்களுக்கு உதவியாய் இப்பிடியொண்டை இலவசமாக அடிச்சு விடிறதோட, அதைச்சுத்தியி ருக்கிற விளம்பரதாரிகளின்ரை இருப் பிடங்கள் எங்கெங்கை இருக்கெண்டு வரைபடத்தில குறிப்பிட்டிருக்கினம். ஹோட்டலோ, கடை, றெஸ்ரோ றன் ரோ, வங்கியோ எதெண்டாலும் இதி லை சுகமாய் கண்டுபிடிச்சுப் போயிட லாம். அதுகள் தவிர நகரத்தின்ரை வழமையான முக்கிய தகவல்களும் இதிலை இருக்கிது. இது எவ்வளவு பிரயோசனம் ஆனது !

எத்தினை தரம் இதை நாங்கள் பார்ப்போம், பாதுகாத்து வைப்போம் ! இப்பை எங்கட நாட் டுக்கு வாங்கோ ! சுற்றுலா நகரங்கள் எண்டிறது இப்போதை நிலைமைக்கு சாத்தியமில்லைத் தான். ஆனால், எங்கட தாயக வரைபடம் ஒண்டை யோ, அந்தந்த மாவட்டங்களின்ரை படங்களையோ அல்லாட்டி எங்கட சுற்றுப்புறச்சூழல் குறிச்ச சில தரவு களுடனான போஸ்ரர்களையோ, உலகப்படத்தையோ, சுற்றிவர விளம் பரங்களோடை, கொஞ்சம் தரம் கூடிய தாளில அச்சடிச்சு, இலவச இணைப் பாய் கொடுத்தால் எவ்வளவுக்கு பயன்பாடாய் இருக்கும். எல்லாரும் கனகாலத்துக்கு வைச்சும் பாதுகாப் பினம். விளம்பரதாரர்கள் சொல்ல விரும்பிற செய்தியளும் கூடக்காலத் துக்கு நிலைச்சு நிற்கும். அதால அவையின்ரை விளம்பர நோக்கமும் நிறைவுறும். நான் சொல்ல வாறது விளங்கிதா உங்களுக்கு ? எல்லாத் தரப்பும் உருப்படியாய் பயனடையிற ஒரு வடிவம் தான் இந்த இலவச அயி ! என்னவோ தெரியேல்லை. . இல்லை என்னண்டு தெரியிது . . அண்டைக்கு இரவு முழுக்க எனக்கு நித்திரை இல்லை. ஏன் உப்பிடி நாங்கள் செய்யிறேல்லை. இனிமேல் தானும் நான் சொன்னாப்பிறகு நிலைமை மாறுமோ ? இரவிரவாய் யோசிச்சன். லூட்ஸ் மாதாகோயி லுக்கு நடந்து போறவழியில இரண்டு பக்கமும் எக்கச்சக்கமாய் கடையள். எல்லாத்திலையும் மாதாவையும், அந்த ஊரையும் ஞாபகப்படுத்தக் கூடிய மாதிரி கைவினைப்பொருட்கள் நிரம்பி வழிஞ்சிது. மரச்சிலையள், திறப்புக்கோர்வையள், சுவர் விரிப்பு கள், கற்சிலையள், படங்கள் எண்டு எத்தினையோ சாமான்கள். எங்கட கோயில், தேவாலயம் வழியிலையும் உப்பிடிச்செய்தால் உள்ளூர் சிற்பி யள், ஓவியக் கலைஞர்கள், கைவி ணைஞர்கள் எண்டு எத்தினையோ பேர் எங்கட சுதேசியக்கலைகளையும், அடை யாளங்களையும் பேணலா மெல்லோ! ஒருவகையில இது ஒரு வேலை வாய்ப்பும் கூட! அதை விட்டிட்டு அஜித்தையும், அனுமாரை யும் அச்சடிச்சு வித்து எத்தினை நாளைக்கு காலத்தை வீணாக் கப்போறோம் நாங் கள்? சீனாக்காரங் களைப் பாருங்கோ! இந்தியாவுக்கு பிளாஸ் ரிக்கில பிள்ளையார் சுருவம் செய்து அனுப்பிறாங்கள். நாங்கள் எங்கட தேவையளையே பூர்த்தி செய்யிறதுக்குப் பின்னடிச்சுக் கொண்டிருக்கிறம். கொஞ்சநா ளைக்கு நாடாக்கள் வெட்டிற வைப வங்களை நிற்பாட்டிப்போட்டு, எல்லாருமாய் நாட்டைக்கட்டி யெழுப்ப முழுமூச்சாய் பாடுபட்டால் எப்பிடியி ருக்கும்! என்ன நினைக்கிறீங்கள்?

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



*பாவலா!*

*எமது தமிழ்ச்சமூகத்தில் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் சொல்பவர்களை காணவேயில்லையே?*

*பிரசாந்,*
*கிளிநொச்சி.*

அறிவுபூர்வமான வாசகர்களே ஆக்கபூர்வமான விமர்சகர்களாக இருக்கமுடியும். இப்போதுள்ளவர்களில் பெரும்பாலோர் விமர்சனம் சொல்லிகளல்ல விமர்சனப் பல்லிகளே...!

*பாவலா!*

*ஒரு படைப்பாளி எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்?*

*சிவப்பிரியா,*
*ஸ்கந்தபுரம்.*

பிரம்மாவாக இருக்க வேண்டும் என்ற அவசியமேயில்லை. சக மனிதனை மதித்து, நேசிக்கும் சாதாரண மனிதனாக இருந்தாலே போதும்.

*பாவலா!*

*பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் சிறிலங்கா அரசு இதிலும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி நடப்பது போன்று செயற்படுமா?*

*தயாளினி,*
*வவுனியா.*

அதிலென்ன சந்தேகம்? பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சித் தலைமைகளின் சுயமே அது தான்...!

*பாவலா!*

*ஜெயலலிதா மீண்டும் பழைய பல்லவியை தொடங்கி விட்டார்? ஏன் தேர்தல் ஏதும் வரப்போகின்றதா?*

*சர்மியா,*
*யாழ்ப்பாணம்.*

மாரிகாலத் தவளைகளும் தேர்தல்கால அரசியல்வாதிகளும் ஒரேமாதிரித்தான்... ஜெயலலிதா ஒரு மண்டுகத் தவளை போன்றவர். சற்று அதிகப் படியாவும் உரத்தும கத்துவார் அவ்வளவுதான்.

*பாவலா!*

*நாட்டை காக்கும் தேசப்பற்றாளர் இயக்கத்தின் தேசப்பற்று எப்படியுள்ளது.*

*சுகிர்தா,*
*கிளிநொச்சி.*

தேசத்தை நாசம் செய்து நம்பிய மக்களுக்கு மோசம் செய்வதாக உள்ளது.

*பாவலா!*

*எனக்கு அரசியலில் இறங்க ஆசையாக இருக்கின்றது. அதற்கு முதலில் என்ன செய்ய வேண்டும்?*

*வே.அகிலன்,*
*தாவடி.*

நீங்கள் அரசியலில் குதித்து மூழ்கவிரும்பவில்லை, இறங்கி நீந்தவே விரும்புகின்றீர்கள் போலுள்ளது அப்படித்தானே...! அதற்கு முதலில் குதிக்கத்தான் வேண்டும். அரசியல் அலைக்குள் சிக்கி மூழ்காமல் தப்பினால் நீந்திக் கரையேறலாம்....!

*பாவலா!*

*நடந்து முடிந்த யுத்தம் பற்றி என்ன நினைக்கின்றீர். இந்தச் சமாதான காலத்தைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*கேதீஸ்வரன்,*
*மல்லாவி.*

யுத்தம் சமாதானத்தைப் பற்றி அரசை யோசிக்கவைத்தது. சமாதானம் மீண்டும் யுத்தம் குறித்து திட்டமிடவைக்கிறது அவ்வளவு தான்.

*பாவலா!*

*சிவராமின் கொலைமூலம் கொலையாளிகள் எதனை சாதிக்கப்போகின்றார்கள்?*

*விக்கினா,*
*செல்வாநகர்.*

தாங்கள் படுகோழைகள், முட்டாள்கள் என்பதை மட்டுமல்ல ஈனப்பிறப்புக்கள் என்பதையும் நிரூபித்து கொண்டுள்ளார்கள். இதுவே அவர்கள் சாதித்த சாதனை.

*பாவலா!*

*மாமனிதர் சிவராமின் கொலைக்கு அரசுக்கும், அதன் கூலிப்படைகளுக்கும் தொடர்பு உண்டு என கூறுகிறார்கள் நீர் என்ன கூறுகின்றீர்?*

*சுகந்தன்,*
*கிளிநொச்சி.*

மாமனிதர்களைக் குறிவைத்துக் கொல்லும் கீழ்த்தர மனவக்கிரம் அரசுக்கும் கூலிப்படைகளுக்கும் மட்டுமேயுண்டு. அதனைக் கடந்தகால சம்பவங்கள் நிரூபித்தேயுள்ளன.

*பாவலா!*

*தமிழக முதலமைச்சர் ஈழத்தமிழர் விடயத்தில் திருந்தவே மாட்டாரா?*

*பத்மசிறி,*
*புதுக்குடியிருப்பு.*

வேறு எந்த விடயத்தில் திருந்தியிருக்கிறார் இதில் திருந்துவதற்கு?

*பாவலா!*

*சந்திரிகாவின் ஆட்சியில் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இவ்வாறு போனால் பாமர மக்களின் நிலை என்னவாகப்போகிறது?*

*அ.அஜந்தன்,*
*முள்ளிவாய்க்கால்.*

வரம்புயர நீருயரும் ஆனால் விலைவாசியுயர மக்களின் வாழ்க்கை நிலை தாழும் அவ்வளவு தான். அன்றைய அரசரை 'வரப்புயர' என ஔவை வாழ்த்தியதாகக் கூறுவர். இன்றைய ஆட்சியாளரை 'விலைவாசியுயர' என சபிப்பதை தவிர வேறு வழியில்லை.

*பாவலா!*

*போலிப் பொருட்களுக்கு விளம்பரம் செய்பவர்களை என்னசெய்யலாம்?*

*நிரேதிகா,*
*மல்லாவி.*

போலிக்கு விளம்பரம் கொடுப்பவர்கள் என அவர்களை விளம்பரப்படுத்தலாம்.



"ஆனையிறவைப்பிடிச்சும் அஞ்சுவருசமாப்போச்சு. ஆனாத் தடைமுகாம் பிரச்சினை முடியிற பாடாக் காணேல்ல"

"பிரச்சினை என்னண்டப்பா முடியிற எண்டைக்கு எங்கட மண்ணுக்கால உவங்கள் வெளியால போறாங்களோ அண்டைக்குத்தான் முடியும்"

"இப்பயிப்ப யாழ்ப்பாணத்து ஆமிக்காரருக்கு ஒழுங்காப் பேதி குடுத்துத்தான் வச்சிருக்கிறாங்கள்"

"சும்மாயில்ல கையில துவக்கில்லத்தான் பள்ளிக்கூடப் பொடியள் கும்பலாவாறாங்களெண்டாலே கெடிக்கலங்குது"

"அண்டைக்கு ஒரிடத்தில பெடியள் கலாட்டா செய்ய ஆமிக்காறன் ஓடிவந்தானாம்..."

"ஏன் அடிக்கவோ..."

"இல்லையடாப்பா ஓடிவந்தவன் கொட்டிருலுக்கு நெருப்பு வைக்கப் போறாங்களெண்டு நினைச்சுக்கொண்டு வந்தவன் போல. பொடியளட்ட வந்து சொன்னானாம் தன்ர கட்டில் உள்ளுக்க கிடக்கு அதை எடுத்து வெளியால போட்டிட்டு நெருப்பு வைக்கச்சொல்லி"

"அடக்கடவுளே, இந்தியனாமி மாதிரி இவங்களுக்கும் 'ஆடர்' வல்லையோ அடிக்க"

சும்மாவிடு! 'ஆடர்' வராமயோ போறவாற சனத்தை வாகனத்தால தட்டிப்போட்டுப் போறாங்கள். எல்லாம் ஒரு செற்றப்தான்"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –118




நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினை வுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–118

.......................................................................
.......................................................................
.......................................................................
.......................................................................

பெயர் : ....................................................... **ஈழநாதம்**
முகவரி : ....................................................... யாழ்சாலை,
....................................................... கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –117



**த.கோகுலன்,**
**இல:-169,**
**சேவிஸ் வீதி,**
**கனகாம்பிகைக்குளம்.**

### பரிசுக்குரிய வரிகள்

*வளம் கொளிக்கும் எம் கடலே! அன்று நீ*
*ஏன் பொங்கியெழுந்து எம் கரையோரஉறவுகளை*
*அழித்தாய் அதனால்... நாங்கள் இன்று*
*கரைதனில் அநாதையாய் உள்ளோம்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*ஆர்ப்பரிக்கும் அலை கடலே*
*பொங்கி எழுந்து விடாதே*
*மக்களின் துயர்துடைக்கும் எம்மை*
*அடித்துச் சென்று விடாதே.*

சி.சஜிதன்,
புளியங்குளம்.

*பன்னாட்டு உதவிகள், சுனாமி நிவாரணம்*
*கண்ணாடி இழைப்படகுகள் தென்கரையில் உலாவர*
*குடைசாய்ந்த படகுகள் வடகரையில் வாடிடும்*
*ஈழவிடியலில் மீண்டும் துளிர்க்கும் வசந்தம்.*

திருமதி ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*கடலன்னை மடியிலே படகிலே பவனித்து*
*படகோட்டி வளம் சேர்த்த தமிழா-இன்று*
*உன் வரவுக்காய் படகுகள் காத்திருக்கின்றன.*
*தமிழ் வீரம் குலை(ற) யாது உறுதியுடன் புறப்படு.*

சு.செல்வி,
பரந்தன்.

*மலை போல பல கப்பல்கள் வந்தாலும்*
*வலை வீசி நாம் தொழில் செய்யும்*
*பாய் மரப் படகுகள் போல்*
*விலை கூடிய அக்கப்பல்கள் வருமா?*

தெ.சதீஸ்பாபு,
கைதடி.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்
அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

Super Splendor

Breakthrough 3 Year Warranty*

# 09-05-2005 முதல் புதிய அறிமுகம்

Super Splendor

சிறப்பம்சம்
Self Start
Disc Brake

Hero Honda World No. 1 Two-Wheeler Company

STAFFORD MOTOR CO-LTD இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்



உங்கள் விருப்பு வர்ணங்களுக்கு முந்துங்கள்!

## இரத்தினகோபால்ஸ்

இல:63,65,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 6185, 0777-340056

## என்.எஸ்.இரத்தினம் & சகோதரர்கள்

இல:06, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா. தொ.பே:024-222 1237

(சி-11749)





# GREEN PALACE EMPORIUM

யாழ்நகரில்....
என்றும் மலிவு விலையில்
நிறைந்த ரகங்கள்
நிகரில்லா தரங்கள்

## கிறீன் பலஸ் எம்போறியம்

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி,
திருநெல்வேலி.



(சி-11748)





# குமரகுரு

உங்கள் இன்றைய தெரிவுக்கு...

புடைவை
அழகுப்பொருள் வாணிபம்



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

(சி-11747)



# பப்லிக் பீடி கூட்டு வியாபாரம்

## வெற்றிடம்

### விற்பனை முகவர் (கிளிநொச்சி,முல்லைத்தீவு பிரதேசங்களுக்கு)

எமது நிறுவனத்தில் மேற்படி விற்பனை முகவர் வெற்றிடங்கள் பல உள்ளன. இவ்வெற்றிடங்களுக்கு நிரப்புவதற்கு கீழ்வரும் தகுதி உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வங்கி வைப்புப்பணம்
- பண்டகசாலை வசதி
- போக்குவரத்து வசதி
- தொலைத்தொடர்பு வசதி

மேலே உள்ள தகுதி கொண்டவர்கள் தெரிவு செய்யப்படின் அவர்களுக்கு தரகுக்கூலியும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

### விற்பனை பிரதிநிதி வெற்றிடம் (கிளிநொச்சி,முல்லைத்தீவு பிரதேசம்)

கீழ்வரும் தகுதி உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி பெற்றிருத்தல்.
தமிழில் சரளமாக உரையாடக்கூடியவராக இருத்தலுடன்
ஆங்கில,சிங்கள மொழி சம்பந்தமான அறிவு மேலதிக தகுதியாகக்கருதப்படும்.
மேற்படி பிரதேசங்கள் சம்பந்தமாக தெரிந்திருத்தல் அப்பிரதேசத்தில் விற்பனைப்பிரதிநிதியாக வேலை பார்த்திருத்தல்
மேலதிக தகுதியாகக்கருதப்படும்.

### தெரிவு செய்யப்படுபவர்களுக்கு கீழே உள்ள வசதிகள் கொடுக்கப்படும்.

- மாதாந்தக்கொடுப்பனவு
- தரகுக்கூலி-கொடுப்பனவுகள்
- வைத்திய வசதிகள்
- போக்குவரத்துக் கொடுப்பனவு

அனைத்து விண்ணப்பப்பத்திரங்களும்
**பப்லிக் பீடி கூட்டு வியாபாரம் பிலாடுவ, வரகாப்பொல.**
என்ற முகவரிக்கு அல்லது 035-226 7325, 077-3120544
இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு விசாரிக்கலாம்.
விண்ணப்பங்கள் 15 நாட்களுக்குள் அனுப்பப்படவேண்டும்.

குறிப்பு: விண்ணப்பங்கள் யாவும் ஆங்கிலத்தில் அனுப்பவும்.

(சி-11862)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது